விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 296 புரட்டாதி 02ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 18 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

அமைச்சரின் வாக்குறுதி மீறப்பட்டதால்

## சட்டவிரோத மீன்பிடியை எதிர்த்து முல்லையில் மீண்டும் போராட்டம்

கறுப்புத் துணியால் வாய்களை மூடி நேற்று எதிர்ப்பு



யாழ்ப்பாணம், செப்ரெம்பர்18

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தித் தொழில் செய்யத் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளதைக் கண்டித்து நேற்று முல்லைத்தீவு மீனவர்கள் வாயில் கருப்புத் துணி கட்டி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

>> 25



## தமிழீழத் தேசிய கீதத்துடன் பொங்குதமிழ்த் தூபி திறப்பு

யாழ்ப்பாணம், செப்.18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று பொங்குதமிழ் நினைவுத் தூபி திறக்கப்பட்டது. திரை நீக்கப்பட்டதும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியிடப்பட்ட தேசிய கீதமான "ஏறுது பார் கொடி ஏறுதுபார்" என்கிற பாடல் ஒலிபரப்பப்

>> 23

## 134 பேருக்கு நேற்று அரச நியமனங்கள்

கடிதங்களை வழங்கினார் ஆளுநர்

யாழ்ப்பாணம், செப்.18

வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தெரிவானவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று வடக்கு மாகாண ஆளுநரால்

>> 25

## முல்லை இளைஞர் வாளுடன் கைது

முல்லைத்தீவு, செப்.18

முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் வாளு

>> 23

## ஈழத்தில் தமிழ் வளர்வதை பார்க்கையில் பெருமையே!

பல்கலைக்கழகங்களின் தமிழ் விழாவில் கலைஞர் புகழேந்தி கருத்து

>> 25

## கடலுக்கு சென்ற மீனவர் மாயம்

தலைமன்னார், செப்.18

தலைமன்னார், பியர் பிரதேசத்தில் இருந்து மீன்பிடிக்ககச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். அவரைத் தேடும் பணியில் அந்தப் பகுதி மீனவர்களும், கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த இ.சிறிகாந் (வயது-30) என்பவரே காணாமல் போனார் என்று

>> 25

## முல்லையில் தொடர்கிறது மகாவலித் திட்ட ஆதிக்கம்

மக்களின் பூர்வீகக் காணிகளில் தொழில் செய்ய முடியா நிலை

முல்லைத்தீவு, செப்.18

முல்லைத்தீவு, அக்கரை வெளியில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளுக்கு உரிமை கோரியுள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, அந்தக் காணிகளில் எந்த நடவடிக்கை

>> 25

## இ.போ. ச. இன்று வேலைநிறுத்தம்

வடக்கில் மட்டும் நடக்கும்

வவுனியா, செப்.18

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச பேருந்துச் சாரதிகள், நடத்துநர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடு

>> 25

## மெத்தைக்குள் மறைத்து கடத்திய கஞ்சா சிக்கியது

கிளிநொச்சியில் நேற்றுச் சம்பவம்



கிளிநொச்சி, செப்.18

சூட்சுமமான முறையில் மெத்தைக்குள் மறைத்துக் கடத்தப்பட்ட கஞ்சா கிளிநொச்சிப் பொலிஸாரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டது. அதேசமயம் முச்சக்கர வண்டி

>> 25



# அரசமைப்பு விடயத்தில் அரசை நம்புவது கடினம்

## சாள்ஸ் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.18

பயங்கரவாதத்தடைச்சட்டத்துக்குப்பதிலாகக்கொண்டுவரும்புதியசட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதலைப் பெற முடியாத அரசு, புதிய அரசமைப்புக்கான ஆதரவைத் திரட்டி அரசமைப்பை நிறைவேற்று மா என்ற சந்தேகம் எழுகின்றது.



இவ்வாறுதெரிவித்துள்ளார்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்சாள்ஸ்நிர்மலநாதன். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

நாட்டில்பயங்கரவாதம்அழிக்கப்பட்டுள்ளது என்றும், அதை நாமே ஒழித்தோம் என்றும் அரசியல் தலைவர்கள் முட்டி மோதுகின்றனர். பயங்கரவாதத்தை ஒழித்தபோது இராணுவத் தளபதியாக இருந்தேன் என்று கூறுபவரும் அமைச்சராக உள்ளார்.

போரைக் காரணம் காட்டி நீடிக்கப்பட்டிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குங்கள்என்றுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பி னரும், பன்னாடுகளும் கோருகின்றபோதும்அதைநீக்காதுஅரசுஇழுத்தடிப்புச்செய்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகப்புதிய சட்டம்நடைமுறைப்படுத்தப்படும்என்றுகூறிமுன்வைக்கப்பட்டசட்ட வரைபுக்கு அமைச்சரவை அனுமதியைப்பெற முடியாத நிலைமையே உள்ளது. ஆளும் கட்சி அமைச்சர்கள் உள்ள அமைச்சரவையில்கூட அனுமதிபெறமுடியாதுஎன்றால்அரசமைப்புத்திருத்தத்துக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைபெற்றுஅரசுநிறைவேற்றும் என்று எவ்வாறு நம்ப முடியும். என்றார்.

(ற-105)

# அரசமைப்புத் தொடர்பான முடிவு சபாநாயகருக்கு அனுப்பப்படும்

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு, செப்.18

20ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான தமது நிலைப்பாட்டு சபாநாயகருக்கு அனுப்பப்படும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மக்கள்விடுதலைமுன்னணிநாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 20 ஆவது அரசமைப்புத்திருத்தச்சட்ட வரைபை மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்ற வேண்டும்எனஉத்திரவிடக்கோரி கூட்டுஎதிர்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். அந்தமனுவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட 16 மனுக்களை கடந்த நான்கு நாள்களாக உயர்நீதிமன்றம் பரிசீலனை செய்திருந்தது. அது தொடர்பிலானதமதுநிலைப்பாடுசபாநாயகருக்கு அறிவிக்கப்படும் என்று உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

(ற)

# பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமின் அரைவாசியை விடுவிக்க இணக்கம்

வவுனியா, செப்.18

வவுனியா, பூந்தோட்டத்தில்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு சபை மண்டபத்தின் அரைவாசியை விடுவிப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

கூட்டுறவுச் சபை மண்டபத்தில் தற்போது படையினர் மறுவாழ்வு முகாம் நடத்துகின்றனர். அங்கு சொற்ப அளவினரே தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதனால் கூட்டுறவுச் சபை மண்டபத்தைமீளக்கையளிக்கவேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டு வந்தது.

நேற்றுமாவட்டச்செயலாளர், புனர்வாழ்வுஅமைச்சின்மேலதிகபணிப்பாளர்நாயகம், மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்திஉதவிஆணையாளர், கூட்டுறவாளர்கள் நேரில் சென்று அங்கு ஆய்வில் ஈடுபட்டனர்.

3 ஏக்கர் விஸ்தீரணத்தில் 4 பெரிய கட்டடங்கள் கொண்ட தொகுதியில் அரைவாசியை இரண்டுகட்டடங்களுடன் வழங்குவது என்றும், பொருத்தமான இடம் கிடைத்ததும் ஏனையகட்டடங்களும்விடுவிக்கப்படும்என்றும்தீர்மானிக்கப்பட்டது. எந்தக்கட்டடங்கள்விடுவிக்கப்படும் என்பது தொடர்பில் கொழும்பு சென்று கலந்துரையாடிய பின்னர் தெரிவிக்கப்படும் என்று புனர்வாழ்வுஅமைச்சின்மேலதிகபணிப்பாளர் நாயகம் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-105)

# அடிபாட்டில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

கிளிநொச்சி, செப்.18

மதுபானசாலையில்ஏற்பட்டதகராறில் அடிகாயங்களுக்கு இலக்காகி கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நபர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

கிளிநொச்சியைச்சேர்ந்ததேவசிங்கம் தீரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் உள்ளமதுபானசாலையில் கடந்த புதன் கிழமை இருவருக்கு இடையே தகராறு ஏற்பட்டது. அதில் ஒருவருக்குக் கத்துக் குத்தும் நடந்தது. கத்தியால் குத்தியவரை அங்கிருந்த இருவர் சரமாரியாகத் தாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

கத்திக் காயத்துக்கு இலக்கானவரும், அடிகாயத்துக்குஇலக்கானவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

(உ-21,35)

# குளவிகளின் தாக்குதலில் நால்வர் காயம்

வவுனியா, செப்.18

வவுனியாவில் குளவிகளின் கொட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் நால்வர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, கணேசபுரம் காத்தான்கோட்டம்பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் குடிநீரைப்பெறுவதற்காக ஒன்றுகூடிய பொதுமக்களுக்கே குளவிகள் கொட்டின. பொதுமக்கள் ஒன்றுகூடிய இடத்துக்கு அருகில் நின்ற மரத்தில் இருந்த குளவிக்கூடு கலைந்து அதிலிருந்துவெளிவந்தகுளவிகள்அங்கிருந்தஅனைவரையும் துரத்தித் துரத்தித் தாக்கின என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால்பெண்கள், குழந்தைகள்உட்பட பலர்காயமடைந்தனர். அவர்களில் நால்வர் முச்சக்கரவண்டிகளின் மூலம் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். காயமடைந்த சிலர் சிகிச்சைக்காகச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது .

(21,110)

# கத்தி வெட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் ஒருவர் மருத்துவமனையில்



வவுனியா, செப்.18

வெட்டுக் காயத்துக்கு இலக்காகிய நிலையில் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் நேற்றுக் காலை இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் நபர் ஒருவர் காட்டுக்கத்தியால் வெட்டியதிலேயே குறித்த நபர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த சாந்தன் (வயது 27) என்ற இளைஞனே இவ்வாறு காயமடைந்தார். இதுதொடர்பானவிசாரணைகளை நெளுக்குளம்பொலிஸார்மேற்கொண்டனர்.

(21,110)

# குறுக்கே ஓடிய மாட்டால் 3 வாகனங்கள் விபத்து

## 9 பேர் காயம் ஒருவர் தீவிர சிகிச்சையில்







கிளிநொச்சி, செப்.18

கிளிநொச்சி, கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் மூன்று வாகனங்கள்விபத்துக்குள்ளானதில்ஒன்பதுபேர்காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தவிபத்துச்சம்பவத்தில்பளையைச்சேர்ந்ததவராசாஜெயக்காந் (வயது 35), இரத்தினபுரத்தைச் சேர்ந்த என். நகுலராசா (வயது 39), ஜெயந்திநகரைச் சேர்ந்த எஸ். ரமீதா (வயது 25) முள்ளியான் பி. ஜென்சன் (வயது 34), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ. நொயல் (வயது 26), தர்மபுரத்தைச் சேர்ந்த எஸ். சாந்தினி (வயது 54), தேவராசா (வயது 47), வவுனியாவைச் சேர்ந்த நிரோஜன் (வயது 22) என்பவர்களேகாயங்களுக்குகு உள்ளாகினர்.

முறுகண்டியில் இருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த சிற்றூர்ந்து ஒன்று திடீரென வீதியின் குறுக்கே ஓடிய மாட்டுடன் மோதியது. அதையடுத்துக் கட்டுப்பாட்டை இழந்த சிற்றூர்ந்து எதிரேவந்தமோட்டார்சைக்கிள் மற்றும் கன்ரர் ரகவாகனம் என்பவற்றுடனும் மோதியது. விபத்தில் சிக்கிய மாடு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது. வாகனங்களில் வந்தவர்கள் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்த நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம்தொடர்பானவிசாரணைகளைக்கிளிநொச்சிப்பொலிஸார்மேற்கொண்டுள்ளனர்.

(ற-35,222,9,159,6)

# மன்னாரில் கொத்துக் கொத்தாக மனித எலும்புக் கூடுகள் மீட்பு

மன்னார், செப். 18
மன்னார் 'சதொச' வளாகத்தில் தொடர்ச்சியாக பல்வேறு கேள்விகள் சந்தேகங்களை ஏற்படுத்த கூடிய வகையில் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு வருகின்றது.



மன்னார் மாவட்ட நீதிவான் ரி. சரவணராஜா மேற்பார்வையில் சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச மற்றும் களனி பல்கலைகழக பேராசிரியர் தலைமையில் மன்னார் 'சதொச' வளாகத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மற்றும் புதிதாக அடையாளப் படுத்தப்படும் மனித எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தும் மற்றும் ஆய்வுசெய்யும் பணிகள் இடம் பெற்று வருகின்றது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமைக்கு பின்னர் நேற்று திங்கட்கிழமை மீண்டும் 72 ஆவது தடவையாக அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.'

கடந்த அகழ்வுப் பணியின் போது கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப் பட்டிருக்கலாம் எனச் சந்தேகத்தை ஏற்படுத்தகூடிய மனித எலும்புக்கூடு ஒன்று அடையாளப் படுத்தப்பட்டிருந்தது.

குறித்த மனித எலும்புக்கூடு அப்புறப்படுத்தப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றைய தினம் அகழ்வு பணியின் போதும், அதே போன்று கை கால்கள் கட்டப் பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம், என சந்தேகத்தை ஏற்படுத்த கூடிய மூன்றுக்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக வெளிவரும் மனித எச்சங்கள் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் மிகவும் கொடுரமாக காணப்படுகின்றது.

மீட்கப்படும் மனித எச்சங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையில் கொத்து கொத்தாக புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொடரும் அகழ்வுப் பணிகளின் போது மனித எச்சங்கள் மீட்கப் படலாம் என தெரிகின்றது

எனவே அகழ்வுப் பணிகளை விரைவு படுத்தும் வகையில் நேற்றைய அகழ்வுப் பணியின் போது மேலதிகமாக சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (56)



# தமிழரின் பாரம்பரிய கலை படையினருக்கு பயிற்றுவிப்பு

கிளிநொச்சி ,செப் .18
தமிழரின் பாரம்பரிய விளையாட்டு மற்றும் தற்காப்பு கலையினை படையினருக்கு வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்றைய தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநாச்சி இரணைமடு சந்தியில் அமைந்துள்ள நெலும்பியசவில் குறித்த நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது. கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் கீழ் உள்ள 100 பேர் இந்த 3 மாத பயிற்சியினை மேற்கொள்ளவுள்ளனர். தற்காலங்களில் சிலம்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு பாரம்பரிய கலைகள் அழிவடைந்து வரும் நிலையில் இவ்வாறான கலைகளை பயிற்சிகள் மூலம் ஊக்குவித்து எமது பாரம்பரியங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவரினதுமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆரம்பமாகிய குறித்த பயிற்சி வகுப்பானது 3 மாதங்கள் முன்னெடுக்கப்பட்டு சான்றிதள்கழும் வழங்கி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடதக்கதாகும். இந்த நிகழ்



வில் கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நிசங்க ரணவன உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். இதன்போது தற்காப்பு கலை தொடர்பான காட்சிப்படுத்தலும் இடம்பெற்றது. (6)

# ஒட்டுசுட்டான் வெடிபொருளுடன் தொடர்புடைய பதினாறு பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

முல்லைத்தீவு ,செப் .18
ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த ஜீன் மாதம் 22 ஆம் திகதி புலிக்கொடி மற்றும் வெடிபொருள்களுடன் சென்ற முச்சக்கர வண்டி சாரதி உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு, விசாரண்ண மேற்கொள்ளப்பட்டு வந்தவேளை, பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப்பிரிவினர் குறித்த விசாரணையை மேற்கொண்டு முற்கட்டமாக 9 பேரை கைதுசெய்து விசாரித்து வந்துள்ளார்கள் .

கடந்த மாதம் மேலும் இருவர் கைதாகியும், நீதிமன்றில் ஒருவர் சரணடைந்துள்ள நிலையில் அவர்கள் நேற்று வரை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர் .இந்த நிலையில் பயங்கரவாத குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் போதுகடந்த 12 ஆம் திகதி கிளிநொச்சியினை சேர்ந்த மேலும் ஏழு பேர் கைதுசெய்யப்பட்டு, 13 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் குற்றவாளிகளுக்கு உதவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைவரும் கிளிநொச்சி சாந்தபுரத்தினை சேர்ந்தவர்களாவார்கள். இவர்களை ஒரு இலட்ச ரூபாவுடன் மூன்று ஆட்பிணையில் விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதில் இதுவரை மூவர் பிணைவைத்து விடுதலையாகியுள்ளதுடன், நால்வர் இதுவரை பிணைவைக்காத நிலையில் இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைநேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

பதில் நீதிபதி ரி.பரங்சோதி முன்னிலையில் இவர்களின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. குற்றம் குறித்து தொடர்சியாக பயங்கரவாததடுப்பு விசாரணைப்பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருவதா பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்கினை ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது . (ரி3)

# பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்

வடமராட்சி ,செப் .18
சரித்திர பிரசித்தி பெற்ற வடமராட்சி கிழக்கு பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெற்று நாகேஸ்வரப்பெருமான் அலங்கார மூர்த்தியாக எழுந்தருளி அருள் பாலிப்பார்.

வருடாந்த உற்சவ காலத்தின் விசேட உற்சவங்கள் வரிசையில் 6 ஆம் திருவிழாவான பாம்புத்திருவிழா 24 ஆம்திகதிதிங்கட்கிழமையும் 7 ஆம் திருவிழாவான கப்பல் திருவிழா செவ்வாய்க்கிழமையும் 8ஆம் திருவிழாவான வேட்டைத்திருவிழா புதன்கிழமையும் 9 ஆம் திருவிழாவான சப்பறத்திருவிழா 27 ஆம் திகதி வியாழக்கிழமையும் 10 ஆம் திருவிழாவான சமுத்திர தீர்த்தத்திருவிழா 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 11 ஆம் திருவிழாவான கேணித்தீர்த்த திருவிழா 29 ஆம் சனிக்கிழமையும் இடம் பெறும்.

ஆலய பூசகர் சிறிநிலத்சர்மாவின் உதவியுடன் பூர்வீக நாகதம்பிரான் ஆலய உபாசகர் சிவ சிறி சிவ சண்முக குருக்கள் பிரதம குருவாகஇருந்து உற்சவத்தை நடத்தி வைப்பார்.

உற்சவ தினங்களில் ஆலய மடத்தில் அன்ன தானம் நடைபெறும்.

வெளியிடங்களை சேர்ந்த பக்தர்களிற்காக பேருந்து சேவை செய்யப்பட்டுள்ளது. மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் உற்சவ காலத்தை ஒட்டி சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உ
ஓம் ஸ்ரீ சரவணபவ
ஜோதிட நிலையம்
திறப்பு விழா


காலம் :-
நாளை (19.09.2018 ) புதன்கிழமை
நேரம் :- காலை 9.15
உலக ஜோதிட மகரிஷி
டாக்டர் M.ஜெயக்குமார் - DCHMY, P.H.D.(USA)
(பொது செயலாளர் - சர்வ சமாதான முன்னேற்ற அறக்கட்டளை)
மற்றும்
ஜோதிட சாம்ராட்
Er.திரு.P.விஜயரத்ன கோபால் BE
இணைந்து நடத்தும்
வாஸ்து ஜோதிடம், ஜாதகம், திருமணப் பொருத்தம், அங்கலட்சணம் மற்றும் சைக்காலஜி, விஞ்ஞான பூர்வம், மனோதத்துவம், வாக்கு பலிதம் (கிருஷ்ண பக்தி முறை), வானசாஸ்திரம், ஆன்மீக வழிபாட்டு மந்திரங்கள், தொழில்முன்னேற்றம், குழந்தைப் பாக்கியம், திருமணத்தடை நீங்குதல், செய்வினை விலகுதல், தீராத வியாதிகளை குணப்படுத்தல், மனநோயைக் குணப்படுத்தல், கல்வியில் முன்னேற்றம், கடன்பிரச்சினை தீர்க்க, வழக்குப் பிரச்சினையிலிருந்து விலகுதல், குடும்ப ஒற்றுமை, மது அடிமையைப் போக்குதல் ஆகிய அனைத்து பிரச்சினைகளிலிருந்தும் விடுபட்டு மன அமைதியோடு வாழ்வதற்கு சிறந்த முறையில் ஆலோசனை வழங்கப்படும்.
076 197 0569
அபிஷா வைத்தியசாலை
முதல்மாடி
வைத்தியசாலை சந்தி, குடியிருப்பு, வவுனியா.
(CS/19867)(11,17)



கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பல லட்சம்ரூபாபெறுமதியான சூரியமின்கலமொன்று அண்மையில் பொருத்தப்பட்டது. (ம)



அல்வாய் இளைஞர் சனசமூகநிலைய புதிய கட்டடத்திற்கு ஒன்றுபத்து லட்சம் ரூபாவை கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.ஐங்கரன் அண்மையில் வழங்கினார். (ம)

## இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்குக

தென்மராட்சி, செப். 18

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள அமைச்சுத் திணைக்களங்களில் கடமையாற்றி 2019ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பித்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தங்களது நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் இடமாற்றம் தொடர்பாக வடமாகாண அரசசேவைப்பட்டதாரி உத்தியோகத்தர் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கும் நிலை இருப்பின் தங்களது கோரிக்கைகளை உரிய சான்றுகளுடன் உடன் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண அரச சேவைப்பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் க. கஜிதன் அறிவித்தார். (ம-9)

## நாயுடன் மோதியதால் தடம்புரண்டது ஓட்டோ

கொடிகாமம், செப். 18

எழுதுமட்டுவாழில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டியுடன் நாயொன்று மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்தவர் படுகாயமடைந்தார். ஏ9 சாலையில் உசன் சந்தியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. எழுதுமட்டுவாழ் வடக்கைச் சேர்ந்த இராசரத்தினம் சதீஸ்குமார் (வயது36) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ம)

# பழுதான உணவுகள் தொடர்பில் சுகாதாரத் துறையினரை நாடுக!

## கிளிநொச்சி மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

யாழ்ப்பாணம், செப். 18

பொது இடத்திலோ அல்லது வர்த்தக நிலையங்களிலோ பணத்திற்கோ அல்லது இலவசமாக வழங்கப்படும் உணவுகளிலோ பாதிப்புத் தென்பட்டால் உடனடியாக சுகாதாரத் துறையினரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

இன்று உணவுகள் தொடர்பான முறைப்பாடுகளும் குறைபாடுகளும் பெரும் பிரச்சினையாகவுள்ளன. அந்த வகையில் பழுதான உணவு வகைகளோ அல்லது காலாவதியான உணவுப்பொருள்களோ வழங்கப்பட்டால் அல்லது நீங்கள் உண்ட உணவு தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக மேற்கொள்ளும் வைத்திய நடைமுறைகளுடன் சுகாதாரத் துறையினருக்கு முதலில் தகவல் வழங்க வேண்டும்.

மாறாக அந்தச் சம்பவத்தை உடனடியாக வெளியே கசியவிட்ட பின்பு பல மணி நேரங்களின் பின்னர் சுகாதாரத்துறையினரிற்குத் தகவல் வழங்கப்படுமானால் அதற்கு இடையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிடும். அண்மையில் அக்கராயன் பகுதியில் ஒரு பாடசாலை மாணவர்கள் வர்த்தக நிலையத்தில் ஓர் பிஸ்கட் பக்கேட்டை வாங்கி உண்டதால் பாதிக்கப்பட்டதான சம்பவம் இடம்பெற்று 3 மணி நேரங்களின் பின்பே சுகாதாரத் துறையினருக்கு தகவல் கிடைத்தது. கடையில் வாங்கிய பிஸ்கட் பக்கேட்டும் மூன்று மாணவர்களால் முழுமையாக உண்டு முடிக்கப்பட்டுவிட்டது.





இருப்பினும் பிஸ்கேட் வெற்றுப் பக்கேற்றை பரிசீலித்தபோது காலாவதியாகி 3 நாள்கள் கடந்திருந்தது. அதன் பிரகாரம் அந்த வர்த்தக நிலையத்தினை பரிசோதித்தபோது அங்கே காலாவதியான பிஸ்கேட்வகை ஏதும் அகப்படவில்லை. இதனால் உறுதி செய்ய முடியாத தன்மைகள் ஏற்படும். எனவே உடனடியாக அந்தத் தகவல் தெரிந்திருப்பின் சம்பந்தப்பட்டவர்கள் மாற்று வழிகளை கையாளமுன்னர் பரிசோதனைகளின் மூலம் உறுதி செய்யும் தன்மை காணப்படும். இதன் காரணமாகவே இவ்வாறு சந்தேகமான நிலைமைகளில் சுகாதாரத் துறையினருக்கு உடனடியாக தகவல்களை வழங்க வேண்டும் - என்றார். (ம-105)

## முச்சக்கரவண்டி குடைசாய்ந்ததில் சாரதிக்குக் காயம்

தென்மராட்சி, செப். 18

சாலையில் சென்ற முச்சக்கர வண்டிசாலைவளைவில் குடைசாய்ந்ததில் சிறப்புத் தேவையுடையவரான சாரதி முச்சக்கர வண்டிக்குள் அகப்பட்டுக் காயமடைந்தார். இந்தச்சம்பவம் நேற்றுக் காலை மிருசுவில் பழையவாய்க்கால் சந்தியில் இடம்பெற்றது. மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்த எழுதுமட்டுவாழ் வடக்கைச் சேர்ந்த இராசரத்தினம் சதீஸ்குமார் (வயது 36) என்பவரே அவ்வாறு காயமடைந்தார். அவர் கொடிகாமத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்புகையிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது. காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-9)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், செப். 18

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான நடமாடும் சேவை தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இன்று நடைபெறவுள்ளது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற அரச தலைவர் உத்தியோகபூர்வப் பணியில் கலந்துகொண்டு நுழைவுச்சீட்டுப் பெற்றுக் கொண்டவர்கள் இன்று தத்தமது மருத்துவ அறிக்கையைப் பெறமுடியும் என்று தெல்லிப்பழை பிரதேச செயலர் சி.சிவசிறி அறிவித்தார். (ம)

## உந்துருளி விபத்தில் இருவருக்குக் காயம்

சாவகச்சேரி, செப். 18

சீரமைப்புப் பணிக்காக சாலையில் வைக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக் கூம்பு, காற்றால் உருண்டோடி வீதியில் பயணித்த உந்துருளிக்குள் சென்றதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர். ஏ-32 சாலையில் (நாவற்குளி - கேரதீவு) நீரக்குழாய்கள் புதைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. தனங்களப்புப் பகுதியில் சீரமைப்புப் பணிக்காக சாலையில் வைக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக் கூம்பே காற்றுடன் உருண்டு வந்து உந்துருளிக்குள் புகுந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். (ம-9)


# யாழ். நவீன சந்தைக் கடைகளின் கதவுகளை 'சட்டர்'கதவுகளாகமாற்றுவதற்குநடவடிக்கை

## யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் ஜெயசீலன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்மாநகர சபைக்குச் சொந்தமான நவீன சந்தை கட்டடத்தொகுதியில் உள்ள கடைகளின் சுருக்குக் கதவுகள் அனைத்தையும் சட்டர் கதவுகளாக மிக விரைவில் மாற்றியமைக்கநடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் ஜெயசீலன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள நவீன சந்தைகடைத் தொகுதிகளில் உள்ள இரும்பு சுருக்குக் கதவுகள் அனைத்தும் உடைந்த நிலையில் காணப்படுவதாக அங்குள்ளவர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனால் கடைகளில் திருட்டுச் சம்பவங்களும் இடம் பெற்று வருவதால் மாநகர சபையினர் இந்தவிடயத்தில்தலையிட்டு உடனடியாகநடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். இது தொடர்பாக மாநகர சபை ஆணையாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யாழ்ப்பாணம் மாநகர சபையின் சந்தைக்கு கட்டடத் தொகுதியில் உள்ள கடைகளில் உள்ள இரும்புக் கதவுகள் பல தசாப்தங்களுக்கு முன்னர் பொருத்தப்பட்டவையாகும். அவை துருப்பிடித்து உடைந்துள்ளன.இதுதொடர்பில் அந்தப் பகுதி வர்த்த கர்கள் எமக்குத் தெரியப் படுத்தியுள்ளனர்.நாம்அங்குசட்டர்கதவுகளைப்பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார் (ம-8)



## பாத யாத்திரை

கொடிகாமம், செப். 18

நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமய தொண்டர் சபையினர் நல்லூரிலிருந்து வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்குப் பாத யாத்திரையினை எதிர்வரும் 22ஆம் திகதியன்று மேற்கொள்ளவுள்ளனர். அன்றையதினம் காலை 7 மணியளவில் சிவலிங்கம் தாங்கிய ஊர்தியுடன் இந்தப் பாதயாத்திரை இடம்பெறும். பாதயாத்திரை நல்லூரிலிருந்து பருத்தித்துறை வீதி வழியாக வல்லிபுரம் ஆழ்வார் கோவில் வரையான இந்து ஆலயங்களைத் தரிசித்துச் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-159,9)

## கந்தசுவாமி கோவில் திருவிழா

சாவகச்சேரிகெருடாவில் அருள்மிகு கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், எதிர்வரும் சனிக்கிழமை சப்பைரதமும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் நடைபெறும் என்றுஆலயத்தர்மகாத்தாசபையினர் அறிவித்தனர். (ம-159)

உணவு ஒறுப்பில் ஈடுபட்டுவருகின்ற

# அரசியல்க் கைதிகளினுடைய கோரிக்கையை நிறைவேற்றுக

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வலியுறுத்தல்




யாழ்ப்பாணம், செப். 18

அரசியல் கைதிகளாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தங்களைக் குறுகியகால புனர்வாழ்வு வழங்கி விரைவில் விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து அனுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வருகின்ற எட்டுப் பேரினதும் நியாயமான கோரிக்கையை அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் க.ஆனந்தக்குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச.தனுஜன், அ.சீவரத்தினம் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் "ஒன்பது வருடங்களுக்குமேல் முறையான விசாரணையோ அல்லது விடுதலையோ இல்லாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ள குறித்த அரசியல் கைதிகளும் மனிதர்களே, அவர்களும் அன்பான குடும்பத்துடனும், பாசமான பிள்ளைகள், உறவினர்கள், சுற்றத்தாருடனும் மகிழ்வாக வாழப் பிறந்த இந்த நாட்டின் பிரஜைகளே என்பதை அனைவரும் உணர்ந்து, வேறு எந்தவொரு வழியுமற்ற நிலையில், மீண்டும் மீண்டும் அவர்கள் தங்கள் உயிரைப் பணயம்வைத்து மேற்கொள்கின்ற உணவு ஒறுப்புப் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்கவேண்டும்.

அத்துடன், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுவிக்குமாறும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கிக்கொள்ள கோரியும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நாம், அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறையில் அடைக்கப்பட்டு வாழ்வுரிமை மறுகப்படும் சமூக அநீதிக்கு எதிராக குரல்கொடுக்க இன, மத, மொழி, பிரதேச எல்லைகளைத் தாண்டி, மனிதாபிமானமுள்ள அனைவரையும் அணிதிரளுமாறு அழைத்துநிற்கின்றோம்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## கட்டாக்காலி மாடுகளால் யாழ். வர்த்தகர்கள்பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் உலவும் கட்டாக்காலி மாடுகள் கடைகளுக்குள்வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள்களை உட்கொள்வதால் வர்த்தகர்கள் பெரும் துன்பத்துக்கு உள்ளாகின்றனர். யாழ்ப்பாண நகரப் பகுதிகளில்கட்டாக்காலிமாடுகள்திரிவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. அவ்வாறு திரியும் மாடுகள்கடைகளுக்குள்வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள்களை எடுத்து உண்டுவிடுகின்றன. இதனால் வர்த்தகர்களின் வியாபார நகவடிக்கைகள்பெரிதும்பாதிக்கப்படுகின்றன. மாடுகள்மீதானஅச்சம் காரணமாக வர்த்தகர்கள் உணவுப்பொருள்களை வெளியில் காட்சிப்படுத்தவும் தயக்கம் காட்டுகின்றனர். எனவே உரிய அதிகாரிகள் இது விடயத்தில் கவனமெடுத்துச் செயற்படும்படி அவர்கள் கோரிக்கையைமுன்வைத்துள்ளனர். (ம)



## கைதடி நுணாவில் கமக்கார அமைப்பில் உரப்பதிவும், அடையாளஅட்டைப்பதிவும்

யாழ்ப்பாணம், செப். 18

கைதடி நுணாவில் கமக்கார அமைப்பில்பதிவுசெய்துள்ளவிவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்குவதற்கான பதிவும் கமக்கார அட்டைப் பதிவும் நாளை இடம்பெறவுள்ளது.

மானிய அடிப்படையில் உரத்தைப்பெறவிரும்புபவர்கள்தேசிய அடையாள அட்டையின் ஒளிப்படப் பிரதி மற்றும் சந்தாப் பணம் என்பவற்றைக் கொண்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் புதிதாக விவசாயம் செய்பவர்கள் கடவுச்சீட்டுக்கு பயன்படும் ஒளிப்படம், தேசிய அடையாள அட்டையின் ஒளிப்படப் பிரதி, காணியின் உறுதிப் பிரதி, காணிகுத்தகைக்குஎடுக்கப்பட்டிருப்பின் உரிமையாளரின் கடிதம் மற்றும் சந்தாப்பணம் என்பவற்றுடன் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கமக்கார அடையாள அட்டையைப் பெற விரும்புபவர்கள், தேசிய அடையாள அட்டையின் ஒளிப்படப் பிரதி, கடவுச்சீட்டுக்குப் பயன்படும்ஒளிப்படம், கடந்தவருடம் உரமானியம் பெற்ற பதிவுச் சான்றிதழ், வயல்களுக்கான பதிவுகளுக்கானசான்றிதழ்என்பவற்றுடன் கமக்கார அமைப்புக்கு நாளை வருகை தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-159-9)

## உரும்பிராய் பார்வதவர்த்தனி அம்மன் கோயில் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 18

உரும்பிராய் அருள்மிகு பார்வதவர்த்தனி அம்மன் கோயிலின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகியவற்றை இதுவரை சமர்ப்பிக்காதவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கத் தக்கவகையில் வழங்குமாறு செயலாளர் அறிவித்தார். (ம)

## பெண் தலைமை குடும்பங்களின் வாழ்வுக்காக நிதி ஒதுக்கீடு

கொடிகாமம், செப். 18

சாவகச்சேரி பிரதேச சபையின் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின்வறுமைநிலையைப் போக்குவதற்காகச் சபையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேசத்தில் உள்ளபெண்தலைமைக்குடும்பங்களில் சிலவற்றைத் தெரிந்தெடுத்துஅவர்களிடையேபகிர்ந்தளிக்க 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சபையின் கடந்த அமர்வில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. (ம)

## உந்துருளி மோதியதால் ஒருவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, செப். 18

காலை உணவு அருந்திவிட்டு உணவகத்தைவிட்டு வெளியே வந்த குடும்பத்தரை வேகமாக வந்த உந்துருளி மோதியதில் அவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று இடம் பெற்றது. வடமராட்சி கிழக்கு மருதங்கேணியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவனேஸ்வரன் (வயது-50) என்பவர் மனைவியுடன் சாவகச்சேரிக்கு வந்துள்ளார். நகரப் பகுதி உணவகத்தில் காலை உணவருந்திவிட்டு வெளியே வந்து நின்றபோது வேகமாக வந்த உந்துருளி அவரை மோதித் தள்ளியுள்ளது. அவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-9)

## சிறப்புத் தேவையுடையோர் தினத்தை முன்னிட்டு 'கருவி' சமூகவள நிலையத்தால் பல போட்டிகள்

யாழ்ப்பாணம், செப். 18

பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் கட்டுரை, சிறுகதை, கவிதை, ஓவியப் போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகள் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் என இரு பிரிவுகளின் கீழ் நடத்தப்படும். ஆக்கங்கள் எழுத்தாளரகளினது சொந்த ஆக்கங்களாகவும் ஏற்கனவே ஊடகங்களில் வெளிவராத ஆக்கங்களாகவும் இருத்தல் வேண்டும். ஒருவர் ஓர் ஆக்கத்தை மட்டுமே அனுப்ப முடியும்.

அடுத்த மாதம் 31ஆம் திகதி ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதியாகும்.


இந்த விடயம் தொடர்பான மேலதிகத்தகவல்களை 0212054224, 0766385563, 0773246876 ஆகிய அலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை மேற்கொள்வதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். (ம)

# ஊர்வணிகன்பற்று இந்து மயானம் குறுகிய காலத்தில் சீரமைக்கப்படும்

## தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் வாக்குறுதி

**கிளிநொச்சி, செப்.18**

**இயக்கச்சி ஊர்வணிகன்பற்று இந்து மயானத்தை மிக குறுகிய காலத்துக்குள் சீரமைத்து தருவதாகப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட இயக்கச்சி ஊர்வணிகன்பற்றில் உள்ள இந்து மயானத்தை பல குடும்பங்கள் பயன்படுத்திவருகின்றனர். ஆனாலும் இதுவரை காலமும் அடிப்படைத் தேவைகள் எதுவும் இல்லாது வெறுமையாககாணப்பட்டகுறித்த இந்துமயானத்துக்கு. நேற்று முன்தினம் கிராம மட்ட அமைப்புக்களின் தொடர்சியான வேண்டுகோளிற்கு அமைய பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் சென்று அங்கு கூடியிருந்தவர்களிடம் கருத்து தெரிவிக்கையில்:

குறித்த இந்து மயானம் மிக குறுகிய காலத்துக்குள் சீரமைத்து தரப்படும் என உறுதிமொழி வழங்கியுள்ளார்.

அத்துடன் மக்களின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுவதற்காக பச்சிலைப்பள்ளி பிரதேச சபை கடுமையான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் மக்களின் கருத்துகளின் அடிப்படையில் அவர்களின் பங்குபற்றலுடன் எதிர்வரும் காலங்களில் பெரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார் .அத்தோடு குறித்த மயான சீரமைப்புக்கான நிதி, சபை நிதியில் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த களப்பயணத்தில் பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்களான அருட்செல்வி த.ரமேஸ், இ. வீரவாகுதேவர் கிராம அலுவலர் பொது அமைப்புக்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (6)



## பான்ட் வாத்தியக் கருவிகள் வழங்கல்

வவுனியா.செப் .18

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கத்தால் வவுனியா பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு பான்ட் வாத்தியத் தொகுதி அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது.

மாகாணசபை உறுப்பினரின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த இசைக்கருவிகளின் பெறுமதி ரூபா ஒருலட்சம் ஆகும். கடந்த ஜ னவரி மாதம் பாடசாலையில் நிகழ்வொன்றிற்கு விருந்தினராகக் கலந்துகொண்டபோது பாடசாலை சமூகத்தால்விடுக்கப்பட்ட வேண்டுகோளையேற்று இசைக்கருவிகள் வழங்குவதாக உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆலயங்களுக்கு உதவி வழங்கல்



முல்லைத்தீவு,செப்.18

வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் க.வ.கமலேஸ்வரனின் 2018 ஆம் ஆண்டின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் கீழ் ,ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆலயங்களுக்குக் காசோலை, சீமெந்து பை வழங்கும் நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது. ஆலயத் திருத்த வேலைகளுக்கென 40ஆயிரத்துக்கும் பெறுமதியான சீமெந்து பை கரிப்பட்ட முறிப்பு சிறி முருகன் ஆலயத்துக்கும், ஆலய மண்டப திருத்த வேலைக்கென பெரியசாளம்பன் சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கும், ஆலய கட்டட வேலைக்கென முத்துஐயன்கட்டு கனகரத்தினபுரம் நம்பிக்கை விநாயகர் ஆலயத்துக்கும் தலா 40 ஆயிரம் பெறுமதியான காசோலையும் வழங்கிவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வடக்குமாகாண பிரதி அவைத் தலைவர் க.வ.கமலேஸ்வரன் கலந்துகொண்டு காசோலையை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச கலாசார உத்தியோகத்தர் மற்றும் ஆலய பரிபாலன சபையினர் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.





## நாயாறில் எரிந்த வாடிகள் மீளமைத்து கையளிப்பு

முல்லைத்தீவு,செப் .18

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளால் தீயிட்டு எரிக்கப்பட்ட தமிழ் மீனவர்களின், ஐந்து வாடிகள் தமிழ்த் தேசியமக்கள் முன்னணி இளை ஞர் அணியினரின் ஒழுங்கமைப்பில் தியாகி அறக்கொடை நிறுவனம், மண் வாசனை அமைப்பு மற்றும் மனித நேயச் செயற்பட்டாளர்களின் உதவியுடன் மீளமைத்துப் பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், புதுக்குடியிருப்பு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் தம்பி ஐயா, முல்லை மாவட்டச் செயலரும், இளைஞர் அணியின் மத்திய குழு உறுப்பினருமான திலகநாதன் கிந்துஜன், முல்லை மாவட்ட அமைப்பாளர், இளைஞர் அணிச் செயற்பாட்டாளர் விஸ்ணு மற்றும் கட்சியின் முல்லை மாவட்டச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சூரிய மின்கலம் வழங்கல்

கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்குக் கல்வி, குடிதண்ணீர், சுகாதாரத் திட்டத்தின் கீழ் 10 லட்சம் ரூபா பெறுமதியான சூரிய மின்கலம் அண்மையில் வழங்கப்பட்டுப் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த சூரிய மின்கலம் தொழில் நுட்ப அலுவலர்களால் பாடசாலையில் பொருத்தப்பட்டுள்ளதென அதிபர் க.இளங்கோவன் தெரிவித்துள்ளார். (159-9)

## வவுனியாவில் இடம்பெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்வு



வரோட் நிறுவனமும் யாழ் குபேரா கலையகமும் இணைந்து வடமாகாணத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் பாடும் திறனை வெளிக்கொண்டுவரும் நோக்கில் சுப்பர் சிங்கர் நிகழ்வினை வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடத்தியது. சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் முதலாம் இடத்திற்கான பரிசாக 50 ஆயிரம் ரூபாவை ஒஸ்மான் டயானியும் 2 ஆம் பரிசாக 20 ஆயிரம் ரூபாவை நிமாலும் மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவை ஜோதியும் பெற்றுக்கொண்டனர். 5 மாவட்டங்களைச் சேர்ந்த 50 பேர் கலந்துகொண்டு, 13 பேர் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர். இந்த நிகழ்வுக்கு ஈழநல்லூர் ராகம்ஸ் இசைக் குழு இசை வழங்கியது. (222)

## புதிய ஆலய திறப்பு நிகழ்வு

முல்லைத்தீவு ,செப் .18

முல்லைத்தீவு மறைக்கோட்டத்தின் தருமபுரம் பங்கில் அமைந்துள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் புதிய ஆலய திறப்பு நிகழ்வும், புனிதரின் திருவிழாவும் நேற்று முன்தினம் பங்குதந்தை அன்ரனி வின்சன் சில்வெஸ்ரதாஸ் தலைமையில் இடம் பெற்றது .

புதிய ஆலயத்தினை யாழ்பாணம் மறைமாவட்ட ஆயர் பேரருள் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அபிசேகம் செய்து திறந்துவைத்து, திருவிழா திருப்பலியை நிறைவேற்றி, திருச்சுரூப ஆசீர்வாதம் வழங்கினார்.

புதிய ஆலய அபிசேக திறப்பு விழாவிலும், திருவிழா திருப்பலியிலும் குருக்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்களெனப் பலரும் கலந்து கொண்டனர். (222)





# கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் மகப்பேற்றியல் நிபுணர் பொறுப்பேற்றார்

கிளிநொச்சி,செப் ,18

**கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் சிறப்பு மகப்பேற்றியல் நிபுணர் மருத்துவர் டி.எல்.டபிள்யூ குணவர்த்தன தமது கடமைகளை நேற்று உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுள்ளார்.**

கிளிநொச்சி மருத்துவமனை வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் , கடந்த மாதம் 30 ஆம் திகதி மத்திய சுகாதார அமைச்சில் அறிக்கையிட்ட மகப்பேற்று மருத்துவ நிபுணர், உடன் அமுலுக்கு வரும்வகையில் கிளிநொச்சி மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும் தமக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுமுறையான 14 கடமை நாள்கள் விடுமுறையின் பின்னர் அவர் இன்று தமது கடமைகளை கிளிநொச்சி மருத்துவமனையில் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

தமது வெளிநாட்டுக் கற்கை நெறியினைப் பூர்த்திசெய்த பின்னர் கடந்த மாதத்தின் இறுதி வாரத்தில் சுகாதார அமைச்சில் அறிக்கையிட்ட மகப்பேற்றியல் நிபுணரை கிளிநொச்சி மருத்துவமனைக்கு நியமிப்பதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், வடக்கு மாகாணத்தின் உரிய அதிகாரிகள் இதனை விசாரித்து அறியாத நிலையில், சிலர்




மக்களைப் பிழையாக வழிநடத்தி கிளிநொச்சியில் மத்திய அரசுக்கும், சுகாதார அமைச்சிற்கும் எதிரான ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ளதாக மத்தியசுகாதார அமைச்சு கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இனிவரும் காலங்களிலாவது மத்திய சுகாதர அமைச்சும், மாகாண சுகாதார அமைச்சும் சுமுகமான தொடர்பாடல்களை மேற்கொண்டு, இடையறாத சுகாதார சேவைகள் மக்களுக்குக் கிடைக்க ஆவன செய்யவேண்டும் எனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (214-)



## கைத்தொலைபேசி திருத்தும் பயிற்சி

வவுனியா ,செப் .18

வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகத்தில் 15 ஆம் திகதி சனிக்கிழமை கேட்டலில் சிரமமுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான கைத்தொலைபேசி திருத்தும் பயிற்சி நெறி, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.சிறிநிவாசன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் 12 மாற்றுத்திறனாளிகள் பங்குபற்றி பயனடைய உள்ளனர். வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிப்பங்களிப்புடன் இந்தப் பயிற்சி நெறி இடம்பெறுகிறது.

ஆரம்ப நிகழ்வில் வளவாளர்கள் மேனன்,டேனிஸ் , அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வசந்தரூபன், கலைவாணி ஆகியோரும் பங்குபற்றினர். (222)

## மன்னார் சிறுவர் பூங்கா கையளிப்பு



மன்னார்,செப் .18

மன்னார் நகர சபையின் கீழுள்ள மன்னார் சிறுவர் பூங்காவின் அபிவிருத்திப் பணிகள் முழுமையாக பூர்த்தியடைந்துள்ள நிலையில், நேற்று சிறுவர்களின் பாவனைக்காக பூங்கா திறந்து விடப்படவுள்ளதாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் பாதீட்டு நிதியின் கீழ் சுமார் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இந்த சிறுவர் பூங்கா சீரமைப்பு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

பூங்காவில் மேலதிகமாக சிறுவர்கள் விளையாடக்கூடிய விளையாட்டு உபகரணங்களும் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மன்னார் நகர சபையின் கட்டுப்பாட்டில் இந்த சிறுவர் பூங்கா காணப்பட்ட போதும், கட்டுப்பாடுகளையும் மீறி இளைஞர்களும், பெரியவர்களும் குறித்த பூங்காவை பயன்படுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக சிறுவர்களின் பல்வேறு விளையாட்டு சாதனங்கள் சேதமடைந்துள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகர சபையின் முதல்வர் தலைமையில் சீரமைப்புப் பணிகள் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் , மன்னார் நகர சபையின் செயலர் பிரிட்டோ லெம்பேட் ஆகியோர் நேற்று காலை சிறுவர் பூங்காவை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து மன்னாரில் தற்காலிகமாக அமைக்கப்பட்டு வரும் அரச மற்றும் தனியார் பேருந்து தரிப்பிடங்களை பார்வையிட்டதோடு, அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (56)

## மறைந்திருக்கும் வீரர்களை வெளிக்கொணர்வோம்

மன்னார்,செப் .18

முசலி மண்ணில் திறமையுள்ள வீரர்கள் பலர் இருக்கின்றார்கள்.

அவர்களது திறமைகள் புடம்போடப்பட்டு தேசிய சர்வதேச ரீதியில் கீர்த்தியும், பெருமையும் பறைசாற்றப்படல் வேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மறுவாழ்வு, மீள்குடியேற்றம் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான் குறிப்பிட்டார்.

மன்னார் வேப்பங்குளம் முஹம்மதியா விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிச் சுற்று நேற்று முன்தினம் வேப்பங்குளம் கரப்பந்தாட்ட திடலில் கோலாகலமாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக்கருத்துக்களை தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் குறிப்பிட்டதாவது.

விளையாட்டுக்கள் மூலம் மனிதன் திடமானவனாக மாறுகிறான்.

அவனது உடலும் உள்ளமும் உறுதியடைகின்றன.



கரப்பந்து இலங்கையின் தேசிய விளையாட்டாகும். இந்த விளையாட்டு இந்தப் பகுதிகளில் பிரபலியமானதாக இருக்கின்றது.

மேலும் அரசியலில் அடிமைகளாக இருக்காது எமது சொந்தக் கால்களில் நிற்கவும் எமது உரிமைகளை வென்றெடுக்கவும் நாம் நிதானமாக சிந்திக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (60)

## பாடசாலைக்கான உதவி வழங்கல்

வவுனியா,செப் .18

வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவினால் குறித்தொதுக்கப்பட்ட 2018ஆ ம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து, வவுனியா வடக்கு வலய சேனைப்பிலவு உமையாள் வித்தியாலயத்துக்கான தளபாடம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ஐம்பதாயிரம் ரூபா நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தாளபாடங்கள் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்ட நிகழ்வில் வவுனியாவடக்கு பிரதேசசபை உறுப்பினர், மற்றும்பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலர், அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், எனப்பலரும் கலந்து கொண்டார்கள்.





## மணல் ஏற்றிய வாகனங்களை கைப்பற்றிய பொலிஸ்

கிளிநொச்சி, செப். 18

கடந்த இரு தினங்களில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய 3 டிப்பர் வாகனங்களும் இரு உழவியந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில், அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய டிப்பர் வாகன்த்தை தருமபுரம் பொலிஸார் கைப்பறியதுடன், சாரதியையும் கைது செய்துள்ளனர்.

அதே போல் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்பு பிரிவினர் கல்லாறு பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு டிப்பர் வாகனங்களைக் கைப்பற்றி, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதன் சாரதிகள் தப்பி சென்றுள்ளனர். அதே போல் கல்லாறுபகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு உழவியந்திரங்களைச் சிறப்பு அதிரடிப்படையினர் கைப்பறியதுடன், சாரதிகளையும் கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். கைது செய்யப்பட்ட சாரதிகளை நீதிமன்றில் முற்ப்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தருமபுரம் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிகின்றன. (6)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள்

# டெங்கு பரவும் நிலையிலுள்ள காணிகள் கையகப்படுத்தப்படும் எனத் தீர்மானம்

*யாழ்ப்பாணம், செப் 18*

**வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் டெங்கு பரவு கூடிய காணிகளை உடனடியாக துப்புரவு செய்யாமல் விட்டால் அந்த காணி கையகப்படுத்தப்படும் என்ற தீர்மானம் நேற்றைய சபை அமர்வில் நிறைவேற்றப்பட்டது**

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த அமர்விலேயே தீர்மானம் நிறைவேற்றபட்டது.

தீர்மானம் தொடர்பில் தவிசாளர் தெரிவித்ததாவது.

அடுத்து மழைக்காலம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனால் டெங்கின் தாக்கம் அதிகமாக காணப்படும். அவற்றை கட்டுப்படுத்த சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும். அதிகளவு பரப்புகள் உள்ள காணிகள் பற்றையாகக் காணப்படுகின்றது. அந்தக் காணிகள் துப்பரவு செய்யப்படுவதில்லை. சில காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாட்டில் வசிக்கின்றனர். மக்கள் தமது குடியிருப்புப் பகுதிகளை துப்பரவு செய்து வைத்திருந்தாலும் அருகில் உள்ள பற்றைக் காணிகளில் இருந்து டெங்கு பரவும் அபாயம் உள்ளது.

ஆகவே இது தொடர்பில் காணிகளின் முன்னால் அறிவித்தல் பலகை தொங்க விடப்படும். காணிகளை துப்பரவு செய்வதற்கு நாட்களும் வழங்கப்படும். வழங்கப்பட்ட கால எல்லைக்குள் காணிகள் துப்பரவு செய்யப்படவில்லை என்றால் "2007ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க டெங்கு நுளம்பு பெருக்க சட்டத்தின் கீழ்" காணிகளை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இந்த தீர்மானம் சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.



### திண்ம கழிவகற்றல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் மீள் சுழற்சிக்காக கழிவுகள் கொட்டப்படும் இடத்தில் பாதுகாப்பு மற்றும் சுகாதார பிரைச்சினைகள் காணப்படுவதாக சுகாதார பரிசோதகர் அறிக்கை கிடைப்பெற்றுள்ளதாக தவிசாளர் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கழிவுகள் மீள் சுழற்சிக்காக கொட்டப்படும் அராலிப் பகுதியில் சில குறைப்பாடுகள் காணப்படுவதாக சுகாதாரப் பரிசோதகர் அறிக்கை தெரிவிக்கின்றது. ஆகவே அதனை உடனடியாக சீர் செய்ய வேண்டும். குப்பைகள் தரம்பிரிக்கப்பட்டு கொட்டப்பட வேண்டும். அப்போது தான் மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியும். குப்பைகள் காற்றுக்கு பறக்காத வண்ணம் உயரமான வலை பொருத்துதல் வேண்டும்.

தேவையான நேரம் மாத்திரம் வாயில் கதவுகளை திறந்து மூட வேண்டும் அப்போது தான் கால் நடைகள் உட்செல்லாமல் கழிவுகள் வேறு இடத்துக்கு இழுத்து செல்லாமல் இருக்கும். இவ்வாறு முன்வைக்கப்பட்ட குறைபாடுகளை சீர் செய்வதன் மூலம் கழிவு முகாமைத்துவம் சிறப்பாக இருக்கும் என்றார். எதிர்வரும் ஒக்டோபர்மாத இறுதிக்குள் தொழில்நுட்ப உதவிவியாளரின் மதிப்பீடு பெற்று இடம் சீரமைக்கப்படும் அத்துடன் வெளிவாரி அடிப்படையில் காவலாளி ஒருவரையும் நியமிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### தமிழுக்கு முன்னுரிமை

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் தமிழ் மொழி மூலம் பெயர்ப் பலகைகள் அமைய வேண்டும் ,தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ந.பொன்ராசா இந்த பிரேரணையை சபையில் முன்வைத்தார். அதில் தெரிவிக்கப்பட்டதாவது.

நாம் வாழும் தமிழ் பிரதேசத்தில் தமிழ் மொழி மூலமான காட்சிப் படுத்தல்கள் அருகி கொண்டு செல்கின்றது. ஆரம்பத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ் மொழிக்கு அதிக இடம் கொரடுக்கப்பட்டது. ஆனால் வியாபர நிலையங்கள் ,அலுவலகங்களில் உள்ள பெயர்ப் பலகைகள் வேறு மொழிகளுக்கு முன்னுருமைப் படுத்தியிருப்பதை காண முடியும். ஆகவே எமது சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில். காட்சிப்படுத்தப்படும் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அந்த மாற்றம் எம்மில் இருந்து ஆரம்பிக்கட்டும் என்றார்.

சபை, சபையின் எல்லைக்குட்பட்ட வியாபர நிலையங்கள் மற்றும் சபையின் அனுமதியுடன் செயற்படும் நிலையங்களுக்கு வருடாந்த அனுமதி மற்றும் புதுப்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளும்போது ,உரிமையாளர்களுக்கு அவர்களின் நிலையங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப் வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் வியாபர உரிமங்களை வழங்குவது என்று தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### மேலதிக கொடுப்பனவுகள்

சபையின் உறுப்பினர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் வழங்கல் தொடர்பில் சட்ட நடைமுறைகள் இருப்பதாக தெளிவூட்டல் பயிற்சி நெறிகளில் தெரிவிக்கப்பட்டது. ஆகவே இந்த மேலதிக கொடுப்பனவுகள் பற்றி ஆராயப்படவேண்டும் என்ற பிரேணையை சபையின் உறுப்பினர் செ.சுபாஜினி முன்வைத்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

சபை உறுப்பினர்கள் பயிற்சிப் பட்டறைக்கு செல்லுதல், சபை சார்ந்த வேறு விடயங்களுக்குச் செல்லும் போது அதற்கான மேலதிக கொடுப்பனவுகள் பெற்று கொள்ளும் சட்டம் ஒன்று உள்ளதாக நாம் அண்மையில் சென்ற பயிற்சிபட்டறையின் போது எமக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆகவே இது தொடர்பில் எமக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றார்.

தவிசாளர் மற்றும் உப தவிசாளருக்கான தொலைபேசிப் படிகள் உண்டு. ஆனால் உறுப்பினர்களின் மேலதிக கொடுப்பனவுகள் தொடர்பில் சட்ட அலுவலரை நாடி அதற்கான ஆலோசனைகள் பெற்று அடுத்த சபை அமர்வில் சமர்பிக்கப்படும் என்று தவிசாளர் தெரிவித்தார்.

மக்களின் வரிப்பணத்தில் நாம் செயற்படுகின்றோம். ஆகவே எமது சேவைக்கு மேலதிக கொடுப்பனவுகள் தேவையில்லை. அதற்கான சட்டவாக்கம் இருந்தாலும் அந்த கொடுப்பனவை பெற்று வேலை செய்ய மாட்டோம் என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### சபைக்கு சொந்தமான தண்டப்பணங்கள்

சபையின் எல்லைக்குள் அறவிடப்பட்ட நீதி மன்ற தண்ட பண நிலுவைகளை மாகாண திறைசேரி முழுமையாக விடுவிக்க வேண்டும். இது தொடர்பாக மாகாண திறைசேரிக்கு கடிதம் அனுப்பப்பட வேண்டும் என்ற பிரேரணை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் எஸ்.ஜெயந்தனால் சபையில் நேற்று முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினை அதி உச்ச வருமானம் கொண்ட சபை என்று சொல்ல முடியாது. அதன் செயற்பாடுகளுக்கு நிதி தேவை. சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் இடம் பெற்ற சட்ட மீறல்களுக்கு நீதி ,மன்றத்தால் அறவிடப்படும் தண்டப்பணம் வருடாந்தம் பகுதியாக விடுவிக்கப்படுகின்றது. 2017ஆம் ஆண்டுக்கான 1.6 மில்லியன் ரூபா இன்னமும் எமக்குக் கிடைக்க வேண்டியுள்ளது. இது தவிர நடப்பு வருட தண்டப்பணத்தின் நிலுவையும் உள்ளது. சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளுக்கு நிதி தேவை என்பதால் காலம் தாழ்த்தாமல் தண்டப்பண நிலுவைகளை மாகாண திறைசேரி விடுவிக்க வேண்டும் என்றார்.

இது தொடர்பில் சபையின் நிதி நிலைமையை தெரிவித்து மாகாண திறைசேரிக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதாக தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### திலீபனுக்கு அஞ்சலி

தமிழ் மக்களின் வாழ்வுக்காக அகிம்சை வழி மூலம் உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி திலீபனுக்கு சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. சபை அமர்வு நிறைவு பெற்ற பின்னர் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (7)

## ஈழம் என்ற சொல்லை மீள எழுதியதால் பயங்கரவாத தடுப்பு பிரிவால் விசாரணை

கிளிநொச்சி, செப். 18

ஈழம் என்ற சொல் வள்ளுவர் சிலையில் மீள எழுதப்பட்டமை தொடர்பில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் விசாரணையை கரைச்சி பிரதேச சபை தவிசாளர் எதிர்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான இடத்தில் கடந்த வருடம் தமிழ்ச் சங்கத்தினரால் வள்ளுவர் சிலை ஒன்று அமைக்கப்பட்டது. அந்த சிலையில் உலகப்படத்தில் இலங்கை ஈழம் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை அவதானித்த பயங்கராவாதத் தடுப்பு பரிவினர் அதனை நீக்குமாறு கோரியமைக்கு அமைய அது நீக்கப்பட்டது. ஆனால் மீளவும் அழிக்கப்பட்ட ஈழம் என்ற சொல் குறித்த படத்தில் எழுதப்பட்டதன் காரணமாக தவிசாளரை கொழும்ப பயங்கரவாத தடுப்பு பிரிவிற்கு அழைக்கப்பட்டு அவர் விசாரணைகளை எதிர் கொண்டுள்ளார்.

அங்கு பயங்கரவாதத் தடுப்பு பிரிவின் பிரிவு ஒன்றின் பொறுப்பதிகாரியினால் தவிசாளரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 2 மணித்தியாலங்களும் 40 நிமிடங்களும் விசாரணை மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் 19 வினாக்களுக்க 9 பக்கங்களில் விசாரணை அறிக்கை எழுதப்பட்டுள்ளது. குறித்த ஈழம் என்ற சொல்லினை யார் எழுதியது என கேட்டபோது அது தமக்க தெரியாது என பதில் அளித்துள்ளார் தவிசாளர். தொடர்ந்து ஈழம் என்ற சொல் தவறானது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பரந்தனில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் துணிச்சல் மிக்க தவிசாளர் ஒருவர் கிடைத்துள்ளார், நாங்கள் வள்ளுவர் சிலையில் ஈழம் என்ற சொல்லை கொண்டுவருவோம் என தெரிவித்ததற்கான ஆதாரத்தை காட்டி கேட்டுள்ளனர் அதற்கு தவிசாளர் அது அவரின் கருத்து என தெரிவித்துள்ளார்.

ஈழம் என்பது சட்டத்திற்கு முரணானது என கேட்டபோது சமய வராலாற்று புத்தகங்களில் ஈழம் என் சொல் காணப்படுகின்றது, தமிழ்த் தாய் வாழ்த்தில் காணப்படுகின்றது, கட்சிகளின் பெயரில் காணப்படுகின்றது, ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி போன்ற பல கட்சிகளில் காணப்படுகின்றது. அது மட்டுமல்லாது இலங்கையின் ஆரம்பகால பெயர்களில் கூட ஈழம் என்று இலங்கையை அழைத்துள்ளனர். அத்தோடு மாகாண சபையில் ஈழம் என்ற சொல்லை பயன்படுத்துவதற்கு அனுமதி காணப்படுகின்றது. இவை அனைத்தையும் வைத்து பார்கின்றபோது ஈழம் என் சொல் சட்டத்திற்கு முரணானது இல்லை என்பது எனது கருத்து என தெரிவித்துள்ளார். மேலதிக தகவல்கள் எவையும் தேவைப்படின் தொடர்பு கொள்வதாக விசாரணைப்பிரிவினர் தெரிவித்துள்ளனர் என தெரிவிக்கப் பட்டது . (6)



## தோண்டப்பட்ட வீதியால் பயணிக்கமுடியாத நிலை

வவுனியா, செப் .18

வவுனியாவிலிருந்து பூந்தோட்டம் செல்லும் பிரதான வீதியில் குளாய் பொருத்தும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. குளாய் பொருத்தும் பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. எனினும் வவுனியா பூந்தோட்டம் செல்லும் முக்கிய வீதியிலுள்ள சந்திப்பகுதிக்கு அண்மையில் திருத்தப் பணிக்காக வெட்டப்பட்டுள்ளகிடங்கு கடந்த ஒருமாதகாலமாக மூடப்படவில்லை .இதனால் அந்த வீதியில் பயணிப்பதில் பல அசௌகரியங்களை மாணவர்கள், பொதுமக்கள், வயோதிபர்கள் எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருகையில், வவுனியாவிலிருந்து பூந்தோட்டத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் குளாய் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருவதுடன் அப்பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. எனினும் பொதுமக்கள் பயணம் மேற்கொள்ளும் வவுனியா குடியிருப்பு பிரதான சந்திப்பகுதிக்கு அண்மையில் வெட்டப்பட்ட கிடங்கில் குளாய் பொருத்தப்பட்டுள்ள போதிலும், அதை மூடிவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் இன்று வரையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் இரவு வேளையில் அவ் வீதியில் பயணம் மேற்கொள்ளும் போது பலர் விபத்துக்களை எதிர் நோக்கிவருகின்றனர். அப்பகுதியிலுள்ள பள்ளத்தை மூடி பாதுகாப்பாக பயணம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நீர்ப்பாசனத்திணைக்களத்திடம் பலர் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் முச்சக்கரவண்டிச்சாரதிகள், பயணிகள், பொதுமக்கள் தெரிவிக்கின்றன.

# தொடருந்துத் திணைக்கள அசமந்தமே விபத்துக்களுக்குக் காரணம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப் 18

வடக்கின் தொடருந்துக் கடவைகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் விபத்துக்களுக்கு தொடருந்துத் திணைக்களத்தின் அசமந்தமே காரணம் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா, ஓமந்தை, பன்றிகெய்த குளம்பகுதியில்பாதுகாப்பற்றதொடருந்துக் கடவையை கடந்து சென்ற கார் ஒன்றின் மீது யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற தொடருந்து மோதியதில் நான்கு பெண்கள் உயிரிழந்ததுடன், இருவர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கில் அண்மைக்காலமாக தொடருந்து விபத்துக்கள் அதிகரித்துள்ளன. அதிலும் குறிப்பாக வவுனியா ஓமந்தைக்கும், கிளிநொச்சிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் உள்ள தொடருந்துக் கடவைகளில் பல விபத்துக்கள் இடம்பெற்று உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இப் பகுதிகளில் உள்ள பல தொடருந்துக் கடவைக்கள் பாதுகாப்பற்ற கடவைகளாக இருப்பதுடன், தொடருந்துக் கடவைகளில்கடவைகாப்பாளர்கள்நியமிக்கப்படவில்லை.

இதன் ஊடாக பயணிப்போர் தொடருந்தில் சிக்குண்டு விபத்துக்குள்ளாகின்றனர்.

தற்போது வவுனியா, ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இடம்பெற்ற விபத்து கூட பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் பயணித்த மகிழுந்தே விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தப் பகுதி ஊடாக பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொது மக்கள் எனப் பலரும் தினமும் பயணிக்கும் நிலையில் பாதுகாப்பான தொடருந்துக் கடவை ஒன்றை அமைக்குமாறு மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கைவிட்டு வந்ததுடன், அதனை நானும்தொடருந்துத்திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தேன். மாவட்டத்தில் இடம்பெற்ற பல ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பாதுகாப்பான தொடருந்துக் கடவைகள் அமைக்கப்பட வேண்டும்எனகோரிக்கை முன்வைத்திருந்தேன். குறிப்பாக கடந்த 3 ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்தில் வடமாகாண முதலமைச்சர் சி. வி.விக்கினேஸ்வரன் மற்றும் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் குறித்த பகுதியில் பாதுகாப்பான தொடருந்துக் கடவை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தேன். இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் தொடருந்துத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால், எந்தவித நடவடிக்கையும் தொடருந்துத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படாத நிலையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் உயிரிழந்த உறவுகளுக்கு எனது அஞ்சலிகளைத் தெரிவித்து கொள்வதுடன், இவ்வாறான விபத்துக்களை இனிவரும் காலங்களில் தடுக்கும் வகையில் தொடருந்துத் திணைக்களம் பாதுகாப்பான தொடருந்துக் கடவைகளை அமைப்பதுடன், தொடருந்துக் கடவைகளுக்கு நிரந்தரமாக கடவைக் காப்பாளர்களையும் நியமிக்க வேண்டும்

அத்துடன், ஏ-9 வீதியிலும் அண்மைக்காலமாக இடம்பெறும் விபத்துக்களால் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. இதனை கட்டுப்படுத்துவதற்கும்பொலிஸ்திணைக்களம் மற்றும் சம்மந்தப்பட்ட அமைச்சுக்கள் புதிய திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்தி உயிரிழப்புக்களை தடுக்க வேண்டும்- என்றார். (110)

# மன்னார் கிணற்றிலிருந்து வெளிவரும் வெடிபொருள்கள்

மன்னார், செப்.18

மன்னார் முருங்கன் கட்டுக்கரை கோர மோட்டை பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து அகழ அகழ வெடிக்காத வெளிபொருள்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றை மீட்டுச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

கோரமோட்டைப் பகுதியில் போர் காரணமாக கைவிடப்பட்டிருந்த காணியில் உள்ள கிணற்றினுள் கடந்த வாரம் வெளிபொருள்கள் இருப்பது கண்டறியப்பட்டது. காணியைத் துப்புரவு செய்யும் போது காணியின் உரிமையாளரால் அந்த வெடி பொருள்கள் கண்டறியப்பட்டது. அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கிணற்றில் பெருமளவான வெடிபொருள்கள் இருப்பதை உறுதிப்படுத்தினர். கிணற்றுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கினர். கடந்த 9 ஆம் திகதி சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து அந்தக் கிணற்றில் இருந்து பல வெடிபொருள்களை மீட்டனர். மாலைவரை மீட்புப் பணிகள் இடம்பெற்றன. மீட்கப்பட்ட வெடி பொருள்களைச் செயலிழக்கச் செய்யும்நடவடிக்கைகளில் அதிரடிப்படையினர் ஈடுபட்டனர்.

அதன்தொடர்ச்சியாக மன்னார் நீதிமன்றத்தின் அனுமதியோடு கடந்த சனிக்கிழமை கிணறு அகழப்பட்டது. காலையில் இருந்து மாலைவரை அகழும் பணி மேற்கொள்ளப்பட்டது. மாலை 4 மணியளவில் வெடி பொருள்கள் மீட்கப்பட்டன சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து குறித்த கிணற்றினுள் இருந்து வெடி பொருள்களை மீண்டும் மிகவும் பாதுகாப்பாக அகற்றியுள்ளனர். அகற்றப்பட்ட வெடி பொருள்களைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டனர். இருப்பினும் வெடி பொருள்கள் இன்னும் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதால் கிணறு மீண்டும் அகழப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் - முருங்கன் கட்டுக்கரை பகுதியில் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் வெடிச் சத்தங்கள் ஒலித்துக் கொண்டே இருந்தன. அந்த ஆண்டில் படையினரால் 150 ற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் அந்தப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். மன்னார் நகரைச் சுற்றியுள்ள முருங்கன், பரப்பன்கடல் போன்ற கிராமங்களிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (21)

# புதிய சந்தைக் கட்டடத்திற்கு நாம் தடையாக இருக்கவில்லை

கிளிநொச்சியில் அமையுவுள்ள புதிய சந்தைக் கட்டடத் தொகுதி தொடர்பில் நானோ எனது அமைப்பான சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்போ எந்த இடத்திலும் தலையீடுகளை மேற்கொள்ளவோ, எதிர்க்கவோ இல்லை. என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்தார்

புதிய சந்தை கட்டடம் அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தடையாக இருப்பதாக வெளிவந்துள்ள செய்திகள் தொடர்பில் அவரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடலுக்கு அமைவாக 767 மில்லின் மதிப்பீட்டில் மூன்று மாடிக்களை கொண்ட கிளிநொச்சிக்கான புதிய சந்தைக் கட்டடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், நகர அபிவிருத்தி அதிகார சபையினரும் எனக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

ஆனால் தற்போது சிலர் தங்களுடைய குறுகிய அரசியல் இலாபங்களுக்காக மக்களிடையே தவறான கருத்துக்களை பரப்பி வருகின்றனர். சில காரணங்களுக்காக தடைப்பட்டுள்ள கிளிநொச்சி பொதுச் சந்தையின் புதிய கட்டடம் எங்களால் தடைப்பட்டுள்ளதாக பழியை எங்கள் மீது சுமத்தி அவர்கள் தப்பிக்கொள்ளப் பார்க்கின்றார்கள்.

நாங்கள் எந்த இடத்தில் எந்த வகையில் புதிய சந்தை கட்டடத்துக்கு தடையாக இருக்கின்றோம் என்பதனை கூறவேண்டும் அதை விடுத்து அரசியல் காழ்ப்புணர்ச்சியால் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்துவது நாகரீகமற்றது- என்றார். (35)

ஒவ்வொரு படைப்பாளியின் படைப்புக்களும்

# இளைஞர் யுவதிகளிடையே உறங்கிக் கிடக்கும் திறமைகளைத் தட்டி எழுப்ப வேண்டும்



யாழ்ப்பாணம், செப். 18

ஒவ்வொரு படைப்பாளியும் தமது படைப்புகளின் மூலம் இளைஞர் யுவதிகளிடையே உறங்கிக் கிடக்கின்ற திறமைகளைத் தட்டிஎழுப்பக் கூடியவகையில் இருக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அக்னிசிறகுகளின் டென்மார்க் கி.செ. துரை எழுதிய உலகப் புகழ்பெற்ற உதைப்பந்தாட்ட10 வீரர்கள் நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலகம் முழுவதும் பரந்து கிடக்கின்ற எண்ணற்ற உதைபந்தாட்ட வீரர்களில் முத்துக்க ளாக 10 பேரை தெரிவு செய்துஅவர்களின் உதைபந்தாட்டவரலாற்றைஉங்களுக்குபடம் போட்டுகாட்டுவதாக இந்த நூல் அமைந்திருக்கின்றது. உலகப் புகழ் பெற்றஉதைபந்தாட்டவீரர்களான கிறிஸ்டியானோறொ னால்டோவில் தொடங்கியனல்மெஸி,டியகோமரடோனாஎனப் பட்டியல் அலன் சிமொன்சன் வரைநீண்டுசெல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு நூல் முழுமையானவடிவம் பெறும் போதுஅந்தநூல் சிறப்பான செய்திகளைத் தாங்கியதாகவும்,அதன் எழுத்துவடிவம் மனதைகொள்ளைகொள்ளக்கூடியவகையிலும்கம்பீரநடையுடனான ஜனரஞ்சகசொல் ஆற்றல்களைக் கொண்டதாகவும்,புத்தகத்தைவாசிக்கமுயல்கின்றஒருவர் இடையில் தமதுவாசிப்பை இடைநிறுத்தமனமின்றிதொடர்ந்துவாசிக்கவேண்டும் என்ற ஆவலைத் தூண்டுவதாகவும் இருக்கவேண்டும்.

அந்தவகையில் இப் புத்தகத்தில் ஒவ்வொருவீரர்களின்தும் தனித்தனித் திறமைகள் எடுத்துக்கூறப்பட்டவிதம் உதைப்பந்தாட்டதுறையில் ஆர்வம் உடையவர்களுக்குதாமும்ஒருஉலகப் புகழ் பெற்றஉதைப்பந்தாட்டவீரனாக மாறவேண்டும் என்றஒருஉந்துசக்தியைஏற்படுத்தக் கூடியவகையில் அவர்களின் திறமைகள் வர்ணிக்கப்பட்டுள்ளன.

தனியேஉதைப்பந்தாட்டவீரர்கள் மட்டும் படிக்கவேண்டியஒருபுத்தகமாகமட்டும் இது அமையாதுவாழ்க்கையின் சவால்களைநம்பிக்கையுடன் எதிர்கொள்ளவிரும்பும்ஒவ்வொருவருக்கும் தவறாதுபடிக்கவேண்டியஒருபுத்தகமாக இது அமைந்திருக்கின்றது.

ஏ-9 வீதியில் உதைபந்தாட்டத் திடல் ஒன்று செம்மணிஅருகாமையில் உள்ளது. அதற்கு அருகாமையில் பன்னாட்டு நியமங்களுக் கேற்பஒருநீச்சல் தடாகத்தையும் விளையாட்டுக்கட்டடத் தொகுதியையும் அமைக்கநடவடிக்கைகள் எடுத்துவருகின்றோம். எம் மக்கள் பல விளையாட்டுக்களிலும் பன்னாட்டு ரீதியாக தகை மையைப் பெறவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். நீச்சல் பற்றியும் இவ்வாறானஒருநூல் வெளிவந்தால் இளைஞர் யுவதிகள் மத்தியில் ஆர்வம் கூடும் என்றுஎதிர்பார்க்கலாம்-என்றார்.

# பாடசாலை நேரத்தில் பேருந்துச் சேவையை கட்டுப்படுத்துக

## அதிபர் நவரட்ணம் கோரிக்கை

வவுனியா, செப். 18

வீதியூடாக செல்லும் பேருந்துச் சேவையைக்கட்டுப்படுத்தி மாணவர்களுக்கு பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ஆர். நவரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் பாடசாலையின் அதிபர் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்திற்கு கடிதம் ஒன்றினை நேற்று அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது,

குடியிருப்பு பகுதியிலுள்ள இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னரும் பாடசாலை முடிவடையும் பின்னரும் அவ்வீதியூடான போக்குவரத்தில் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் பயணிக்கின்றன. இது தொடர்பில் தனியார் பேருந்து இ.போ.ச பேருந்து உரிமையாளர்களின் கவனத்திற்குக்கொண்டுவரப்பட்டபோதிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இதனால் பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே இவ்விடயத்தில் பொலிஸார் த்லையிட்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என கோரிக்கை விடப்பட்டது.

இதேவேளை, பாடசாலைக்கு முன்பாக நடைபாதை அமைக்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் வீதியூடாகவே பயணத்தினை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுகின்றது. இதனால் அண்மைய காலங்களில் மாணவர்கள் சிலர் இந்தப் பகுதியில் விபத்துக்களையும் எதிர்நோக்கியுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

# நாட்டின் தலைமை அமைச்சராக மகிந்தவே பொருத்தமானவர்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, செப் 18

நல்லாட்சி அரசின் ஒப்பந்தத்தை கைவிட்டு, நாட்டின் புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை உடனடியாக நியமிக்க வேண்டும் என்று கூட்டு எதிர்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்ததார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இந்த நாட்டின் அரசியலில் தற்போது பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனக்கு தெரிந்தவரையில் அரசு வெகுவிரைவில் கவிழப்போகும் நிலைமையிலேயே காணப்படுகிறது.

இதனால், ஜனநாயக விரோத செயற்பாடுகளில் அரசு ஈடுபட்டுவருகிறது. நாளுக்கு நாள் அரசின் செயற்பாட்டால் நாடும், நாட்டு மக்களும் பெரியளவிலான பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

மத்திய வங்கியில் கொள்ளையடித்து விட்டு, முதன்மைக் கொள்ளைக்காரர் சிங்கப்பூரில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். அவர் தொடர்பில் பொலிஸார் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இவ்வாறு குற்றவாளியொருவரை காப்பாற்றும் ஒரு அரசின் ஆட்சியிலேயே நாம் இன்று வாழ்ந்து வருகிறோம்.

அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையில் கருத்து மோதல்கள் இடம்பெறுகின்றமையையும் அனைவரும் அறிவார்கள். இவர்களின் கொள்கைகள், கருத்துக்கள், செயற்பாடுகள் என அனைத்தும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருக்கிறது.

இந்தநிலையில், மகிந்த ராஜபக்சவை இந்த நாட்டின் அடுத்த தலைவராக இந்தியா முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது. அவருக்கு இந்தியாவில் அரச தலைவர்களுக்கான மரியாதையே வழங்கப்பட்டது. கருத்துக் கணிப்புக்களும் அவரே அடுத்தத் தலைவர் என சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறான நிலையில், மகிந்தவை உடனடியாக தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். அதாவது, நல்லாட்சி அரசின் ஒப்பந்தத்தை உடனடியாக இரத்து செய்தால், அரசே இருக்காது.

இதனால், நாட்டில் புதிய தலைமை அமைச்சர் ஒருவரை நியமித்தே ஆக வேண்டிய நிலைமை ஏற்படும். இதற்கு, உடனடியாக மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமிக்க வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு" என்றார்.

# தற்போது ஜனநாயகம் உயர்ந்த இடத்தில்உள்ளது

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

தற்போதைய அரசு ஜனநாயகத்தைஉயர்ந்தபட்சஅளவில்நடைமுறைப்படுத்தியிருப்பதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஆயிரம்குளங்கள், ஆயிரம் கிராமங்கள் வேலைத்திட்டத்தின் 324 ஆவது திட்டத்தை வீரக்கெட்டிய மெதகமபிரதேசத்தில்ஆரம்பித்து வைத்த பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது அரசில் உள்ள பிரதிஅமைச்சர்ரஞ்சன்ராமநாயக்கபிணைமுறிவிவகாரத்தில் சிலரின் பெயரை பகிரங்கமாகக் கூறி லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடுசெய்துள்ளார். அவர் தொடர்பில் எங்கள் மத்தியில்வாதப்பிரதிவாதங்கள் இருந்தாலும் அரசில் உள்ள சிலருக்கு எதிராக இருந்தாலும் முறைப்பாடு செய்வதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறுமுறையிடவேண்டாம் என்று அரச தலைவரோ, தலைமை அமைச்சரோ கூறவில்லை. அந்தளவிற்கு ஜனநாயகம் இந்த நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால், மக்களோ அடிமை அரசியலுக்கு அடிபணியும் நிலை உருவாகியிருக்கின்றது- என்றார்.

# ஜொன்சனின் பிணை மனு நீதிமன்றால் நிராகரிப்பு

கொழும்பு, செப். 18

விளக்கமறியலில் இருக்கும் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜொன்ஸ்டன் பெர்ணான்டோவின் பிணை மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிணை மனு மீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிபதிகளான அச்சல வெங்கப்புலி மற்றும் ஜனக் த சில்வா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சதொச நிறுவனத்திற்கு சொந்தமான அரச நிதியை கடந்த அரசில் அமைச்சராகவிருந்த போது, முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றஞ் சுமத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


நாடாளுமன்ற உறுப்பினர் ஜொன்ஸ்டர்ன் பெர்னாண்டோ, லக் சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நலீன் பெர்ணேன்டோ மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் பிரத்தியே செயலாளர் மொஹமட் ஷாகிர் ஆகியோர் மீதே இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

### .போதைப்பொருள் தொடர்பில் முறைப்பாடு வழங்க சிறப்புப்பிரிவு

கொழும்பு, செப் 18

போதைப்பொருள் நடவடிக்கை தொடர்பில் முறைப்பாடு வழங்க பொலிஸ் தலைமையகத்தில் சிறப்பு பிரிவொன்று நிறுவப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த சிறப்பு பொலிஸ் பிரிவானது இன்று தொடக்கம் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

மேலும் போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் கடத்தல் போன்ற போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களையும் பொது மக்கள், 0113024803/0113024815/0113024820/0113024848/0113024850 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியுமென பொலிஸ் ஊடகப் பிரிவு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.



### தண்ணீருக்கு திண்டாடும் மக்கள்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் உள்ள ரங்கன் குடியிருப்பு மக்கள் குடிதண்ணீர் இன்றி அல்லல்படுகின்றனர். தமது குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க உரிய அதிகாரிகள் ஆவண செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்தப் பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-105)

# மீனவர்களின் பிரச்சினையை அரச மட்டத்தில் பேசித் தீர்க்கலாம்

## சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, செப் 18

இலங்கை இந்திய மீனவர்கள் தொடர்பாக ஏற்படுகின்ற பிரச்சினை அரச மட்டத்தில் நாங்கள் தீர்த்துக் கொள்ளலாம். கடலோர பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்ளலாம். இதனால் நாங்கள் புரிந்துக் கொள்ள வேண்டியது. மீனவர்களும் வாழ்க்கை போராட்டத்தில் தான் இருக்கின்றார்கள். அவற்றிருக்கு நாங்கள் அரசியலை புகுத்தக்கூடாது. ஆகவே இந்த மீனவ பிரச்சினையை மனிதநேய அடிப்படையில் நோக்கப்பட வேண்டும் என இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனின் 102ஆவது பிறந்த தின நிகழ்வுகள் அவர் பிறந்த ஊரான கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கை நாட்டில் பிறந்து இந்தியாவில் பிரகாசித்த எம்.ஜீ.ஆரை பாராட்டுவது எங்களது கடமை என நான் நினைத்தேன். நாங்கள் மிக அன்பாக போற்றுகின்ற எம்.ஜீ.அர் ஒரு பொக்கிஷமாக நாங்கள் தமிழகத்திற்கு கொடுத்திருக்கின்றோம்.

அதேபோன்று எங்களுடைய தமிழக கல்வி அமைச்சர் செங்கோட்டையனின் இலங்கை பயணமானது வரலாற்றில் இடம்பெறக்கூடிய ஒரு சிறப்பு நிகழ்வாக நான் அறிவிக்கின்றேன்.

இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. அந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக எங்களது உறவுபாலத்தில் பல்வேறு மாற்றங்களும், தாக்கங்களும் ஏற்பட்டிருந்தன.

ஆனால் இப்போது நினைத்து பார்க்கின்றேன். அன்று அவ்வாறான ஒரு சூழ்நிலை எற்படாமல் இருந்திருந்தால் இன்று நாங்கள் இருக்கின்ற வாய்பை விட மிக சந்தோஷமாக இருந்திருக்கலாம்.

இலங்கை அரசு என்ற ரீதியிலும், உயர்மட்ட ரீதியான ஒரு குழுவினராக நாங்கள் தமிழ்நாட்டிற்கு சென்று தமிழகத்துடைய எல்லா தலைவர்களையும் பார்த்து எங்களுடைய நல்லெண்ண முயற்சிகளை வலுவடைய செய்வோம் என நம்பிக்கை தெரிவித்தார்.

# ஆயிரம் பேர் நிர்வாணமாக காட்டுக்குள் களியாட்டம்

## வளைத்துப் பிடித்தது பொலிஸ்

சீகிரியா, பஹத்கம காட்டுக்குள் நடத்தப்பட்ட ஆபாசக் களியாட்ட நிகழ்வொன்று பொலிஸாரால் சுற்றிவைளக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு இளம் பெண்கள் நிர்வாணமாக இருந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சீகரிய பஹத்கமவில் காணப்படும் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் 3 நாள்களை கொண்ட ஆபாச களியாட்ட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கான அனைத்து வசதிகளும் மிகவும் நுட்பமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நவீன வசதியிலான மலசலகூட வசதிகள், குடி நீர் வசதிகள், படுக்கை அறைகள், மற்றும் பல்வேறு வகையான உணவுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த விருந்தில் பங்கேற்கும் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் ரூபா வீதம் மூன்று நாள்களுக்கு 90 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

இந் நிகழ்வுக்கான நுழைவுச்சீட்டு இணையத்தளம் மற்றும் குறித்த நிகழ்வு இடம்பெற்ற இடங்களிலும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தை அறிந்து அதிகாலை ஒரு மணிக்கு சென்ற பொலிஸார் குறித்த இடத்தை சுற்றி வளைத்துள்ளனர்.

300 க்கும் அதிகமான மதுபான போத்தல்களும், ஆயிரத்து 500 பியர் டின்களும் பெருந்தொகையான ஆணுறைகள், கருத்தடை மாத்திரைகளும் இதன்போது மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

## 19ஆவது திருத்தத்தால் பிரச்சினை இல்லையாம்

கொழும்பு, செப். 18
மக்கள் விடுதலை முன்னணி சமர்ப்பித்திருக்கும் 20 ஆவது திருத்தம் நாட்டுக்கு தேவையற்ற ஒன்று. ஆனால்19ஆவதுதிருத்தத்தில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அநுராதபுரம் ஜயசிறி விகாரைக்கு வழிபாடுகளை மேற்கொள்ள மகிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். அதன்பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கும் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் வெற்றியளிக்கப்போவதில்லை. அவ்வாறு அதனை நிறைவேற்றவேண்டுமாகஇருந்தால் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டி வரும். குறுக்கு வழியால் சென்று இதற்கு அங்கீகாரம்பெறவேமுயற்சித்தனர்.

இதற்குநீதிமன்றம்ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்ற நம்பிக்கை எங்களுக்குஇருக்கின்றது. எந்த திட்டமிடலும் இல்லாமலேயே இவர்கள் இந்த திருத்தத்தை மேற்கொண்டுள்ளனர் -என்றார்.

# மகிந்தவைத் தலைவராக தமிழர் ஏற்க வேண்டுமாம்

### பியசேன கூறுகின்றார்

கொழும்பு, செப். 18

முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவை தமிழ் மக்களின் தலைவராக தமிழர்கள் ஏற்று அங்கீகரிக்க வேண்டும். எத்தனையோ நன்மைகளை தமிழ் மக்களுக்கு பெற்று கொடுத்திருக்கின்றபோது ஏன் நாம் அவரை தமிழ் மக்களின்தலைவராகஏற்றுக்கொள்ளமுடியாது. எனமுன்னாள்நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொத்துவில் தொகுதி அமைப்பாளருமான பொடியப்பு பியசேன தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்பாட்டை காரைதீவில் வலுப்படுத்துவது தொடர்பான கூட்டம் நேற்றுமுன்தினம் காரைதீவுபிரதேசஅமைப்பாளர் பி. ரி. தர்மலிங்கம் தலைமையில் அவரது அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே பியசேன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது தலைவர் மகிந்த ராஜபக்ச அண்மையில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அங்குஅவருக்குமிக மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. மகிந்த யுகம் மீண்டும் வெகுவிரைவில் நிச்சயம் மலரும் என்கிற மகிழ்ச்சியான செய்திஎமக்குஇதன்மூலம்வெளிப்பட்டு நிற்கின்றது.

இன்னொருவகையில்சொல்வதானால் மக்கள்மகிந்தராஜபக்சவுடன்ஒன்றித்து நிற்பதால்மகிந்த யுகம் வெகுவிரைவில் மீண்டும் மலர்வது நிச்சயம் என்பதை இந்தியாஅடையாளம்கண்டுஉள்ளது. அதாவது அவரின் கைகளை முறிக்க முடியாது என்பதை உணர்ந்து அவற்றை முத்தமிடுகின்றது. இதே நிலைப்பாட்டுக்குதான் உலக நாடுகள் அனைத்தும் வந்து உள்ளன.

சிங்கள மக்கள் மகிந்த ராஜபக்சவுக்கு பின்னால்அணிதிரண்டுநிற்கின்றனர். தமிழ் மக்களுக்கு உண்மையான தலைவர்கள் யாரும் இது வரையில் கிடைக்கவே இல்லை. தமிழ் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் பெற்றுக்கொடுக்கவில்லை. மாறாக தமிழ் மக்களை மாறாத துன்ப சக்கரத்துக்குள் தள்ளி இருக்கின்றார்கள்.

எனவே இந்நாட்டின் உன்னத தலைவரான மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் தலைவராக தமிழர்கள் ஏற்று அங்கீகரிக்க வேண்டும். ஒரு இனத்தின் உண்மையானதலைவன்இன்னொருஇனத்துக்குஎதிரானவனாகஇருக்கமாட்டான். காந்திஜி இலங்கை தமிழ் மக்களுக்கு எந்த நன்மையையும் செய்து இருக்கவில்லை.

ஆனால் அவரை நாமும் மகாத்மா என்று கொண்டாடுகின்றோம். அப்படியாயின் மகிந்த ராஜபக்ச எத்தனையோ நன்மைகளைதமிழ்மக்களுக்குபெற்று கொடுத்திருக்கின்றபோது ஏன் நாம் அவரை தமிழ் மக்களின் தலைவராக ஏற்று கொள்ள முடியாது என்று வினவ விரும்புகிறேன்- என்றார்.

## நாட்டின் விவசாயத் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

### அரச தலைவர் பெருமிதம்

கொழும்பு, செப்.18
நாட்டின் விவசாயத் துறையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனதெரிவித்தார்.

எம்பிலிட்டிமகாவலிவிளையாட்டரங்கில்நேற்றுமுன்தினம்இடம்பெற்ற30ஆவது மகாவலி விளையாட்டு நிகழ்வுஇடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னைய அரசினால் நிறைவேற்றப்படாதிருந்த பல செயற்பாடுகள் கடந்த மூன்று வருட காலத்தில் தற்போதைய அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ளது
பண்டைய மன்னர் காலந்தொட்டு எமது நாடு தன்னிறைவடைவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது விவசாயத்துறையே. எதிர்காலத்திலும் விவசாய பொருளாதாரத்தின் அடிப்படையிலேயே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

நாட்டின் உற்பத்தி செயற்பாட்டில்சிறப்புபங்களிப்பை செலுத்திவரும் மகாவலி விவசாய மக்களை பலப்படுத்துவதற்காக அரசு என்ற வகையில் வழங்கக்கூடிய சகலஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். என்றார்.

மகாவலி வலய விவசாயக் குடும்பங்களின் பிள்ளைகளது விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தும் நோக்கில் மகாவலி விளையாட்டு நிகழ்வு வருடம்தோறும் இடம்பெறுகிறது.

"தன்னிறைவுமிக்க யுகம் மகாவலி இளம் சமுதாயத்திற்கு உயரிய மதிப்பு" என்ற தொனிப்பொருளின் கீழ் இம்முறை இந்த நிகழ்வு ஆரம்பமானது.

10 மகாவலி வலயங்களையும்சேர்ந்தசுமார்3ஆயிரம் விளையாட்டு வீர, வீராங்கனைகள்கலந்துகொண்டதுடன், தேசியமட்டத்தில்இடம்பெறும்42போட்டிநிகழ்வுகளும்இதன்போதுஇடம்பெற்றன.

நிகழ்வில்அமைச்சர்களான மகிந்தஅமரவீர, தலதாஅதுகோரள, இராஜாங்கஅமைச்சர் வீரகுமார திசாநாயக்க, மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய உள்ளிட்ட மக்கள்பிரதிநிதிகளும் அரச தலைவரின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன, மகாவலிஅபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க, மகாவலிஅதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் சரத் சந்திரசிறி விதான ஆகியோர்கலந்துகொண்டனர்.

## பன்னாட்டு கரையோர தூய்மைப்படுத்தல் தின நிகழ்வு

கொழும்பு, செப்.18
பன்னாட்டு கரையோர தூய்மைப்படுத்தல் தினத்தையொட்டிஏற்பாடுசெய்யப்பட்டகரையோரதூய்மைப்படுத்தல்தினதேசியநிகழ்வு நேற்றுமுன்தினம் காலி தடல்ல கடற்கரையில் இடம்பெற்றது.

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவின் எண்ணக்கருவிற்கமைய தேசிய கரையோர தூய்மைப்படுத்தல் மற்றும் கடல்சார் வளங்களின்பாதுகாப்புவாரமும்இதனோடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

செப்டெம்பர்15ஆம்திகதிதொடக்கம்22ஆம் திகதிவரைகரையோரப்பாதுகாப்புவாரமாக கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இந்த வாரத்தில் கடற்கரைகள் மற்றும் கடல்சார் சூழலை தூய்மைப்படுத்தும் சுமார் 100 செயற்திட்டங்கள்நாட்டைசூழவுள்ள14கரையோர மாவட்டங்களில் கடல்சார் சூழல் பாதுகாப்புஅதிகாரசபையினால்ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

சகலகரையோரமாவட்டங்களிலும்அமைச்சுக்கள், திணைக்களங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்ட செயலகங்கள், முப்படையினர், பொலிஸார், சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைமாணவர்கள்ஆகியோரின்பங்குபற்றலில் இந்த செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

2017ஆம்ஆண்டில்இலங்கைஐக்கியநாடுகள் சபையின் தூய்மையான கடற்பரப்பு செயற்திட்டத்துடன் இணைந்துகொண்டது. 2018ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளிடையே கண்டல் தாவரங்களை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் முதன்மையான நாடாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது.

அதற்கமைய பன்னாட்டு ரீதியில் கண்டல் தாவர பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக கண்டறியவும்அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குமான குழு இலங்கையின் தலைமையில் பெயரிடப்படவுள்ளது.

நிகழ்வில்அமைச்சர்கயந்தகருணாதிலக்க, இராஜாங்க அமைச்சர்பியசேனகமகே, சுற்றாடல் பிரதியமைச்சர் அஜித் மான்னப்பெரும, தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டிஆரச்சி, மாகாண அமைச்சர்யூ.டீ.ஆரியதிலக, கடல்சார்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற ரியல் அட்மிரல் ரோஹண பெரேரா, பொது முகாமையாளர் கலாநிதி டர்னி பிரதீப் குமார உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பிரதேச சபைத் தலைவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, செப். 18
புத்தளம்பிரதேசசபைத்தலைவர் அஞ்சன சந்தருவனை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிணை நிபந்தனைகளை மீறினார் என்ற குற்றச்சாட்டிலேயேஅவருக்குஇந்தவிளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை வழக்கு முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.கே.எம். படபெதிகே உத்தரவிட்டுள்ளார்.

மதுரங்குளி பகுதியில், 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி, துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் அஞ்சன சந்தருவன் மீது புத்தளம் மேல்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

விசாரணைகளின்போது, பிணை நிபந்தனையாக வெளிநாட்டிற்கு செல்வதற்குத்தடைவிதித்துநீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும், அஞ்சன சந்தருவன் பிணை நிபந்தனைகளை மீறிகடந்த 9 ஆம்திகதி வெளிநாட்டிற்கு செல்வதற்கு முயற்சித்த வேளையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்தே அவரை வழக்கு நிறைவடையும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## வெகுவிரைவில் செயற்பாட்டு அரசியலில் களமிறங்குவேன்

### திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு,செப்18
வெகுவிரைவில் செயற்பாட்டு அரசியலில் களமிறங்குவேன். தனிக்கட்சிக்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக திஸ்ஸ அத்தநாயக்க களமிறங்கவுள்ளார் என்று வெளியாகியுள்ள தகவல் குறித்து தமிழ் ஊடகம்ஒன்றுவினவியபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின்அரசியல்நிலவரத்தை உன்னிப்பாக அவதானித்துவருகின்றேன். முதன்மைக்கட்சியொன்றின் பொதுச் செயலாளராக இருந்து பல தேர்தல்களை சந்தித்தவன் நான். எனவே, நேரம் வரும்போது மீண்டும் செயற்பாட்டு அரசியலில் இறங்குவேன். அதற்கான நேரம் நெருங்கிவிட்டதாகவே உணர்கின்றேன்.

மாகாண சபைத் தேர்தல் என் இலக்கு அல்ல. நாட்டின்நலன் கருதியே இனி அரசியல்பயணம்தொடரும். அரசியல் சூழ்நிலைக்கேற்ப முடிவுகள் மாறக்கூடும் என்றார்.



இதேவேளை, திஸ்ஸ அத்தநாயக்க ஐக்கிய தேசியக்கட்சியில்இணையும்பட்சத்தில்அல்லதுமகிந்த அணியுடன் பயணிக்கும் பட்சத்தில் மத்திய மாகாணமுதலமைச்சர்வேட்பாளராகக்களமிறங்கக்கூடும் எனத் தெரியவருகின்றது.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சுடலை ஞானம்

கூட்டு அரசுடன் இதுவரைகாலமும் கடைப்பிடித்து வந்த அணுகுமுறையில் மாற்றம் செய்யப்போவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறியுள்ளது. அதற்கான நேரம் வந்து விட்டதாகவும் அது தெரிவித்துள்ளது. கூட்டமைப்பின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படுவது வரவேற்கத்தக்கது. ஆனால், இது காலம் பிந்திய ஞானம். இற்றைக்கு சுமார் ஓராண்டுக்கு முன்னர் எடுத்திருக்க வேண்டிய தீர்மானத்தை, இப்போது அந்தக் கட்சி எடுத்துள்ளது.

தியாகி திலீபனின் நினைவேந்தல் நாள் ஆரம்ப நிகழ்வு கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பங்கேற்று உரையாற்றியிருந்தார்.

அவர் தனது உரையில், நாங்கள் தற்போது அணுகுமுறையைச் சற்று மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. ஏனென்றால், இந்த ஆட்சியின் காலம் முடிவடையப் போகின்றது. நாங்கள் எங்கள் அணுகுமுறைகளைச் சற்று மாற்றுவோம் என்றார்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை 2015ஆம் ஆண்டு அகற்றி, மைத்திரிபாலவை அரியணையில் அமர்த்தியதில் கூட்டமைப்பின் பங்கு அதிகம்தான். ஆட்சிப்பீடமேறியவுடன் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட முடியாது. மைத்திரி–ரணில் ஆட்சிக்கு நெருக்கடி கொடுத்தால் மீண்டும் மகிந்த ஆட்சிக்கு வந்துவிடுவார். இந்த இரண்டு கோசங்களையும் முன்வைத்தது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு. கூட்டு அரசுக்கு நெருக்கடி வராது பாதுகாத்துக் கொண்டது.

மைத்திரி –ரணில் கூட்டு அரசு பதவியேற்ற ஆரம்பத்தில், கூட்டமைப்புக் கூறிய காரணங்களைத் தமிழ் மக்கள் சகித்து ஏற்றுக் கொண்டார்கள். ஆனாலும், காலம் செல்லச் செல்லக் கூட்டு அரசு தனது பாதையிலிருந்து பிறழ்ந்து, மகிந்தவின் தடத்தில் பயணிக்கத் தொடங்கியது. அப்போதும் கூட்டமைப்பு, கூட்டு அரசுக்கு முட்டுக் கொடுப்பதை நிறுத்தவில்லை. புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி குழம்பிப்போய்விடும். இந்த முயற்சியை நாம் குழப்பியதாக இருக்கக் கூடாது. இந்தக் காரணங்களைக் கூறி, கூட்டு அரசை ஆதரிக்கும் தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தியது கூட்டமைப்பு.


கூட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்காமல், மயிலிறகால் அவர்களை வருடும் கூட்டமைப்பின் போக்கு தமிழ் மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் அதை வெளிப்படுத்தியும் இருந்தனர். ஆனாலும், அதன் பின்னரும் கூட்டு அரசுடனான அணுகுமுறையில் கூட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குள்கூட இது பெரும்சர்ச்சையை உருவாக்கியிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கூட்டு அரசுக்கு நெருக்கடி கொடுக்காமல், இணைந்தோடும் போக்குடன் செயற்படுவதானது கூட்டமைப்பின் ஏனைய தலைவர்களிடத்தில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

இதன்போதெல்லாம் அசராத கூட்டமைப்பின் தலைமை, இந்த அரசின் பதவிக் காலம் முடிவடைய வுள்ளதால் தமது அணுகுமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நேரம் வந்திருப்பதாக இப்போது கூறியுள்ளது. இந்த மாற்றத்தை இன்னும் ஓராண்டு முன்னதாகக் கூட்டமைப்பு ஏற்படுத்தியிருந்தால், கூட்டு அரசைக் கொண்டு சில விடயங்களையாவது சாதித்திருக்கலாம்.

பதவி முடியும் தருணத்தில், ஆட்சியை மீண்டும் பிடிப்பதற்கான போட்டியில் நாட்டின் தலைவர்கள் குதித்துள்ள நேரத்தில், கூட்டமைப்பின் அணுகுமுறை மாற்றத்தால் கூட்டு அரசை வழிக்குக் கொண்டு வரமுடியுமா?

கூட்டமைப்பின் சுடலை ஞானத்தால் ஆகப்போவது எதுவுமில்லை.

# இந்திய -இலங்கை அரசுகளைத் தமிழர்கள் இனியும் நம்பலாமா?



இந்துமதி

இலங்கையில் மீண்டும் போர் ஏற்படுவதற்கு இந்தியா அனுமதிக்கமாட்டாதெனவும், தாம் எப்போதும் தமிழர்களுக்கே ஆதரவாக இருக்கப் போவதாகவும் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி, கூட்டமைப்பின் தலைவரிடம் உறுதியளித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தகைய உறுதிமொழிகள் இலங்கைத் தமிழர்களுக்குப் புதிதானவையல்ல. இந்தியத் தலைவர்கள் வாக்குறுதிகளை வழங்குவதும் பின்னர் அவற்றை மறந்து விடுவதும் வழக்கமாகி விட்டது. தமிழர்களை அவர்கள் குறைவாக மதிப்பிடுவதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

### அக்கறைகொள்வதாகக் காட்டிக்கொள்கிறது இந்தியா

இந்தியா, தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பான விடயத்தில் அக்கறை காட்டுவதாகக் காட்டிக் கொள்கின்றது. இதே இந்தியா மனம் வைத்துச் செயற்பட்டியிருந்தால் அரசியல் தீர்வு எப்போதோ கிடைத்திருக்கும். தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய தேவையும் எழுந்திருக்காது. தமிழ்மக்கள் இவ்வளவு அவலங்களை எதிர் கொண்டிருக்கவும் மாட்டார்கள்

தமிழ் அரசியல்வாதிகள் இந்தியாவுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இந்திய எந்தவகையிலாவது தீர்வைப் பெற்றுத் தருமெனவும் நம்பினார்கள். இந்தியாவின் கபடத்தனத்தை விடுதலைப் புலிகள் நன்கு தெரிந்துகொண்டதால் இந்தியாவை நம்புவதற்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அவர்கள் முற்றாக நிராகரித்தமைக்கு இதுவே காரணமாகும். ஆனால் அன்றிருந்த தமிழ்த் தலைவர்கள் இந்த ஒப்பந்தத்தை முழு அளவில் ஆதரரித்தார்கள். இதன்மூலமாகத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமெனவும் நம்பினார்கள்.

### இந்தியத் தலையீட்டை புலிகள் விரும்பவில்லை

இந்தியப் படைகளின் இலங்கை வருகையைப் புலிகள் ஆரம்பத்திலேயே விரும்ப வில்லை. இந்தியா நயவஞ்சகமான முறையில் செயற்படுவதாக அவர்கள் கூறியது பின்னாளில் நிதர்சனமாகி விட்டது. ஆனால் தமிழ்த் தலைவர்கள் புலிகளின் வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. புலிகளின் முக்கிய தளபதிகளின் உயிரிழப்புக்களுக்குப் பின்னால் இந்திய அரசு செயற்பட்டமை புலிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியதால் இந்தியப் படைகளுக்கும், புலிகளுக்குமிடையே போர் மூண்டது. இதில் ஏராளமான தமிழ்மக்கள் இந்தியப் படைகளால் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டனர். ஆனால் அப்போதுகூட தமிழ் அரசியல் தலைவர்கள் இந்தியாவை நம்பினர். இந்தியப் படைகளின் வருகையின் பின்னணியில் இந்தியாவின் அப்போதைய தலைமை அமைச்சராகவிருந்த ராஜிவ்காந்தி செயற்பட்டதால் புலிகள் அவர்மீது தீராத வெறுப்பைக் கொண்டிருந்தனர். இறுதியில் 1991ஆம் ஆண்டு ராஜிவ்காந்தி கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையின் பின்னணியில் பலர் இருந்ததாகக் கூறப்பட்டபோதிலும், முழுப்பழியும் புலிகளின் தலைமீதே வீழ்ந்தது.

### இறுதிப் போரில் இந்தியாவின் பங்கு


இலங்கையில் (இறுதிப் போர் இடம்பெற்றபோது) மறைந்த தலைமை அமைச்சரான ராஜிவ்காந்தியின் துணைவியார் சோனியாகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இந்தியாவில் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இந்திய அரசு இலங்கைக்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கியது. இறுதிப் போரில் இலங்கை வெற்றி பெற்றதற்கு இந்தியாவே முக்கிய காரணியாக விளங்கியது. இதனால் போரில் கொல்லப்பட்ட, காயமடைந்த, காணாமலாக்கப்பட்ட தமிழ்மக்களின் விடயத்திலிருந்து இந்தியா விலகிநிற்க முடியாது. ஆனால், இந்தியா இதிலிருந்து சாதுரியமாகத் தப்பித்துக்கொண்டது. பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பாக அக்கறை எதையும் அது காட்டிக்கொரள்ளவில்லை. இந்தியா அயலுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், தலைமை அமைச்சர் நரேந்திரமோடி ஆகியோர் இங்கு வருகை தந்தபோது தமிழர்களுக்கு உதவுவதாகக் கூறிச் சென்றனர். ஆனால் எதுவுமே நடக்கவில்லை. இப்போது நரேந்திரமோடி கூட்டமைப்பின் தலைவரிடம் முன்பு கூறியதையே திரும்பவும் கூறியுள்ளார்.

### சீனாவை விரட்டுவதுதான் இந்தியாவின் நோக்கம்

இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை முறியடிப்பதில்தான் இந்தியா தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகின்றது. இதற்காக இலங்கையைக் கையில் போட்டுக்கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதனால் இலங்கையின் வெறுப்பைச் சம்பாதிப்பதற்கு அந்த நாடு விரும்பமாட்டாது. இந்த நிலையில் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பாக இந்தியா , இலங்கைக்கு நெருக்கடி கொடுக்குமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இதனால் மோடி வழங்கிய வாக்குறுதி நிறைவேறுமென எதிர்பார்க்கமுடியாது.

### தமிழ்த் தலைவர்கள் இந்தியாவை இனியும் நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை

இதேவேளை நல்லாட்சி அரசின் பொய்வேடம் மெல்ல மெல்லக் கலைந்து வருகின்றது. அரச தலைவரின் சமீபகால நடவடிக்கைகள் இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இறுதிப்போரின்போது குற்றமிழைத்த படையினரைக் காப்பாற்றுவதிலேயே அவர் கண்ணும் கருத்துமாகச் செயற்படுகின்றார். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்குமா? என்ற சந்தேகமும் எழுந்து நிற்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வும் இனப் பிரச்சினைக்கான தீர்வும், தொலைவில்கூடத் தெரிவதாக இல்லை. இந்தியத் தலைமை அமைச்சர், மகிந்தராஜபக்சவுக்கு வழங்கிய முக்கியத்துவம் தொடர்பாக அரசு கவலைப்படாமல் இருக்க முடியாது. இதனால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுமா? என்பது சந்தேகமாகவேயுள்ளது. ஆகவே தமிழர்களும் தமிழ்த் தலைவர்களும் இந்தியாவையும் இலங்கை அரசையும் நம்பிக் கொண்டிருப்பதால் பயனொன்றும் கிடைக்கப்போவதில்லை என்பதே உண்மையானது.



தேவநாயகம் தேவானந்த்

தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-35

# பனைமரத்தில வெளவாலா? தலைவருக்கே சவாலா?

“இந்தப்படை போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா? பனை மரத்தில வெளவாலா.தலைவருக்கே சவாலா?” இது தொண்டர்கள் கோட்டையைப்பிடிப்பதற்குப் போடுகின்ற கோஷம். தேர்தல் காலத்தில் தமிழ்நாட்டின் முழக்கமிது. இந்த முழக்கங்களெல்லாம் கோட்டையில் அமைந்துள்ள சட்ட மன்றத்தைக் கைப்பற்றி விடுவதற்கானது தான்.தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களினதும் கட்சிகளினதும் ஒரே இலக்கு கோட்டையைப் பிடித்துவிடவேண்டும் என்பதுதான்.

ஏனெனில், தமிழ்நாட்டின் சட்டசபை பிரித்தானியர் கட்டிய புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்திருப்பது தான் “கோட்டையைப்பிடிப்போம்” என்றுமுழங்குவதற்குக் காரணம். அரசியல் கட்சியினரின் தலையாயபணிகோட்டையைப் பிடிப்பதுதான். தமிழ்நாட்டில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக தி.மு.கவும் அ.தி.முகவும் தான் மாறிமாறிக் கோட்டையைக் கைப்பற்றுகின்றன.

தமிழகச் சட்டமன்றத்தின் வரலாறு பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்குகிறது. தமிழ்நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாணம்என்று அழைக்கப்பட்டது. தற்போதைய தமிழ்நாடு மற்றும் பட்ஒரிசா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களின் சில பகுதிகள்,தற்போதைய ஆந்திரப்பிரதேசம் ஆகியவை உள்ளடக்கியதாகச் சென்னை மாகாணம் இருந்தது.



பிரித்தானிய ஆட்சியாளர்களால் இந்தியாவில் கட்டிய முதலாவது பிரமாண்டமான கோட்டை சென்னை புனித ஜார்ஜ்கோட்டை. 1639ஆம் ஆண்டு அப்போதைய மதராஸில் இது கட்டப்பட்டது. இந்தக் கோட்டைதான் சென்னைப் பட்டணத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட மூல வேராகும். இந்தக்கோட்டையை மையமாகக் கொண்டுதான் சென்னை மாநகரம் வியாபித்து வளர ஆரம்பித்தது.

ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பெனியினராக இந்தியாவுக்குள்ளே நுழைந்தார்கள். அப்போது மேற்குக் கடற்கரைப் பகுதியில் மதராஸ்பட்டினம் அல்லது சென்னைப் பட்டினம் எனஅழைக்கப்பட்ட ஒரு நிலப்பகுதியை அந்தப்பகுதித் தலைவர் ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்கி, அதிலே ஒருதுறைமுகத்தையும், கோட்டை ஒன்றையும் கட்டத் தொடங்கினர்.

புனித ஜார்ஜ் நாளான ஏப்ரல் 23ஆம் திகதி இந்தக் கோட்டை கட்டி முடிக்கப்பட்டது. இதனால், இதற்குப் புனித ஜார்ஜ் கோட்டைஎனப் பெயரிடப்பட்டது. பின்னர் இதனைச் சுற்றிய பகுதியிலே ‘ஜார்ஜ் டவுன்’ என்னும் புதிய குடியேற்றப் பகுதி உருவாகியது. பின்னர் அதுவளர்ந்து சென்னை நகரம் உருவாகியது.

இந்தக் கோட்டைதான் சுதந்திரத்துக்குப் பின்னரும் தமிழக சட்டசபையாக இத்தனை நாள் ஓய்வின்றி இயங்கி வருகின்றது. பல்வேறு ஆட்சிகளையும், அதன் மாட்சிகளையும்,வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளையும், மறக்க முடியாத சம்பவங்களையும் மக்களின் மனதில் புனித ஜார்ஜ் கோட்டை பதிவு செய்கிறது. இங்கு அமைந்துள்ள கம்பீரம் மிகு பழைய சட்டசபை நூற்றாண்டு களை நெருங்குகிறது.

1919ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்டத்தின்கீழ் சென்னை மாகாண சட்ட மன்றம் 1921ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 1921ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் நாள் சென்னை சட்டமன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

இதன் பின்னர், 1935ஆம் ஆண்டின் சட்டத்தின்கீழ் சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு மேல் அவை,கீழ் அவை என இரண்டு அவைகள் உருவாக்கப்பட்டன. இந்த இரண்டு அவைகளும், ஆளுநரும் சேர்ந்து மாகாணசட்டமன்றம் என அழைக்கப்பட்டது.

1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு 1952ஆம் ஆண்டில் இந்தியா குடியரசானது. இந்திய அரசமைமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. அதனடிப்படையில் 1952ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாவது பொதுத்தேர்தல் இந்தியாவில் நடைபெற்றது. வயது வந்தோருக்கான வாக்குரிமையின் அடிப்படையில் நடத்தப்பட்ட இந்தத் தேர்தலைத் தொடர்ந்து சுதந்திரத்துக்குப் பின்னர் சென்னை மாநிலத்தின் முதலாவது சட்டமன்றம் 1952ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி அமைக்கப்பட்டது.

1967ஆம் ஆண்டில் தி.மு.க முதல் முதலாகச் சென்னை மாநில ஆட்சியைக் கைப்பற்றியது.சி. என். அண்ணாத்துரை முதலமைச்சரா னார். இந்தக்காலத்தில் தான் முக்கியமான வரலாற்று நிகழ்வு நடைபெற்றது.சட்டசபையில் சென்னை மாநிலம் நடை என்ற பெயரைத் தமிழ் நாடு என்று மாற்றும் சரித்திரப் புகழ் பெற்ற தீர்மானத்தை அறிஞர் அண்ணா கொண்டுவந்து நிறைவேற்றினார்.

1967ஆம் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுத்தான் தி.மு.க முதல் முதலாக ஆட்சியைப் பிடித்தது. சைதாப்பேட்டைத் தொகுதியில் போட்டியிட்டார் கருணாநிதி. தன்னை எதிர்த்து நின்ற காங்கிரஸ் வேட்பாளர் விநாயக மூர்த்தியைவிட 20 ஆயிரத்து 484 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

அண்ணா இறந்தபின்னர் நடைபெற்ற தேர்தலில் கருணாநிதி கோட்டையைக் கைப்பற்றினார். அப்போது முதலமைச்சர்கள் சுதந்திரதினம்,குடியரசு தினங்களில் கொடியேற்ற முடியாதநிலை இருந்தது. ஆளுநர் தான் தேசியக் கொடியை ஏற்றுவார். இந்தநிலை 1974ஆம் ஆண்டு வரை இருந்தது. இந்த வழக்கத்தை அப்போதைய இந்தியத் தலைமை அமைச்சராகவிருந்த இந்திராகாந்தியிடம் இது குறித்துப்பேசி, முதல்வர்கள் சுதந்திரதினத்தன்று கொடியேற்றும் வழக்கத்தை உருவாக்கினார். கருணாநிதி 1974ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் திகதி புனித ஜார்ஜ் கோட்டையில் கருணாநிதிகொடியேற்றினார். அதுவரலாறாகியது. இந்திய வரலாற்றில் சுதந்திர தினத்தன்று கொடியேற்றிய முதல் முதலமைச்சர் என்ற பெருமையைக் கருணாநிதி பெற்றுக் கொண்டார்.

## ஆசிரியருக்கான கடிதம்

# பஸ்களில் பொருத்தப்பட்டுள்ள பாட்டுப்பெட்டிகள் குறித்துக் கரிசனை தேவை!

போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்களில் பயணிகளாகிய நாம் பயணம் செய்யும்போது மௌனம் சாதிக்க வேண்டும் என்பதையா பஸ் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் விரும்புகிறார்கள்?

நாம் பயணம் செய்யும் தனியார் பஸ்கள், அரச பஸ்களில் பொருத்தப்பட்டிருக்கும் பாட்டுப் பெட்டியை மிக மிக உரத்த சத்தத்துடன் ஒலிக்க விடுகிறார்கள். இதை அன்றாடம் நாம் காண்கிறோம். இவைகளைப் பாவிக்க வேண்டாம் என நாம் கூறவில்லை. மாறாக மெல்லிய சத்தத்துடன் காதுகளுக்கு இனிமை பயக்கும் விதமாக ஒலிக்க விடுங்கள் என்றுதான் கேட்கின்றோம்.

ஏனெனில் பஸ்சில் பயணம் செய்யும் சில தருணங்களில் மிக அத்தியாவசியச் செய்திகளை நாம் அவ்வேளையில் சந்திப்பவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. சிலவேளைகளில் அவசரமாகக், கட்டாயமாகக் கைபேசிகளைப் பாவிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவற்றை விடுத்துச் சக பயணியுடன், சகோதரருடன் சுவாரசியமாகப் பேசியும் கொள்கிறோம். சிலவேளைகளில் பஸ் நடத்துநர் கூறுவதைக்கூடச் சற்று நிதானமாகக் கேட்கவேண்டிய சந்தர்ப்பம் வருகிறது. இவ்வாறான நேரங்களில் இந்தப் பாட்டுப் பெட்டியின் சத்தங்கள் இடையூறாக இருக்கின்றன. பயணத்தின்போதான மனநிலைக்குப் பாட்டுக்கள் அவசியமானவையா? என்பது பற்றிப் பெருமளவில் பேசலாம். ஆனால் பலவகைப்பட்ட மனிநிலையாளர்களும் பயணம் செய்வதால் அதிக சத்தமிடும் பாட்டுப் பெட்டிகள் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. அத்துடன் இரசிக்கத்தக்கதாகவும் பாடல்கள் இருப்பதில்லை. போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பஸ் வண்டிகளின் தரம், வீதிகளின் தரம் என்பவற்றால் பஸ்சுக்குள் ஏலவே ஒருவகைப் பேரிரைச்சல் நிறைந்திருக்கும் அதற்குள் பாட்டுப்பெட்டியும் இணைந்து கதறிக்கொண்டு இருக்கும்.

பஸ் பயணிகளுக்கு இடையூறுகளை விளைவிப்பது தண்டனைக்குரிய குற்றம் என வெளிநாடுகளில் சட்டம் கடைப்பிடிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆகவே, பெதுமக்களின் நன்மை கருதி இந்த விடயத்தில் உரிய தரப்பினர் மிக மிக அக்கறை உள்ளவர்களாகச் செயற்படுவது சிறந்தது. தயவுசெய்து பொறுப்பானவர்கள் இந்தவிடயத்தில் கவனம் எடுக்குமாறு மிகமிக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*அல்விறெட் சில்வா,*
*தலை மன்னார்.*

# போதை மாத்திரைகள் அருந்திய இருவர் சாவு


### ஆஸ்திரேலியாவின் இசை நிகழ்ச்சியில் சம்பவம்


சிட்னி.செப்.18

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின்போது அளவுக்கு அதிகமான போதை மாத்திரைகளை அருந்தியதால் 23வயதான ஆண் ஒருவரும், 21 வயதான பெண் ஒருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 2009ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுதோறும் இசைத் திருவிழா ஒன்று கோலாகலமாக நடைபெற்று வருவது வழக்கம். கடந்த சனிக்கிழமை அந்த இசைத்திருவிழா நடைபெற்றது. அந்தத் திருவிழாவில் கலந்து கொண்டவர்கள் போதை மாத்திரைகளை உள்ளெடுத்து உற்சாகத்தில் மிதந்தனர்.

சிலர் அளவு கடந்து போதை மாத்திரைகளை உள்ளெடுத்ததால் மயங்கிச் சரிந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இருந்தும், 23வயதான ஓர் ஆணும், 21வயதான ஒரு பெண்ணும் பரிதாபமாக உயிரிழந்தனர். 10க்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இதன் எதிரொலியாக அவ்விடத்தில் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்த 10பேர் மீது சிட்னிப் பொலிசார் வழக்குப் பதிவு செய்து உள்ளனர். 2013ஆம் ஆண்டு மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இசைத் திருவிழாக்க ளின்போது போதை மாத்திரை அருந்தி இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.









# சீனாவில் 'மாங்குட்' அட்டகாசம்

# 4பேர் சாவு!


## 25இலட்சம்பேர் இடப்பெயர்வு!

பீஜிங்.செப்.18

பிலிப்பைன்சைத் தாக்கிவிட்டுச் சீனா நோக்கி நகர்ந்துகொண்டிருந்த 'மாங்குட்' எனப் பெயரிடப்பட்டிருக்கின்ற சுழல் காற்று நேற்றுச் சீனாவின் கரையோர நகரான ஹொங்கோங்கைத் தாக்கியுள்ளது. இதில் நேற்றுவரை நால்வர் சாவடைந்துள்ளனர். அந்த நகர் முழுதும் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் சக்தி வயந்த புயலாகக் கருதப்பட்ட மாங்குட் புயல் பிலிப்பைன்ஸைத் தாக்கியதில் 59பேர் பலியாகியிருந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி மாற்று இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தக் காற்று முழுதாகவே பிலிப்பைன்சை விட்டகன்றது. இந்தச் சுழல் காற்றுக்காரணமாகப் பிலிப்பைன்சில் வீடுகள், தொழில் நிறுவனங்கள் என அனைத்தும் பலத்த சேதத்துக்குள்ளாகின.

பல இடங்களில் நிலச்சரிவுகள் மற்றும் மரங்கள் சரிந்து வீதிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.



மீட்புப் பணி வீரர்கள் துரிதமான மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் சீனா நோக்கி நகர்ந்த மாங்குட் புயல் தற்போது சீனாவின் தென்பகுதி மற்றும் ஹொங்கொங்கில் தனது தாக்கத்தைக் காட்டி வருகிறது.

இதில் சீனாவில் இதுவரை 4பேர் சாவடைந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென் சீனாவின் கரையோர நகரமான ஹொங்கொங்கில் குறித்த புயல் மையம் கொண்டதால், அங்கிருந்த 25இலட்சம் மக்கள் இடப்பெயர்ந்திருக்கின்றனர். ஹொங்கொங்கைத் தாக்கிய மாங்குட் சூறாவளி சீனாவின் மிக அதிக மக்கள்தொகை கொண்ட குவாங்டாங் மாகாணத்தையும் தாக்கியுள்ளது. அங்கும் கடும் சேதத்தை விளைவித்திருக்கிறது.

அந்த மாகாணத்தில் சுமார் 162கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசி வருவதுடன், கடும் மழையும் பொழிந்து வருகிறது. சுமார் 2.45மில்லியன் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். சீனாவின் தெற்குக் கடலோர நகரமான ஜியாங்மென்னையும் இந்தப் புயல் தாக்கியிருக்கிறது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டதுடன், அங்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

ஹாங்காங்கில் தொடர்ந்து வீசி வரும் அதிவேக காற்று மற்றும் கனமழையின் காரணமாக அங்குள்ள பெரும்பாலான கடைகள் மூடப்பட்டுள்ளன, விமானச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அந்த நகர மக்களை வீட்டுக்குள்ளே இருக்கும்படியும், பறந்து வரும் பொருள்கள் ஜன்னலை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் பாயும் என்பதால் ஜன்னல் அருகே அமரவேண்டாம் என்றும் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன,

பிலிப்பைன்சைத் தொடர்ந்து சீனாவில் பல அழிவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் மாங்குட் 2018ஆம் ஆண்டின் வலிமைமிக்க புயலாகக் கருதப்படுகிறது.

# சுறா தாக்கியதில் இளைஞர் சாவு!

வோசிங்டன். செப்.18

அமெரிக்காவின் நியூகோம்ப் ஹாலோ கடற்கரையில் சுறா தாக்கியதில் இளைஞர் ஒருவர் சாவடைந்திருக்கிறார். அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாகாணம், நியூகோம்ப் ஹாலோ கடற்கரையில் கடந்த சனிக்கிழமையன்று இளைஞர் ஒருவரை பயங்கரமான சுறா ஒன்று தாக்கியுள்ளது. அவரது அலறல் கேட்டு அங்கு இருந்தவர்கள் அவரை மீட்டு முதலுதவி அளித்து, மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றனர். ஆனால், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி சாவடைந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அடுத்த 24மணி நேரத்துக்கு நியூகோம்ப் ஹாலோ கடற்கரையில் நீச்சல் வீரர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. 1936ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த மாகாணத்தில் சுறா தாக்கி உயிரிழந்து இருப்பது இதுவே முதல் முறை எனத் தகவல்கள் கூறுகின்றன. இருப்பினும் இதே கடற்கரையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 61 வயதான நரம்பியல் மருத்துவ நிபுணர் வில்லியம் லிட்டன் சுறாத் தாக்குதலுக்கு ஆளாகியிருந்தார். கால்களில் படுகாயம் அடைந்த அவர் மருத்துவமனையில் இன்னும் சிகிச்சைபெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# தலிபான்கள்

காபூல்.செப்.18

ஆப்கானிஸ்தானில் பொலிசா
ளுக்கு இடையே நடந்த துப்பா
பான்களும் 5பொலிசாரும் சா
கானிஸ்தானில் வடமேற்குப் ப
பகுதியில் உள்ள காவல் நிை
காலை தலிபான்களுக்கும்
இடையே கடுமையான துப்பாக்
நடந்தது. இதிலேயே 22 தலி
ளும், 5பொலிசாரும் சாவை
இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 16
மருத்துவமனைகளில் அனும
ஆப்கானிஸ்தானில் அரச படை


# நிதிப் பற்றாக்குறை நிலங்களை விற்பதற்கு இம்ரான்கான் தீர்மானம்!

இஸ்லாமாபாத்.செப்.18
கடுமையான நிதிப் பற்றாக்குறையால் பாகிஸ்தானின் ரயில்வே திணைக்களம் தள்ளாடி வருகின்றது. இந்த ரயில்வே துறையைத் தொடர்ந்து கொண்டு நடத்துவதற்காகச் சில நிலங்களை விற்பதற்குப் பாகிஸ்தானின் புதிய தலைமை அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இம்ரான் கான் தீர்மானித்துள்ளார்.

பாகிஸ்தானின் தற்போதைய தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள முன்னாள் கிரிக்கெட் வீரரும், தெஹ்ரிக் இ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான் கான், தான் பதவி ஏற்றதுமுதல்கொண்டு பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். தலைமை அமைச்சருக்கான ஆடம்பரமான மாளிகையில் அவர் தங்காமல் தனது சொந்த வருமானத்தில் கட்டிய வீட்டில் வாழ்ந்துவருகிறார். அமைச்சர்கள் மற்றும் அரச உயரதிகாரிகள் பயன்படுத்தி வந்த சொகுசுக் கார்களை விற்று அந்தப் பணத்தை அரச கருவூலத்தில் சேர்க்குமாறும் உத்தரவிட்டிருந்தார்.

வெளிநாடுகளில் இருந்து உயர் ரகக் கார்கள், அலைபேசிகள் மற்றும் அழகு சாதனங்கள் இறக்குமதிக்கும் கட்டுப்பாடு விதித்துள்ளார். முன்னாள் தலைமை அமைச்சர் அப்பாசியின் தவறான திட்டங்களாலும் அவர் விட்டுச் சென்ற கடன் சுமையாலும் அரசு நிர்வாகத்தை நடத்துவதற்குப் பணம் இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளதாக இம்ரான் கான் தெரிவித்திருந்தார். இந்த நிலையில்தான், சுமார் 3ஆயிரத்து 700 கோடி ரூபா நிதிப் பற்றாக்குறையில் தவித்து வந்த அந்த நாட்டு ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமான நிலங்களை விற்பதற்குத் தீர்மானித்துள்ளார் அவர்.

எனவே, பாகிஸ்தான் முழுவதும் தனியாரிடம் சிக்கியுள்ள ரயில் திணைக்களத்துக்குரிய நிலங்களை மீட்டு, அவற்றில் சில நிலங்களை விற்பதற்குத் திட்டமிட்டுள்ளார். இது பற்றி அந்த நாட்டின் ரயில்வே அமைச்சர் ஷேக் ரஷீத் அஹமத் ஊடகங்களுக்குத் தகவல் அளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# பிஜியில் நிலநடுக்கம் பீதியில் மக்கள் ஓட்டம்

சுவா.செப்.18
பசுபிக் கடல் பகுதியில் அமைந்துள்ள பிஜித் தீவுகளில் நேற்று அதிகாலை 6.2 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் பிஜியின் தெற்குத் தீவுகளை மையமாகக் கொண்டிருந்தது. அதிகாலையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மக்கள் அலறியடித்தபடி வீடுகளை விட்டு வெளியேறினர். வீதிகளில் ஓட்டம் பிடித்தனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் எதுவும் நேற்றுவரை வெளியிடப்படவில்லை. கடந்த ஓகஸ்ட் 19ஆம் திகதி பிஜித் தீவுகளில் மிகவும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. அது 8.2 ரிக்டரில் பதிவாகிக் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தது.

பசுபிக் கடலில் நிலநடுக்கப் பாதிப்பு மிகுந்த வலயப் பகுதியில் பிஜித் தீவு அமைந்துள்ளது. இதனால் அங்கு அடிக்கடி நிலநடுக்கங்களுடன் எரிமலை சீற்றமும் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

# சந்திரனுக்கு முதன்முறையாக சுற்றுலாப் பயணம்

## அமெரிக்கத் தனியார் நிறுவனம் அறிவிப்பு

லொஸ் ஏஞ்சல்ஸ்.செப்.18
சந்திரனுக்கு முதன்முறையாகச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்ல இருப்பதாக அமெரிக்காவின் 'ஸ்பேஸ் எக்ஸ்' என்ற தனியார் நிறுவனம் அறிவித்துள்ளது.

சந்திரனுக்கு முதன் முறையாக அமெரிக்கா மனிதர்களை அனுப்பியது. விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ரோங் முதன் முறையாக அங்கு கால்பதித்துச் சாதனை படைத்தார். அமெரிக்காவைத் தொடர்ந்து சந்திரனில் பல்வேறு நாடுகள் ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றன.

இதற்கிடையே சந்திரனில் மீண்டும் ஆய்வு மேற்கொள்ளும்படி 'நாசா'வுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். எனவே சந்திரனின் உட்புறத்தில் மிக தீவிரமான ஆய்வு மேற்கொள்வதற்கு நாசா திட்டமிட் டுள்ளது. இந்தநிலையில், சந்திரனுக்குச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்ல இருப்பதாக விண்வெளிக் கப்பல்களைத் தயாரிக்கின்ற அமெரிக்காவின் 'ஸ்பேஸ் எக்ஸ்' என்ற தனியார் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்காக 'பிக் பால்கன்' என்ற மிகப்பெரிய ரொக்கெட் தயாரிக்கப்படுகிறது. இந்தத் தகவலை அந்த நிறுவனம் தனது அதிகார பூர்வக் கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. இதன்மூலம் சந்திரனுக்கு முதன்முறையாகச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லவிருக்கின்ற நிறுவனம் என்ற பெருமையை அது பெறுகிறது. சந்திரனுக்கு 2சுற்றுலாப் பயணிகளை அனுப்பி வைக்கப் போவதாகக் கடந்த ஆண்டு (2017) பெப்ரவரி மாதத்திலேயே குறித்த நிறுவனம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சிறையை உடைத்துக் கைதிகள் தப்பி ஓட்டம் மூவர் பிடிக்கப்பட்டனர்



யங்கூன்.செப்.18
மியான்மரில் ஞாயிற்றுக் கிழமை காலையில் சிறைக் கைதிகள் இடையே திடீரென மோதல் ஏற்பட்டது. பின்னர் அது கலவரமாக மாறியது. இதன் போது சிறைக்கதவுகள் உடைக்கப்பட்டதில் 41கைதிகள் தப்பினர். மியான்மரில் ஹபாஅன் என்ற இடத்தில் உள்ள சிறைச்சாலையிலேயே இந்தச் சம்பவம் நடந்திருக்கின்றது. அங்கு ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை அங்கு அடைக்கப்பட்டிருந்த சிறைக் கைதிகள் இடையே திடீரென மோதல் ஏற்பட்டது. பின்னர் அது கலவரமாக மாறியது. இதனால் அங்குப் பதட்டமும் பரபரப்பும் ஏற்பட்டது. அதைப் பயன்படுத்திக் கொண்ட கைதிகள் சிறை வளாகத்தை உடைத்துக் கொண்டு வெளியேறினர். அப்போது அவர்களைத் தடுத்த சிறை அதிகாரிகளைப் பயங்கரமாகத் தாக்கினர். அதிகாரிகள் காயம் அடைந்தனர். பின்னர் கிழக்குக் கரோன் மாகாணத்தில் இருந்து சிறைக்கு வந்த பாரவூர்தி ஒன்றைத் தம்வசப்படுத்தி அதில் ஏறிக் குறித்த கைதிகள் தப்பியுள்ளனர். அதையடுத்துக் கைதிகளை தேடும் பணி நடந்து வருகிறது.

இது வரையில் அவர்களில் 3பேர் பிடிபட்டுள்ளனர். ஏனையவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# ...ள் – பொலிசார் துப்பாக்கிச் சூடு; 22தலிபான்கள், 5பொலிசார் சாவு

...லிசார் மற்றும் தலிபான்க
...ப்பாக்கிச் சூட்டில் 22தலி
...ம் சாவடைந்தனர். ஆப்
...துப் பகுதியிலுள்ள பத்கிஸ்
... நிலையத்தில் நேற்றுக்
...கும் பொலிசாருக்கும்
...ப்பாக்கிச் சூட்டுச் சண்டை
...2 தலிபான் ஆயுததாரிக
...வடைந்திருக்கின்றனர்.
... 16 பேர் காயமடைந்து
...னுமதிக்கப்பட்டுள்ளனர்.
...படைகளுக்கும் தலிபான்

களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அரச படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கக் கூட்டுப் படை அங்கு முகாமிட்டுள்ளது. சில நாள்களுக்கு முன்பு தலிபான் அமைப்பைச் சேர்ந்த தற்கொலைப் போராளி ஒருவர், தலைநகர் காபூலில் வெடிகுண்டுகள் நிரப்பிய நோயாளர் காவுகை வண்டியை வெடிக்கச் செய்ததில் 100க்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்திருந்தனர். அங்கு அண்மைக்காலமாகத் தலிபான்களின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தலிபான்களுடன் ஆப்கானிஸ்தான் அரசும், அமெரிக்க அரசும் பேச்சுக்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது





# இன்றைய நாள்

**மேடம்:** தொழில், வியாபாரத்தில் குறைகளை உடனுக் குடன் சரி செய்வது நல்லது. அளவான பண வரவு கிடைக்கும், உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்க வும்.

**இடபம்:** மனதில் நிம்மதி நிறைந்தி ருக் கும். தொழில், வியாபாரம் செழிக்க கூடு தல் முயற்சியில் ஈடுபடுவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மிதுனம்:** நண்பரின் உதவி அனுகூ லம் தரும். தொழில், வியாபார வளர்ச் சியில் புதிய பரிமாணம் ஏற்படும். ஆதாயம் பன்மடங்கு கிடைக்கும்.

**கடகம்:** நண்பரிடம் விவாதம் பேச வேண்டாம். அதிக உழைப்பினால் தொழில், வியாபாரம் வளர்ச்சி இலக்கை எட்டுவீர்கள். சேமிப்பு பணம் திடீர் செலவால் கரையும். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும்

**சிங்கம்:** அறிமுகம் இல்லாதவரிடம் குடும்ப விஷயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். பணவரவு சுமாராக இருக்கும்.

**கன்னி:** வெற்றி இலக்கை நோக்கி நடைபோடுவீர்கள். தொழில், வியா பாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். லாபம் திருப்திகரமாக இருக்கும்.

**துலாம்:** பொது விவகாரங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் நன்மை காண்பீர்கள். உறவினர் வகையில் செலவு ஏற்படலாம். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்பு கிடைக்கும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**தனுசு:** சிலரது அலட்சிய போக்கு சங்கடம் உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவது அவசியம்.

**மகரம்:** பிறர் நலனில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். லாபம் உயரும்.

**கும்பம்:** எதிர்மறையாக இருந்த சூழல் அனுகூலமாக மாறும். தொழில், வியா பாரத்தில் வளர்ச்சிப்பணி சிறப்பாக நிறைவேறும்.

**மீனம்:** டுத்தவர் விஷயத்தில் தலையிட வேண்டாம். தொழில் வியாபார நடைமுறை சீர்பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

## நாளை

## 19.09.2018

புதன்கிழமை

**புரட்டாதி 3**

திதி: தசமி பி.இ. 12.30 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப. 1.29
சுபநேரம்: 4.33 – 6.03 வரை
ராகுகாலம்: 12.03– 1.33 வரை

# ‘கூர்கா’வாக களமிறங்கும் யோகிபாபு

பல படங்களில் நகைச்சுவை வேடத்தில் நடித்து வரும் யோகி பாபு, தற்போது முன்னணி நாயகனான கதா பாத்திரத்தில் நடிக்கவிருக்கின்ற படத்தில் ‘கூர்கா’வாகப் பாத்திரமேற்க இருக்கிறார். யோகி பாபு தமிழ் சினிமா வில் முன்னணி நகைச்சுவை நடிகராகத் திகழ்ந்து வருகிறார். விஜய்யுடன் ‘சர்கார்’, அஜித்துடன் ‘விஸ் வாசம்’, ‘100% காதல்’, ‘குப்பத்து ராஜா’, ‘பரியேறும் பெருமாள்’ உள்ளிட்ட பல படங்கள் நடிப்பதற்காக இவரிடம் கைவசம் உள்ளன.

இந்த நிலையில் யோகி பாபு கதாநாயகனாக ஒரு படத்தில் நடிக்கப் போகிறார் என்று செய்திகள் வெளி யாகின. ‘டார்லிங்’, ‘எனக்கு இன்னொரு பேர் இருக்கு’ படங்களை இயக்கிய சாம் ஆண்டன் இந்தப் படத்தை இயக்கப் போகிறார் என்றும் செய்தி வந்தது. ஆனால், அதில் யோகி பாபு நாயகன் இல்லை. படம் முழுவதும் வரும் கதாபாத்திரம் என்று கூறியிருந்தார்.

தற்போது அந்தப் படத்துக்கு ‘கூர்கா’ என்று தலைப்பு வைத்திருக்கிறார்கள். இதில் கூர்கா வேடத்தில் யோகி பாபு நடிக்கிறார். மேலும் இவருடன் ஒரு நாயும் முக் கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறது.







## பொன்மொழிகள்

1. கொஞ்சம் வைத்திருப்பவன் ஏழை அல்ல. அதிகம் ஆசை படுபவன் தான் ஏழை - **ஸ்பெயின்**
2. எதையும் தெரிந்து வீணாக்கும் பழக்கம், விரைவில் அதையே தேடி அலைய வைக்கும் - **ஸ்கொட்லாந்து**
3. பயந்தவன், பத்து த்தைரியசாலிகளையும் கோழை யாக்கி விடுவான் - **ஜேர்மன்**
4. தூக்கி எறியும் குதிரையை விடச் சுமந்து செல்லும் கழுதையே மேல் - **ருமேனியா**
5. பேசுகிறவனை விடக் கேட்பவனுக்கே அதிக புத்தி வேண்டும் - **துருக்கி**

## நேசம் செய், நேசம் செய்...

நேசம் செய், நேசம் செய்...
நேசித்தே ஆக வேண்டுமா?
அடிப்படை நாகரிகமும்
கொஞ்சம் உதவிக்கரமும் போதாதா?
எதிலும் குறுக்கிடாமல்
என் வேலையைப் பார்த்துக்கொண்டு
ஓரமாகக் கிடந்தால்
மனிதத்தன்மையின்
மதிப்புப் போய்விடுமா?

யாரை நேசிக்கச் சொல்கிறீர்கள்?
நான் பார்ப்பவை வெறும் பொருள்கள்
அசையும், அசையாப் பொருட்கள்
அசைபவை தூக்கத்தில் நடக்கும்
அணுக்களைப்போல் அலைகின்றன
அசையாதவையோ
வெவ்வேறு கோலங்களில்
என்னிடம் பாராமுகம் காட்டுகின்றன
அப்புறம் இந்தச் சத்தம்...
எனக்குப் பொருள்கள் பிடிக்காது என்றில்லை
ஆனால் நேசிப்பதெல்லாம்
மிகவும் நாடகத்தனம்.



பழமையின் மதிப்பு
உயரப் புதுமையின்
உண்மையை
உணர்ந்தாலே
போதும்

இறந்தால்
நாலு பேராவது
வரவேணும் தூக்கிச்
செல்வதற்கு

அதான் வாழ்க்கை

வறுமை
என்பது நம்மிடம்
உள்ள ஆடம்பரம்..
ஆடம்பரம் என்பது நாம்
தேடிக்கொள்ளும்
வறுமை..

## சுடோக்கு


எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 9 | | | | 6 | 3 | |
| 5 | | | | | | | | 8 |
| 4 | | | | 8 | | | | 9 |
| | | | 4 | | 7 | | | |
| | | 2 | 6 | | | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| 2 | | | | 6 | | | | 5 |
| 1 | | | | | | | | 3 |
| | 4 | 6 | | | | 7 | 1 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 8 | 4 | 7 |
| 9 | 6 | 7 | 5 | 8 | 4 | 1 | 2 | 3 |
| 8 | 4 | 3 | 1 | 2 | 7 | 5 | 9 | 6 |
| 7 | 1 | 8 | 6 | 9 | 5 | 2 | 3 | 4 |
| 4 | 9 | 5 | 2 | 7 | 3 | 6 | 1 | 8 |
| 3 | 2 | 6 | 8 | 4 | 1 | 7 | 5 | 9 |
| 6 | 8 | 1 | 4 | 3 | 2 | 9 | 7 | 5 |
| 5 | 7 | 4 | 9 | 1 | 6 | 3 | 8 | 2 |
| 2 | 3 | 9 | 7 | 5 | 8 | 4 | 6 | 1 |

நேற்றைய விடை

# மின்சாரம் தரும் பயன்கள்




இயற்கையில் பல சக்திகள் உள்ளன. அவை மகத்தானவை. சூரிய சக்தி, காற்றுச் சக்தி, அணு சக்தி, மின் சக்தி முதலியன மக்களுக்குப் பயன் தரும் சக்திகளாகும். இவற்றுள் பெரிய அளவிலும் பல வகைகளிலும் பயன்படுவது மின்சக்தியாகும். இன்றைய உலகில் மின்சக்தி அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

மின்சாரத்தை (மின்சக்தியை) நாம் கண்ணால் காண முடியாது. ஆனால் அதன் செயலைப் பார்க்க முடியும். மின்சக்தி பல வகைகளில் நமக்குப் பயன் தருகிறது. மின்சாரம் மின் விளக்குகளில் பாய்ந்து ஒளியைத் தருகிறது. மின் விசிறிகளை இயக்கிக் காற்றை வீசுகிறது. மின் அடுப்புகளில் நுழைந்து சமையல் செய்ய உதவுகிறது. மின் இயந்திரங்களுக்குள் புகுந்து அவற்றை இயங்கச் செய்கிறது.

மின்சாரம் வானொலி, தொலைக்காட்சி, ஒலிப் பதிவு நாடா, ஒலி- ஒளி நாடா, தொலைபேசி, கணினி ,ஒளிநகல் கருவி ஆகிய கருவிகளை இயக்கவும் உதவுகிறது.

போக்குவரத்துத் துறையில் தொடர் வண்டிகளை இயக்குகின்றது. மருத்துவத் துறையில் நோய்களைக் கண்டறியவும் அறுவைச் சிகிச்சைகளைச் செய்யவும் மின்சாரம் பயன்படுகிறது. பல்வேறு அறிவியில் ஆய்வுகளை மேற் கொள்ளவும் உதவுகிறது.

மின்சாரத்தை நீர், அனல், அணு, சூரிய ஒளி காற்று (காற்றாலை மூலம்) ஆகியவற்றைப் பயன்படுத்தித் தாயாரிக்கிறார்கள். மின்சாரத்தை நாம் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். இல்லையேல் மின்சாரத்தின் தாக்கத்துக்கு உள்ளாகி இறக்கவும் நேரிடும். நாட்டு முன்னேற்றத்திறக்கும் மக்களின் தேவைக்கும் மின்சாரத்தைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும். மின்சக்தியை நாம் வீணாக்கக் கூடாது.



# படைப்பின் இரகசியம்

முன்னொரு காலத்தில் ஊரில் சிகாமணி என்ற ஒருவர் இருந்தார். அவர் ஒரு சந்தேகப் பேர்வழி எதற்கெடுத்தாலும் " அது ஏன் அப்படி? இதேன் இப்படி? என்று கேட்டுக் கொண்டே இருப்பார். எதையும் ஆராய்வது நல்லதுதான். ஆனால் தேவையற்ற விடயங்களில் எல்லாம் மூக்கை நுழைத்து மற்றவர்களிடம் வாங்கிக் கட்டியும் கொள்வார். ஒருநாள் சிகாமணி வெளியூருக்குப் போய்க் கொண்டிருந்தார். போகிற வழியில் ஒரு வயரில் பூசணிக் கொடி படர்ந்திருப்பதையும் அதில் ஒரு பெரிய பூசணிக்காய் காய்த்திருப்பதையும் பார்த்தார். அதைப் பார்த்ததும் சிகாமணிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. எவ்வளவு மெல்லிய கொடியில் எத்தனை பெரிய பூசணிக்காய் காய்த்திருக்கின்றது என்று நினைத்தார்.

இன்னும் சற்றுத் தூரம் சென்றார். ஒரு பெரியு ஆலமரத்தைப் பார்த்தார். அதில் மிகச் சிறிய பழங்கள் பழுத்திருந்தன. இது என்ன ஆச்சரியம். இவ்வளவு பெரிய மரத்தின் பழம் மிகச் சிறியதாக இருக்கிறதோ என்று நினைத்தார். இயற்கையின் இந்தப் படைப்பு இரகசியம் நமது சிகாமணியை மிகவும் சிந்திக்க வைத்தது.

மெல்லிய பூசணிக்கொடி பெரிய காய் காய்ப்பதற்கும். மிகப் பெரிய ஆலமரம் மிகச் சிறிய காய் காய்ப்பதற்கும் காரணம் என்ன? என்று யாரிடமாவது கேட்க வேண்டும் என்று நினைத்தார். அப்போது எதிர்த் திசையிலிருந்து ஒரு பெரியவர் வந்தார். அவரும் வழிப் போக்கன்தான். அந்தப் பெரியவரிடம் சிகாமணி தனது சந்தேகத்தை கேட்டார். பெரியவர் சிரித்துக் கொண்டே, "அப்பா! இயற்கையின் படைப்பு இரகசியம் ஒவ்வொன்றுக்கும் ஒரு காரண காரியம் இருக்கும். உன் கேள்விக்கான விடையைப் பின்னர் சொல்கிறேன். நேரம் உச்சிப் பொழுது ஆகிவிட்டது. நான் வெகு தூரத்தில் இருந்து நடந்து வந்ததால் மிகவும் களைத்து விட்டேன் .இதோ இந்த ஆலமர நிழலில் உட்கார்ந்து முதலில் நாம் இருவரும் சாப்பிடலாம். நான்கட்டுச் சோறு கொண்டு வந்துள்ளேன். நீ கொண்டு வந்திருந்தால் சரி. இல்லாவிடினும் பரவாயில்லை. என்னுடையதை இருவரும் பகிர்ந்து உண்டு இளைப்பாறலாம் என்றார்.

இருவரும் தாம் கொண்டு வந்த கட்டுச் சோற்றுப் பொதிகளைப் பிரித்துப் பகிர்ந்து உண்டனர்.

பின்னர் தாம் கொண்டு வந்த சுரக் குடுவையில் நீரை எடுத்துப் பருகினர்.

உண்டதும் நித்திரை மயக்கம் வந்தது. இருவரும் ஆலமரத்தடி மணலில் சிறிதுவேளை படுத்துத் தூங்க ஆரம்பித்தனர்.

ஆலமர நிழலில் ஒரு மணி நேரமாக இருவரும் தூங்கிக் கொண்டிருந்தனர். திடீரெனச் சிகாமணி ஐயோ அம்மா" என்று அலறிக் கொண்டே கண் விழித்தார்.

சிகாமணி தன் மூக்கைச் சொறிந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தார். பெரியவர் அலறல் கேட்டு எழுந்து "என்ன? ஏன் அலறினீர்? என்று கேட்க, சிகாமணி " ஐயா நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது சரியாக என் மூக்காற் தண்டில் பார்த்து ஒரு ஆலம் பழம் விழுந்து விட்டது. அதனால் தான் அலறி அடித்துக் கொண்டு எழுந்தேன்" என்றான்.

பெரியவர் ஒரு புன் சிரிப்பை உதிர்த்து விட்டுச் சிகாமணியைப் பார்த்து; இத்தனை பெரிய ஆலமரத்தில் ஏன் இத்தனை சிறிய காய் காய்க்கிறது? என்று கேட்டாய் இப்போது நீயே சற்று யோசித்துப் பார். இந்த ஆலமரத்தில் பூசணிக்காய் அளவுள்ள பழம் பழுத்திருந்து இப்போது உன் முகத்தில் அது விழுந்திருந்தால் உன் கதி என்னவாயிருக்கும்?" என்று கேட்டார்.

சிகாமணிக்கு இப்போது இயற்கையின் படைப்பின் இரகசியம் மெல்லப் புரிய ஆரம்பித்தது. பெரியவர். சிகாமணியைப் பார்த்து. "எத்தனை சிறிய ஆலம் விதையில் இருந்துதான் இத்தனை பெரிய ஆலமரம் உருவாகி இருக்கிறது. இத்தனை பெரிய ஆலமரம் மிகச் சிறிய ஆலம் விதைக்குள்தான் கருக் கொண்டிருக்கிறது. தென்னை மரத்தின் விதை பெரியதாக இருக்கிறது. ஆனால் தென்னை மரம் ஒரே போக்காக கொம்புகள் இன்றிக் கிளைகள் இன்றி மேல் நோக்கி வளர்கின்றது. இதுபோல கோடிக்கணக்கான படைப்பின் இரகசியங்கள் இயற்கையில் உள்ளன. அவை பற்றி வீணாக நீ சந்தேகம் கொள்ள வேண்டாம். இயற்கையைக் கூர்ந்து கவனிப்பதில் தப்பில்லை, ஏன்? எதற்கு? என்று கேள்விகள் எழுப்பி அதற்கான விடைகளைத் தேடுவதிலும் தப்பில்லை. ஆனால் இயற்கையின் படைப்பு இரகசியம் பற்றி நீ ஐயம் மட்டும் கொள்ளாதே. எல்லாம் நன்மைக்கே என்று மட்டும் நினை" என்றார்.

## தீமை ஆளைக் கொல்லும்

1. பழி வாங்குவது ஆரம்பத்தில் இனிக்கும். சிறிது போனால் கசப்பாக மாறும். இறுதியில் எய்தவனையே திருப்பி வந்து கொன்று விடும்.
2.நம்மை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று நினைக்கிறோமோ அப்படியே மற்றவர்களை நாம் நடத்த வேண்டும்.
3.பட்டினி கிட என்று சொல்வதைத்தான் மேலோட்டமாகப் பத்தியம் இரு என்கிறார்கள்.
4.பேராசை கொண்டவர்கள் என்றுமே திருப்தியடையமாட்டார்கள். என்றும் பெரும் துன்பமே அடைவார்கள்.
5.எந்தக் காலத்திலும் தெய்வமும், மனிதரும் வரவேற்பது தன்னம்பிக்கை உடையவரையே.
6. குற்றம், குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக் கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும்.
7. புகழ் நீடித்து நிற்க வேண்டுமாயின் செல்வத்தைப் போலவே அதையும் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டும்.
8. தனக்காக மட்டும் வாழ்கிற மனிதன் மனிதர்களிலே மிகவும் கீழ்மைப்பட்டவன்.

## கல்வி

**பல்லவி**


கல்வியை யல்லது பயன்தர
வல்லது சொல்லவுண்டோ உய்வுமுண்டோ

**அனுபல்லவி**


செல்வ மொழிற்திடுற் தேக மழிந்திடும்
தேவ போகங்களுஞ் சேதம் விளைந்திடும்

**சரணம்**

தீயாலே வேகாது நீரால் நனையாது
திருடர் கொள்ளலாகாது - தன்னைச்
சேர்ந்த சகோதரர் பங்கிடலாகாது
சிந்தை மயங்காது
ஓயாமல் வீழ்ந்தாலும் ஓங்கும் குறையாது
ஒருமையே யெழுமையும் உதவும் தவறாது



## வாழ்த்துக்களும் வணக்கங்களும்



| | |
|---|---|
| குட் மோர்னிங் | காலை வணக்கம் |
| குட் அவ்டனூன் | மாலை வணக்கம் |
| குட் பாய் | போய் வருகின்றேன் |
| குட் லக் | அதிர்ஷ்டம் உண்டாகட்டும் |
| ஆல் த பேஸ்ட் | எல்லாம் சிறப்பாக அமையட்டும் |
| ஹப்பி நியூ இயர் | புத்தாண்டு வாழ்த்துக்கள் |
| ஹப்பி பேர்த்டே | பிறந்த நாள் வாழ்த்துக்கள் |
| மேரி கிறிஸ்மஸ் | நத்தார் வாழ்த்துக்கள் |

# ஈழம் ஈந்த ஈகம் திலீபன்

சேயோன்

தான் நேசித்த மக்களுக்காக, தான்நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத் திலீபன் செய்திருக்கிறார்.
தியாகி லெப்டினன் கேணல் திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தவர். இந்தியப் படைகளுக்கெதிராக நீராகாரம் கூட அருந்தாது பன்னிரண்டு நாள்கள் உண்ணா நோன்பிருந்து வீரச்சாவடைந்தவர்.

1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக, உரிமை விழிப்பின் சாகரமாகத் திலீபன் தியாகச் சாவு எய்தினார்.

**ஐந்து அம்சக் கோரிக்கை**

•மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

•சிறைக் கூடங்களிலும், இராணுவ - பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

•அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.


•ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும்.

•தமிழர் பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.



**போராட்டத்தின் குறியீடு**

தீலீபனின் தியாக வரலாறு, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஒரு குறியீடாக விளங்குவதோடு, தமிழீழத் தேசியத் தலைவரின் இயல்புக்கும் ஒரு குறியீடாகத் திகழ்கிறது.
தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகப் பெரிய எழுச்சி கொண்டதும், வளர்ச்சி கண்டதும் தேசியத் தலைவர் பிரபாகரனின் வழிநடத்தலின் வழியேதான். இங்கே தமிழீழத் தேசியத் தலைவருக்கு இருக்கின்ற இயல்பு என்னவென்றால் அடக்குமுறைகள் எவ்வளவுதான் பெரியவையாக இருந்தாலும் விட்டுக் கொடுப்பதில்லை.



எவ்வளவுதான் பெரிய இழப்புக்களைச் சந்தித்தாலும், தன்னுடைய உயிரே போனாலும் அடக்குமுறைகளுக்கு அடிபணிவதில்லை என்பது தேசியத் தலைவரின் அடிப்படை இயல்பாகக் காணப்பட்டது.
இந்த இயல்புத் தன்மைதான் தமிழீழத் தேசியத் தலைவரையும் சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொள்ள முன்னர் தூண்டியது. 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியாவில் தமிழ்நாட்டிலிருந்த தலைவர் பிரபாகரனின் தொலைத்தொடர்புச் சாதனங்கள் முதலானவற்றை இந்திய அரசு பறிமுதல் செய்தது. இந்த அடக்கு முறைக்கு எதிராகத் தலைவர் கடும் சினம் கொண்டார்.
இந்தியாவில் இருக்கக்கூடிய ஒரு போராட்ட வடிவமாகச் சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தேசியத் தலைவர் பிரபாகரன் உடனே ஆரம்பித்தார்.
இந்தச் சாகும் வரையிலான உணவு ஒறுப்பு ஒரு போராட்ட வடிவமாகத் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் எமது தேசியத் தலைவரால்தான் முதன்முதலில் செய்யப்பட்டது.

தேசியத் தலைவர் முன்னெடுத்த தண்ணீர்கூட அருந்தாத சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டமானது எந்த விதமான முன்னறிவித்தலும் இன்றி அவரால் உடனேயே ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தை ஒருநாள் கழித்து, பின்னர் ஆரம்பிக்கும்படி இயக்கப் போராளிகளும், பிரமுகர்களும் கேட்டுக்கொண்டனர். 'அந்த ஒருநாள் அவகாசத்தில் தமிழக அரசுக்கும், தமிழக அரசியல்வாதிகளுக்கும், வெகுசன ஊடகங்களுக்கும், தமிழக மக்களுக்கும் உங்களது சாகும் வரையிலான உண்ணா நோன்பை அறிவித்து விடலாம். அதன் பின்னர் நீங்கள் உங்களுடைய உண்ணா நோன்பை ஆரம்பிக்கலாமே" என்று கூறினர். ஆனாலும் அவர் மறுத்துவிட்டார்.

**கற்பிதம்**

"இல்லை, நீங்கள் சொல்வது ஓர் அரசியல் நாடகம்..! எனக்கு அது தேவையில்லை. நான் இந்த நிமிடம், இந்த விநாடியிலி ருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் சாகும் வரையிலான என்னுடைய உண்ணாவிரதத்தை ஆரம்பித்துவிட்டேன். இந்திய அரசு என்னிடமிருந்து பறித்தெடுத்த தொலைத்தொடர்புச் சாதனங்கள் முதலானவற்றை திருப்பித் தரும் வரைக்கும் ஏன், என்னுடைய உயிர் போகும் வரைக்கும் எனது போராட்டம் தொடர்ந்து நடைபெறும்" என்று கூறினார்.

இந்தப் போராட்டத்தின் சக்தியை உணர்ந்த இந்திய அரசு 48 மணித்தியாலங்களுக்குள் அடி பணிந்தது. தான் பறித்தெடுத்த தொலைத் தொடர்புச் சாதனங்கள் முதலானவற்றைத் தலைவர் தங்கியிருந்த வீட்டிலேயே கொண்டு வந்து கொடுத்தது. தலைவர் தன்னுடைய உண்ணா நோன்பை முடித்தார்.

தன்னுடைய உயிரே போனாலும் அடக்குமுறைக்குப் பணிவதில்லை என்கின்ற தேசியத் தலைவரின் இயல்பின் வெளிப்பாடுதான் திலீபனிடமும் உள்ளூரப் படிந்திருந்தது. தேசியத் தலைவர் முன்னின்று வழிகாட்டிய பாதையில் திலீபன் பின் தொடர்ந்து போராடினான். திலீபனின் இந்த உண்ணா நோன்புப் போராட்டம் தமிழீழத் தேசியத் தலைவரின் இயல்பையும் சுட்டி நிற்கின்றது.

**தாகத்தின் தியாகம்**


இந்த இலட்சிய உறுதிதான், தியாகி திலீபனிடமும் படிமம் கொண்டிருந்தது. தனது தலைவன் முன்னோடியாக நின்று வழிகாட்டிப் போராடியதை 1987 ஆம் ஆண்டு நடாத்தினான். 'ஒரு சொட்டுத் தண்ணீர் அருந்தாமல் நான் எனது உண்ணா நோன்பை ஆரம்பிக்கப் போகின்றேன்" என்று திலீபன் அறிவித்தபோது தலைவர் பிரபாகரன் திலீபனிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தார். "தண்ணீரையாவது குடித்துப் போராட்டத்தைத் தொடரலாம்" என்று திலீபனைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் திலீபனோ தலைவரிடமே பதில் கேள்வி ஒன்றைக் கேட்டார். "அண்ணா...! நீங்கள் அப்படிச் செய்யவில்லையே..? நீங்களும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல்தானே சாகும்வரை உணவு ஒறுப்பை மேற்கொண்டிருந்தீர்கள். என்னை மட்டும் ஏன் தண்ணீர் அருந்தச் சொல்கின்றீர்கள்...?"
ஆம், அத்தகையதொரு தலைமை..! இத்தகையதொரு தியாகி...! தாயக தேசம் கண்டுகொண்ட மகத்துவம். உயர்ந்தவர்களிடம் மட்டுமே காணக்கூடிய இலட்சிய உறுதி அது. இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவரின் இயல்பின் ஒரு குறியீடாகத் தான் தியாகி திலீபன் விளங்கினார்.

## திலீப தீபம்

உலகே உனக்குள் ஒரு புதிய சாதனை
உலகே உனக்குள் ஒரு புதிய அதிசயம்
உறவுகளே உங்களுக்குள் ஒரு பிரிவின் துயரம்
உறவுகளே உங்களுக்குள் ஒரு புயலின் பயணம்
அறக்களமே உனக்கொரு புதிய மகுடம்
அறக்களத்தின் பிறப்புநாள்
உனக்கொரு அவசேதம்
ஈழ நிலமே உனக்குள் ஒரு புதிய வீரம்
ஈழ நிலமே உனக்குள் ஒரு பெரிய தேசம்
சாவே வெல்வதற்காய் நீ அழைக்கப்பட்டாய்
சாவே வெல்லமுடியாது நீ வெக்கப்பட்டாய்
வீண்மீன்கள் எங்களிடம் ஓர் அற்புதத் தோழன்
வெந்துகொண்டிருக்கிறான்
வீண்மீன்கள் உங்களிடம் அந்த அற்புதத் தோழன்
வந்துகொண்டிருக்கிறான்
புரட்சிப் பறவையின் சிறகு தணிகிறது
புரட்சிப் பறவைகள் சிறகு விரிக்கின்றன
பசியே நீ தோற்றாய்!
சதியே நீ தோற்றாய்!
பகையே நீ தோற்றாய்!
ஒளி கொடுப்பதற்காய்
அணைந்துகொண்டிருக்கிறது திலீப தீபம்....!

ஈழநிலா



## மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு

### கேள்வி அறிவித்தல்

### மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு 2018 / 19 ஆம் ஆண்டிற்கு தேவையான வழங்கல்கள் / சேவைகள்

01. முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 2018 / 19 ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் /சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| சேவை | காலம் |
|---|---|
| அ. பாதுகாப்பு சேவை | 10.10.2018 - 09.10.2019 |
| ஆ. சுத்திகரிப்பு சேவை | 01.11.2018 - 31.10.2019 |
| இ. சிற்றுண்டிச்சாலை | 01.11.2018 - 31.10.2019 |

2018 முதல் 2019 வரையான ஒரு வருட காலப்பகுதிக்கு வழங்கல்கள். சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 20.09.2018 தொடக்கம் 05.10.2018 ஆம் திகதி வரை காலை 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணிவரையும் முல்லைத் தீவு மாவட்ட பொது வைத்தியசாலை அலுவலகப் பணிமனையில் வழங்கப்படும்.

02. அரசாங்க ஒப்பந்தத்தை செய்ய முடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
03. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவ்வகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை அலுவலகத்தில் சமர்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 05.10.2018 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தலைவர். கேள்விச்சபை மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இடமுடியும் கேள்விகள் யாவும் 05.10.2018 மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும்.
04. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்.

| சேவைகள் விவரம் | பெறுகை வைப்பு | மீளளிக்கப்படாத பணம் |
|---|---|---|
| பாதுகாப்பு சேவை | 50.000.00 | 1000.000 |
| சுத்திகரிப்பு சேவை | 50.000.00 | 1000.000 |
| சிற்றுண்டிச்சாலை | 50,000.00 | 1000.000 |

05. ஏற்கனவே சேவையை வழங்கி வரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாக கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
06. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும் போது சமுகமளிக்கலாம்.
07. கேள்வி தொடர்பாக கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.
08. மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.இல. 021 226 1423

**வைத்திய கலாநிதி திரு . K.சுதர்சன் பிராந்திய பெறுகைக்குழு.**
**மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு.**

1st time in Jaffna
யாழ் JETEX 2018
SEPTEMBER 23 24 25
Jaffna International Education & Job Fair
யாழ் நகரில்
உயர் கல்வி சார்பான
கண்காட்சி


Organizing by:- CJ Promoters
AFTER A/L?

More deatils
077 254 6511 / 071 133 0431 Prasannaraj
Place
Kokkuvil
Celva Palace
(Fully Air condtion)
மேலதிக தவல்களுக்கு:
Prasannaraj - 077 254 6511
ஊடக அனுசரணை:- உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
Uthayan - National Tamil Daily

## மரண அறிவித்தல்

### மரிஸ்ரெலா ஜெயராணி பிலிப் இராசநாயகம்



இளவாலையைப் பிறப்பிடமாகவும் கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராணி கடந்த (15.09.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை செல்லையா - எலிசபேத் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பிலிப் இராசநாயகத்தின் (கப்டன்) அன்பு மனைவியும் ஜெனிற்றா (கொலன்ட்), அனுஷா (சூட்டி - பிரான்ஸ்), வினித்தா (செலிங்கோ காப்புறுதி நிறுவனம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அன்ரன் இராசநாயகம் (கணக்காளர் BA, கொலன்ட்), ஜேம்ஸ் ஜெயரஞ்சன் (களஞ்சிய முகாமையாளர் - பிரான்ஸ்), ஜெயகாந் றொஷான் (Nation Trust Bank, Jaffna) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயராஜா, அன்ரன் அமிர்தநாயகம், பிலிப் அழககோன் (கனடா), ஞானரத்தினம், அன்னம்மா அற்புதம், காலஞ்சென்றவர்களான றொபேட் கிளைவ், பாபறா, மரியநாயகம், பிரான்சிஸ் இராசநாயகம், யோசவ் செல்வநாயகம், சவுந்தரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் டினேஸ் (கணக்காளர் MSC கொலன்ட்), எரிக்நிரோஸ் (கணினிப்பொறியியலாளர் - பிரான்ஸ்), நித்தீஸ் (St. ஜோன்ஸ் கல்லூரி), நிக்கிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 72 A, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இருந்து நாளை (19.09.2018) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இளவாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.00 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
021 222 5610, 0766 66 33 86 மருமகன் J.J.றொசான்

## மரண அறிவித்தல்



### கந்தசாமி சிவசுப்பிரமணியம்

**(ஓய்வுபெற்ற பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)**

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவசுப்பிரமணியம் கடந்த (15-09.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - அருளம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான Dr.சங்கரப்பிள்ளை மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் , சிவலோகினியின் அன்புக்கணவரும் சிவாஜினி (பொறியியலாளர் - அமெரிக்கா) Dr. சிவசொரூபி (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், சஞ்சீபன் (பொறியியலாளர் - அமெரிக்கா) பார்த்தீபன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஞ்சலி, வருணன் மகிழினி ஆகியோரின் அன்புப்பேரனும், பாலசிங்கம், மகாலக்ஷ்மி யோகநாதன், ராஜேஸ்வரி, மத்மலோஜினி, சிவகுமார் ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி மற்றும் பஞ்சலிங்கம், வசந்தமாலா, காலஞ்சென்ற மகாலிங்கம், மற்றும் சிறிதரன், வசந்தநிலா, சிவராணி, சிவராஜினி, சிவராஜபிள்ளை சிவரஞ்சதிருபுவனன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கணேசராஜா, மாசிலாமணி, ஜெயவானா, ஷாமினி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.09.2018 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS/19833) (11,17)

**160, பொற்பதி வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**
**021 221 3641, 021 568 0226** தகவல்:- குடும்பத்தினர்.

பிரபல வைரம், முத்து வியாபாரியும்,
யாழ். செவ்வாய்க்கிழமை மடம்
ஏக தர்மகர்த்தாவுமாகிய
**ஆறுமுகம் செட்டியார் முத்துவேல் செட்டியாரின்**
**ஏக புதல்வன்**

# நாகலிங்கம் செட்டியார்


**அவர்களின்**

## 100 ஆவது ஜனன தின மலர்கள்

**தோற்றம் : 18.09.1918 - 18.09.2018**
**மறைவு : 15.10.1976**

என் குடும்பவாழ்வில் வழிகாட்டிய நம் ஒளிவிளக்கு
**கோபம் செயலில் இருக்க கூடாது**
**வார்த்தையில் இருக்கனும்**
**அன்பு வார்த்தையில் இருக்க கூடாது**
**செயலில் இருக்கனும்...**

**100 ஆவது ஜனன தின மலர்கள்**




**தகவல்:-**
**பேரன் : முத்துவேல் செட்டியார் பிரசாந்தன்**
**திருமதி ஜெயவேணி பிரசாந்தன்.**
**பூட்டப்பிள்ளைகள் : சகிதர்ஷன் (சஞ்ஜய்), தனஞ்ஜெய்.**
**முத்துவேல் செட்டியார்(மகன்), விமலேஸ்வரி(மருமகள்)**

**105, சிவன் வடக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**077 818 9883/077 837 3203**

---

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 . 04 . 1982 | 17 . 09 . 2018 |

# இசைநாதமணி உதயகுமார் உதயசங்கர்

**(ஈழநல்லூர் நாதஸ்வர வித்துவான்)**

இல.906/20, பருத்தித்துறை வீதி, நல்லூரைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட ஈழநல்லூர் நாதஸ்வர வித்துவான் இசைநாதமணி உதயகுமார் உதயசங்கர் நேற்று (17.09.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் உதயகுமார் - செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகதாஸ் மற்றும் ஜெயாநிதி தம்பதிகளின் அன்பு மருமகனும், விசாரணியின் அன்புக் கணவரும், சாருஜன், சபீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், உமாசங்கர், ஜெயசங்கர், வைஷ்ணவி, விஜயசங்கர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹரிகரபுத்திரன், ரேவதி, ஹேமலதா, ரகுநாத், ஜானுயா, நிவேனுஜா, கயநாத் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2018) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.906/20, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்.**


(CS/19865)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 724 0794**

---

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 . 05 . 1930 | 14 . 09 . 2018 |

# மயில்வாகனம் சுந்தரமூர்த்தி

**(ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர், யாழ். கச்சேரி)**

யாழ். தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம் அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுந்தரமூர்த்தி 14.09.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், பாமா, பகீரதன், சுதாகரன், திவாகரன் ( கனடா), துவாரகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி (மலேசியா), இரத்தினம் (பிரான்ஸ்), மங்கையற்கரசி (கொழும்பு) மற்றும் கணேசமூர்த்தி (மீசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவலிங்கம் (ஆசிரியர்), கலைச்செல்வி, விஜயஸ்ரீ, துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சர்வதர்சன் மற்றும் குகதர்சன், சிவானுஜன், தனுஷா, அனிஷா, சயன், சஞ்சய், சகான், அனிக்கா, அன்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.09.2018) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.178, அரசடி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(CS/19865)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**சிவலிங்கம் (மருமகன் - இலங்கை) - +94 779 353 138**





## வாடகைக்கு

கந்தர்மடத்தில் இயங்கிவரும் உணவகம் ஒன்று அனைத்து வசதிகளுடனும் குத்தகைக்கு உண்டு. - 077 728 3609

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

(CS 18761/15/17)

## தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு கட்டடத் துறை சார்ந்த பொருள்கள் பற்றிய அறிவு உடையவரும் நல்ல எழுத்தறிவும் கொண்ட களஞ்சிய உதவியாளர் (Store Keeper) தேவை. தகைமை A/L. வயதெல்லை 18 - 35.

**தொடர்பு - 076 316 5730, 077 592 5371**

## விற்பனைக்கு

மறி ஆடுகள் (கறுப்பு, வெள்ளை)
மற்றும்
கறணப்புறாக்கள்
விற்பனைக் குண்டு.

**077 606 2747** (CS/19869) (11,17)

## பெயர் மாற்றம்

**பன்னீர்ச்செல்வம் எனீடா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **எனிற்றா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **எனிற்றா** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(AKN/538) (11,17) **- எனிற்றா -**

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பூக்கடை ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.

1. **விற்பனையாளர்** ஆண், பெண்
2. **கணக்காளர்**
3. **மாலை கட்டத் தெரிந்தவர்கள்** ஆண், பெண்
4. **வீட்டு வேலை** (பெண்)

**தொடர்பு - 077 4018545**






## சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

### சுப்பிரமணியம் திருச்செல்வம் (அப்பர்)

*திதி : ஏகாதசி*



பிறப்பு 05.01.1949 இறப்பு 05.09.2018

எமது குடும்ப விளக்காய் ஒளிர்ந்து எம்மையெல்லாம் ஆளாக்கி நல்வழிப் படுத்தி 05.09.2018 புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு இறைபதம் அடைந்த எமது குடும்ப தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு வந்து உதவி புரிந்தவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு எதிர்வரும் 20.09.2018 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயா கடையடி, ஊரெல்லைத் தெரு,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 06.08.2018 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

### ஸ்ரீதரன் ஸ்ரீரஞ்சன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (19.09.2018) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இத்தியடிப்பிள்ளையார் கோவில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பாரினில் 04 . 01 . 1942

காசினில் 18 . 09 . 2016

### அமரர் கனகரத்தினம் மாரிமுத்து (சிபோரா)

மரித்தோரிலிருந்து
எழுந்திரு கிறிஸ்து
இனி மரிப்பதில்லையன்று
அறிந்திருக்கின்றோம்
மரணம் இனி அவரை
ஆண்டு கொள்வதில்லை

ரோமர் 6:9

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 09 . 2007



இறப்பு 16 . 09 . 2018

### ஜெகப்சன் க்ளொடியஸ் (ஜெகன்) அன்ரோனியோலறோஷிகன்

*(தரம் 06 மாணவன் - புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)*

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகப்சன் க்ளொடியஸ் அன்ரோனி யோலறோஷிகன் கடந்த (16.09.2018) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் திரு. திருமதி ஜெகப்சன் க்ளொடியஸ் (ஜெகன்), சுபதினி தம்பதிகளின் அன்பு மகனும் சம்சிகாவின் (தரம் 07 மாணவி - யா/ இளவாலைக் கன்னியர்மடம் மகா வித்தியாலயம்) அன்புத் தம்பியும் திருபங்கிறாஸ் காலஞ்சென்றவர்களான சந்திராதேவி, திரு. திருமதி மரியநாயகம் றெஜீஸ்ன் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.09.2018) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்ப்லி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 356 2934 — குடும்பத்தினர்.

(C 2852/15/18)

## மரண அறிவித்தல்



### திருமதி கிரிஜா கஜப்பிரியசர்மா

விஸ்வமடு மாணிக்கபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், மாதகல் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிரிஜா (ஜானு) நேற்று (17.09.2018) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் கஜப்பிரியசர்மாவின் அன்பு மனைவியும், தெய்வேந்திர குருக்கள் - சுபத்திராதேவி அம்மா தம்பதிகளின் அன்பு மகளும், நகுலேஸ்வரக் குருக்கள் யாழரசி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சுதாகர குருக்கள் (வள்ளிபுனம்), சுவேந்திரசர்மா (ஓங்காரபவன் - சாவகச்சேரி), சுதர்ஷினி (தர்ஷா - புதுக்குடியிருப்பு), காலஞ்சென்றவர்களான சுபாஸ்கர சர்மா, கவிதா மற்றும் அரிஹரசர்மா (விஸ்வமடு), கம்சத்வனி (அளவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், யசோதா, ஜெகதாம்பாள், சுபாஸ்கர குருக்கள், ஜெயசந்திரசர்மா, கஜநேசக்குருக்கள் - கர்ணிகா (மாதகல்), ரஜீவசர்மா - கஜேந்தினி (மீசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2018) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் மாதகல் போதி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் கிழக்கு,
மாதகல்.

தகவல்:
கணவர் - ந.கஜப்பிரியசர்மா

(CS/19862)(11,17)

077 503 4923

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் வர்த்தக பாட
ஆசிரியர் திருமதி வனிதாலட்சுமி
ரங்கநாதன் அவர்களின் அன்புக்கணவர்

### ரங்கநாதன்

(16.09.2018) ஞாயிற்றுக்கிழமை
காலமானார். அன்னாரின் பிரிவினால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா
சாந்தியடையவும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம், யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சுப்பிரமணியம் சாந்தினிதேவி

பிறப்பு 26.01.1959 — இறப்பு 29.09.2017

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர் அனைவரும் போற்ற
வாழ்ந்து காட்டிய அன்னையே - நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில்
சுடர்விட்டுக் கொண்டிருக்கும் குலவிளக்கே - அம்மா
நீங்கள் எம்மைவிட்டுப் - பிரிந்து
ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்மைவிட்டுப் பிரியாது

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(CS/19875)(11,17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிங்கராஜர் யேசுதாசன் (ஜெயராசா)

*(முன்னாள் மரியன்னை பேராலய உதவி திருப்பண்டக் காப்பாளர்)*



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் 102, மவுண் கார்மேல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராஜர் யேசுதாசன் நேற்று (17.09.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராஜர் - மேரி மாகிறேற் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை - செபமாலை மேரி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மேரி றூத் அஞ்சலாவின் (திரு இருதய சபைத் தலைவி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான றோசலின், ஞானப்பிரகாசம், பொண்மணி மற்றும் பற்றிக், S.L.மரியநாயகம், மார்ட்டீன், றோஸ் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ், தியோப்பிலிஸ், றீற்றா, ஜோஜினா மற்றும் மரியதாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (19.09.2018) புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

102, மவுண் கார்மல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 80 | 70 | 100 | 100 |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 120 | 100 |
| பாகல் | 160 | 180 | 140 | 170 |
| க.கிழங்கு | 100 | 120 | 80 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 100 | 110 |
| சி.வெங்காயம் | 100 | 80 | 120 | 110 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| தக்காளி | 100 | 120 | 60 | 120 |
| வாழைக்காய் | 70 | 80 | 100 | 80 |
| கீரை | 20 | 30 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 35 | 40 |
| ப.மிளகாய் | 120 | 160 | 140 | 180 |
| புடோல் | 110 | 80 | 80 | 100 |
| கோவா | 150 | 100 | 140 | 160 |
| வெண்டி | 100 | 80 | 60 | 80 |
| போஞ்சி | 120 | 200 | 140 | 250 |
| லீக்ஸ் | 150 | 120 | 120 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 120 |
| கரட் | 280 | 300 | 180 | 180 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 50 | 80 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 500 | 500 | 600 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 700 | 950 | 800 | 1100 |
| சுறா | 700 | 900 | 1200 | 1200 |
| சீலா | 400 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 300 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 300 | 250 |
| ஆடை | 100 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 300 | 300 | 500 | 400 |
| மதனம் | 150 | 300 | 250 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 100 | 200 | 200 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

## முல்லை...

டன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். நகர்ப் பகுதியில் வாளுடன் இளைஞர்கள் நடமாடுகின் றனர் என்று கிடைத்த முறைப்பாட்டை அடுத்துப் பொலிஸார் எடுத்த நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் இரணைப்பாலையைச் சேர்ந்த 25 வயதுடையவர் என்றும், அவர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி3)

## தமிழீழத்...

பட்டது.

தொடர்ந்து புலிகளின் எழுச்சிக் கீதங்களும் ஒலிபரப்பப் பட்டன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கி.கிருஸ்ணமேனன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் இ.விக்னேஸ்வரன் தூபியைத் திறந்தார்.

தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவை அங்கீகரிக்கப் படவேண்டும் எனப் பிரகடனப்படுத்தி 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி பன்னாட்டுச் சமூகத்தை தமிழர் தேசத்தின் பக்கம் திருப்பும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நடத்தப்பட்டது. அதன் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் நினைவுப் பலகை அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பலகை அகற்றப்பட்டுத் தற்போது நினைவுத் தூபி கட்டப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டைப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மேற்கொண்டிருந்தது.

நினைவுத் தூபி திறக்கப்பட்டபோது புரட்சிக் கீதங்கள் இசைக்கப்பட்டன. நிகழ்வில் பல்கலைக்கழகப் பதிவாளர், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-8,106,105)



## இலங்கையின் முதலாவது internationalshopping-malliy அபான்ஸ் அறிமுகம் செய்கிறது.



இலங்கையின் முதலாவது சர்வதேச சொப்பிங் மால் தலைநகரின் Colombo City Centreஇல் இன்னும் ஒரிருதினங்களில் மிகவும் கோலாகலமாகதிறந்துவைக்கப்படவுள்ளது. சர்வதேச விற்பனை நாமங்களைக் கொண்ட கடைத் தொகுதிகளில் உலகளாவிய ரீதியிலான அதிசொகுசு மற்றும் உயர்தர விற்பனை நாமங்களைக் கொண்ட உற்பத்திகளை சொப்பிங் செய்யக்கூடிய அனுபவத்தை Colombo City Centre உங்களுக்கு வழங்குகிறது.

Colombo City Centre இன் தலைமை நிறைவேற்று அதிகாரி திரு. ஆனந்த் சுந்தரம் அவர்கள் தெரிவித்த கருத்து யாதெனில், கொழும்பு நகரவாசிகள் நீண்டகாலமாக எதிர்ப்பார்த்துகாத்திருந்த சகல சர்வதேச தேவைகளையும் உள்ளடக்கியஅ னுபவத்தை வழங்ககூடிய அனைத்து அம்சங்களும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இலங்கையில் இலங்கையர்களுக்கு முதல் முறையாக சர்வதேச கடைத்தொகுதிகளில் சொப்பிங் செய்யக்கூடிய அனுபவமும், வாய்ப்பும் வழங்கப்படுவதோடு, மேலும் உலகநாடுகளின் தலைசிறந்த அறுசுவை உணவுகளை சுவைத்திடக்கூடிய உணவகங்கள், விற்பனை கூடங்கள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை முழுமையாக அனுபவித்திடக்கூடிய சகலவசதிகளையும் இது உள்ளடக்கியுள்ளதால் பொதுமக்கள் மற்றும் இங்குவரும் அனைவராளும் அதிகமாகசார்க்கப்படும் எனஅவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய, சொப்பிங் அனுபவங்கள், சர்வதேச உணவகங்கள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் போன்ற வற்றை புதிய முறையில் மாற்றுவிதமாக இலங்கையர்களுக்கு வழங்கும் ஒரேயொரு கூட்டுத்திட்டமாக கொழும்பு நகரமத்தியில் பிரம்மாண்டமாய் உருவெடுத்துவரும் Colombo City Centre கூட்டுத் திட்டத்தை சுட்டிக்காட்டமுடியும். சர்வதேசதரத்திலான உலகின் முன்னணி விற்பனை நாமங்களை உள்ளடக்கிய கடைத்தொகுதிகள் 200,000 சதுர அடிநிலப்பரப்பைக் கொண்டுள்ளது. நவீன தொழில் நுட்பத்திலான கருவிகளுக்கு Abanskw;Wk; Apple காட்சியறைகள், அழகுக்கலை உற்பத்திகளுக்கு Body Shopmy;yJSpa CeylonetPd புத்தாக்க ஆபரணங்களுக்கு Colombo Jewellery Storesmy;yJSwarovski, புதியஆடை அணிகலன்களுக்கு ALDO அல்லது Mango போன்ற பல்வேறு விற்பனை நாமங்களை இங்குகாணமுடியும். உலகளாவிய பல்வேறு உணவு-வகைகளை உள்ள டக்கிய அதிசொகுசு, பிரம்மாண்ட 'foodcourt' இங்குகாணக் கூடியதாகவுள்ளது. இதில் இலங்கை யின் உள் நாட்டு உணவுகள் உள்ளிட்ட இந்தியன், ஜப்பான்,சீனா, இந்தோனேஷியா,சிங்கப்பூர்,போர்த்துக்கள் உள்ளிட்ட உலகளாவிய பல்வேறு நாடுகளின் அறுசுவை உணவுகளை உங்களுக்குசுவைத்திடவும்,அதேபோல் சிங்கப்பூர் சிக்கன் ரைஸ்ஸின்சுவையை அறிந்திடவும் முடியும். மேலும்Three Star Michelinrikay; வல்லுநரைகொண்ட அதிசொகுசு Desert Barcld; ropical Island உணவகம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இலங்கையர்களுக்கு முதல் முறையாக அனுபவிக்கக்கூடிய அதிசொகுசு மல்டிபிளெக்ஸ் சினிமாஅரங்கம் Colombo City Centre இல் உருவாக்கப்பட்டுவருகிறது. 6 சினிமாதிரைகளின் மூலம் ஒருதினத்திற்கு 25 காட்சிகள் திரையிடப்படும்.அதேபோல் இலங்கையின் சினிமாரசிகர்கள் இதற்குமுன்னர் இலங்கையில் ஒருபோதும் அனுபவித்திராத 4k Projectionn தொழில்நுட்பத்தை Colombo City Centre திரையரங்கம் அவர்களுக்குவழங்குகிறது.

2019 முதல் காலாண்டில் நிறைவு செய்யப்படவுள்ள Colombo CityCentre கூட்டுத் திட்டமானது,முதலீட்டு வாரியத்தின் அனுமதியைப் பெற்றுள்ள இலங்கையின் முதலாவது கூட்டுத்திட்டமாகும். 180 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் உருவாக்கப்பட்டுவரும் இந்த கூட்டுத்திட்டத்தை அபான்ஸ் நிறுவனம் மற்றும் சிங்கப்பூரின் Next Story Group ஆகியவையின் கூட்டிணைவில் உருவாக்கப்பட்டுவருகிறது. சமீபகாலத்தில் இலங்கையில் மேற் கொள்ளப்பட்டுள்ள பிரம்மாண்ட முதலீட்டுத் திட்டமான இத்திட்டமானது,47 அடுக்கு மாடிகளைகொண்டு கொழும் பின் மையப்பகுதியில் மிகவும் பிரம்மாண்டமாய் உருவாக்கப்பட்டுவருகிறது. AsiaOneMagazine இனால் ஏற்பாடுசெய்யப்பட்டவிருதுவழங்கும் விழாவில் ஆசியாவின் மிகச்சிறந்த விற்பனை நாமமாகபோல்டன் குளோப்டைகர்ஸ் Brand Excellence விருதினை Colombo City Centre தனதாக்கிக்கொண்டது. அதேபோல் இதன்சிறப்பம்சங்களுக்காக சிங்கப்பூரில் இடம்பெற்ற 2017 CMO ஆசியவிருதுவழங்கும் விழாவில் உயர் மதிப்புமிக்க நாளைய எதிர்ப்பார்ப்பிற்கான கூட்டுத் திட்டத்திற்கானவிருதினையும் Colombo City Centre தனதாக்கிக்கொண்டது. இலங்கை தலைநகருக்கு உலகின் தலைசிறந்தநகரங்களில் காணக்கூடிய சௌகரியம், சொகுசு ஆகியவற்றை அளவில்லாமல் சேர்த்திடும் சர்வதேசதரத்திலான மிகச்சிறந்த கூட்டுத் திட்டமாக Colombo City Centre உறுதியாகசொல்லமுடியும்.

உலகளாவிய விசேட விற்பனைநாமங்களைக் கொண்டஷொப்பிங் மால், 700 பேருக்கும் அதிகமாக அமர்ந்து உணவு உண்ணக்கூடிய அதிசொகுசு உணவங்கள் மற்றும் 6 திரைகளைக் கொண்ட மல்டிபிளெக்ஸ் சினிமாஅரங்கம் மற்றும் 164 அறைகளைக் கொண்ட NEXT ஹோட்டல் மற்றும் 192 அதிசொகுசு அப்பார்ட்மெண்ட் ஆகியவை Colombo City Centre சொகுசையும், சௌகரியத்தையும் மிகச்சிறப்பாகஎடுத்துக்காட்டுகின்றது. இதன் முகம்பார்த்து விரிந்திருக்கும் பேய்ரே ஏறியின் அழகு, தொலைதூர இந்துசமுத்திரத்தின் ரம்யமானதோற்றம் அடிக்கடிமாறும் கொழும்புநகரத்தின் அழகு மற்றும் நீலவானம் Colombo City Centre இன் அழகைமேலும் மெருகூட்டுகிறது.




## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சுப்பையா சிவநேசன்

தோற்றம்
09.11.1966

மறைவு
29.09.2017

திதி:- புரட்டாதி மாத
பூர்வபக்க நவமி (18.09.2018)

"அப்பா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து அவலம் தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெல்லாம் மறைந்திடுமோ?
உமைக் காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகின்றோம்
எம் வீட்டுத் தலைவனே! என்றென்றும் நாம் மறவோம்
இறைவன் தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்"

இராஜவீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (CS/19284)(11,17)

குடும்பத்தினர்.




## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் துணைத் திணைக்கள தீவக கடற்தொழில் உத்தியோகத்தர்

### திரு. நித்தியானந்தன் கரன்

அவர்கள் நேற்று (17.09.2018) திங்கட்கிழமை கௌரவ மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவரது சேவை தொடர நயினை நாகபூசணி அம்பாளின் அருள் கிடைக்கவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
நாகராசா தியாகராசா (JP)
மற்றும் பிள்ளைகள் - நயினாதீவு




Galaxy Star

வெற்றி வாரம் 269 / திகதி 16.09.2018

வெற்றி இலக்கங்கள்

08 24 31 46 53

அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

2018 செப்டெம்பர் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஹசன் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.




ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | சீட்டிழுப்பு திகதி |
|---|---|
| 1501 | 17.09.2018 |

வெற்றி இலக்கங்கள்

18 38 50 59 M

அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 34, 678,176/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

செம்மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 2018.09.20 திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெற்ற டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


## அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலனசபைப் பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி எமது ஆலயப் பொதுக்கூட்டம் அருள்மிகு உரும்பிராய் பர்வத வர்த்தனி அம்மன் கோயில் பரிபாலனசபை யாப்பிற்கு அமைவாக 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் ஆலய முன் மண்டபத்தில் நடைபெற அன்னையவள் கிருபாகடாட்சம் கைகூடியுள்ளது. கூட்டத்தில் பரிசீலணைக்கு எடுத்துக்கொள்வதற்கான பிரேரணைகள் மற்றும் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்களை இதுவரை சமர்ப்பிக்காதவர்கள் எதிர்வரும் 25.09.2018 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு முன்பதாக கிடைக்கத்தக்க வகையில் செயலாளர். **உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபை** எனும் முகவரிக்குப் **பதிவுத்தபாலிலோ** அல்லது **நேரடியாகவோ** சமர்ப்பிக்கவும். குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகளோ அல்லது எழுத்து மூலமாக வழங்கப் படாத விடயங்களோ பரீசீலணைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்பதையும் தங்கள் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன்.

**உரும்பிராய் பர்வதவர்த்தனிஅம்மன் கோயில்.** **செயலாளர்.**

## சங்கத்தின் கட்டடங்களை வாடகைக்கு விடுவதற்கான விண்ணப்பம் கோரலும் இரும்புக்கடையிலுள்ள பொருள்கள் விற்பனைக்கான கேள்விக் கூறுவிலை கோரலும்

வலி. கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினது எல்லைப் பரப்பினுள் அமைந்துள்ள சங்கத்தின் சொந்தமான கட்டங்களில் சில கட்டடங்களை வாடகைக்கு விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமையால் இது தொடர்பான விண்ணப்பம் கோரப்படுகின்றது. இக் கட்டடங்கள் வாடகைக்கு பெற தேவையுள்ளோர் சங்கத்தின் வேலை நேரத்தில் ரூபா 50.00 செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று சரிவர பூர்த்தி செய்து 05.10.2018 ஆம் திகதிக்கு முன் தலைவர், வலி. கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், புத்தூர் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். பதிவுத் தபாலின் இடது பக்க மேல் மூலையில் கடை வாடகை எனக் குறிப்பிடவும். எமது சங்கத்தின் இரும்புக் கடையில் உள்ள பொருள்கள் விற்பனைக்கான கேள்விக் கோரல் கோரப்படுகின்றமையாலும் அப் பொருள்களையும் நேரில் பார்வையிட்டு அதற்கான கூறுவிலை விவரங்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இதற்கான இறுதித் திகதி 05.10.2018 ஆகும்.

வாடகை தொடர்பான விவரங்கள் நிபந்தனைகளை சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர், வலி. கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.**

## வேலணை பிரதேச சபை
## முக்கிய அறிவித்தல்
### சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய பெருவிழா - 2018

வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய பெருவிழா 13.09.2018 - 22.09.2018 வரை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இக் காலப்பகுதியில் ஆலயத்திற்கு வருகைதரும் யாத்திரிகர்கள் மற்றும் தற்காலிக வியாபாரம் செய்பவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


- துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், ஏனைய வாகனங்களை வாகனத்தரிப்பிடங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் தரித்து அவற்றுக்கான பாதுகாப்பு கட்டணங்களைச் செலுத்திப் பற்றுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- தற்காலிக வியாபார நிலையங்கள் எமது சபையால் 19.09.2018 ஆம் திகதி புதன்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வி மூலம் வழங்கப்படும். கேள்வி கோருபவர்கள் கோரப்படும் கேள்வித்தொகை முழுவதையும் சபையின் தலைமை அலுவலகத்தில் உடன் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளலாம்.
  உணவுப் பண்டங்களை கையாளும் வியாபாரிகள் தங்களது உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்கனவே பெற்ற நிரந்தர அனுமதிப் பத்திரத்தின் உறுதிப்படுத்திய பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
- வியாபார நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள் ஒவ்வொருவரினதும் தேசிய அடையாள அட்டையின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- மேலும் உற்சவ காலத்தில் பொது ஒழுங்கு விதிகளையும் சுகாதரத்தையும் பேணுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி
தவிசாளர்,
பிரதேச சபை, வேலணை.

(C7852/15/17)

# அறிவியல்

## அனுபவங்களின் களிப்பு





செந்தோழன்

“மனித குலத்தின் கடந்த கால அனுபவத்தை அவசியம் நம்ப வேண்டும் என்பதல்லாமல், புதிய நேரடி அனுபவத்தின் மூலம் மீண்டும் சோதித்துப் பார்ப்பது பயனுள்ளது என்ற கண்டுபிடிப்பின் விளைவுதான் அறிவியல்." என்கிறார் பெய்ன்மேன்.

**அறிவியல் என்றால் என்ன..?**

உண்மையில், இதற்கு விளக்கம் தேவையில்லை. அறிவியல் என்ற சொல் அதனளவிலேயே (அறிவு + இயல்)



விளக்கத்தைக் கொண்டது. அறிவு என்பது வேறு, அறிவியல் என்பது வேறு. குழந்தை ஊர்ந்து, தவழ்ந்து அதன் பிறகுதான் நடைபோடுகிறது, ஓடுகிறது. ஒவ்வொரு குழந்தையும் ஊர்ந்து, தவழ்ந்து அதன் பிறகுதான் நடக்கவும், ஓடவும் முடியும்.

**பாகுபாடு**

ஆனால், மின்சாரம் என்றால் என்ன? என்பதை ஒவ்வொரு மனிதரும் புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. ஏனெனில் அது அறிவியல். தொகுக்கப்பட்டு, கைமாற்றி வழங்கப்பட்டிருக்கும் அறிவு. அறிவைத் தொகுக்கும்போது அது ஓர் இயலாகி விடுகிறது. சமூக அறிவியல், அரசியல், அறிவியல் என்று சொல்லும்போது அதைத்தானே குறிக்கிறோம். சமூகம் தொடர்பான அறிவைத் தொகுத்துக் கொண்டு கற்கும்போது, அது சமூக அறிவியல் ஆகிவிடுகிறது. அரசியல் அறிவைத் தொகுத்துக் கொண்டு படிக்கும்போது அது அரசியல் அறிவியல் ஆகிவிடுகிறது.

அறிவைத் தொகுப்பதால் மட்டும் அறிவியலாகி விடுவதில்லை. கூடி வாழ்பவர்களுக்கும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் அது கைமாற்றிக் கொடுக்கப்பட வேண்டும். ஆதியில் மனிதன் பெற்றதெல்லாம் அறிவுதான். அது தொக்கப்பட்டு, கைமாற்றிக் கொடுக்கப்பட்டபோதே அறிவியல் உருவாகிவிட்டது. ஆதியில் அறிவின் தொகுப்பு எப்படிக் கைமாற்றிக் கொடுக்கப்பட்டிருக்க முடியும்...? உண்மையில் அது நம்பிக்கைகளின் தொகுப்பாகத்தான் உருப்பெற்றிருக்க வேண்டும்.

நம்பிக்கைகளின் தொகுப்பாக அறிவியல் மாறும்போது, அது பெரும் இடர்பாட்டையும், இடையூறையும் எதிர்கொள்கிறது. நம்பிக்கைகளின் தொகுப்பாக அது கைமாற்றித் தரப்படும்போது, அறிவீனஇயலாக மாறும் சாத்தியத்தைத் தன்னுள் எப்போதும் கொண்டிருக்கிறது.

**அறிவியல் முறை**

அறிவியல் முறை என்பதோடு இணைத்து, அறிவியல் என்பதற்கு நாம் கொண்டுள்ள வரையறை இந்தத் தேவையிலிருந்தே பிறக்கிறது. நம்பிக்கைகளின் தொகுப்பிலிருந்து அறிவியலைப் பிரித்துவிட்டால் எஞ்சியவை அனைத்தும் ஒழிந்துவிடுவதில்லை. அவை பண்பாடாகவும், மதமாகவும், இன்னபிற நம்பிக்கைகளின் தொகுப்பாகவும் வடிவங்கொள்கின்றன. மிக முக்கியமாக அன்றாட அறிவு என்ற வகையிலும் தொடர்கிறது.

அறிவியல் துறைக்குள் காலடி எடுத்து வைக்க, அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதற்கு முதலில் செய்ய வேண்டியது, அன்றாட அறிவைக் கேள்விக்குள்ளாக்குவதும் அன்றாட அறிவைக் கடந்து செல்வதும்தான். அன்றாட அறிவைக் கேள்விக்குள்ளாக்குவதன் மூலமே அன்றாட அறிவைக்கடந்து செல்ல முடியும். இரவு இவ்வளவு இருளாக இருப்பது ஏன்...? இந்தக் கேள்வி எடுத்த எடுப்பில் கேலிக்குரியதாகத் தோன்றலாம். காரணம் இரவு இருளாக இருப்பது என்பது, கேள்விக்கிடமற்ற அன்றாட அறிவு. இதைக் கேள்விக்கிடமற்ற அன்றாட அறிவு என நாம் கருதலாம்.

ஆனால் நவீன இயற்பியலைப் பொறுத்தவரை இன்னும் விடை காணமுடியாத மிகமுக்கியமான தேடல்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. அன்றாட அறிவையே நல்லறிவுப் பார்வை என்று நம்பிக் கொண்டிருக்கும் வரை இப்படிப்பட்ட கேள்விகள் எழ வாய்ப்பில்லை. ஆதியில் அன்றாட அறிவாக இருந்த அறிவியல் வளர்ந்ததே இத்தகு கேள்விகளை எழுப்பியதன் ஊடே தான் என்கின்றனர் அறிவியலாளர்கள்.

**பொதுப் புத்தி**

அன்றாட அறிவு என்பது ‘பொதுப் புத்தி’ என்ற வடிவில் நடைமுறை அனுபவங்களைப் பொதுமைப்படுத்தி உருவாகிறது.



உலகை முதன்முதலில் வலம் வந்து உலகம் உருண்டை என நிரூபித்தவர் ‘மெகல்லன்’. ஆனால், மெகல்லனின் சமகாலத்தவர்களோ உலகைச் சுற்றி வரும் கடற்பயணம் என்ற அவரது யோசனையைக் கடுமையாக எதிர்த்தார்கள். எதிர்த்தவர்களின் முதன்மையான வாதம் அன்றாட அறிவை அடிப்படையாகக் கொண்டதுதான்.

ஒரே திசையில் ஒருவர் நேர்கோட்டிலேயே பயணம் செய்தால் புறப்பட்ட இடத்தை எப்படி அடைய முடியும்...? அது எப்படிச் சாத்தியம்...? என அவர்கள் கோபத்தோடு கேள்வி எழுப்பினார்கள். அவர்களைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட கருத்தே கேலிக்குரியது. ஏனெனில் அவர்களால் அதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. ஆனால் யதார்த்தமோ மெகல்லனது கருத்துத்தான் சரி என நிரூபித்தது.

பூமி உருண்டை என்ற கருத்து இப்படித்தான் நிராகரிக்கப்பட்டது. பூமி உருண்டை என்றால் எதிரெதிர் நிலமுகடுகளில் வசிக்கும் மக்கள் தலைகீழாக அல்லவா நடக்க வேண்டியிருக்கும். கடல்நீர் கொட்டிவிடாதா என்றும் ஆட்சேபம் எழுப்பப்பட்டது. ஆனால் இன்றோ உலகம் உருண்டை என்பது பள்ளிப் பிள்ளைகளுக்குக் கூடத் தெரிந்த சர்வ சாதாரண விடயம். அன்றாட அறிவோ, பொதுப் புத்தியோ விதிக்கும் வரையறைகளுக்குள் நின்று சிந்திக்க மறுத்தவர்களே எல்லா காலகட்டத்திலும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் என்பதுதான் வரலாறு உந்திச் செ(சொ)ல்லும் உண்மை.

**சிந்தனைமரபு**

அரிஸ்டோட்டிலிய் சிந்தனைமரபு ‘கெட்டித் தட்டி’ அறிவியலின் வளர்ச்சிக்கு எதிராக மாறிய பிறகு, அன்றாட அறிவை கேள்விக்குள்ளாக்கி அதைக் கடந்து சென்றதன் மூலம்தான் பாரம்பரிய இயற்பியல் கட்டுடைத்துக் கொண்டு கிளர்ந்தெழுந்தது. ஒரு நாணயத்தைத் தரையில் உருளவிட்டால் அது ஓடி விழுந்து ஓய்ந்து விடும். வானத்தை நோக்கி விட்டெறியும் கல்லோ உயர உயரப் பறந்தாலும், கீழே விழுந்து ஓய்ந்து விடுகிறது. இதைக் காலங்காலமாக அவதானித்து வரும் மனிதர்கள், “பொருளின் இயல்பான நிலவரம் ஓய்ந்திருப்பதோ, பொருள்களுக்கு ஓய்வோ அடிப்படை நிலை" என்று முடிவு செய்தனர். இந்த அன்றாட அறிவைக் கேள்விக்குள்ளாக்கியதே கோப்பர்நிக்கஸ், கலிலியோ, நியூட்டன் பாரம்பரியம்.

**முறையியல் கோட்பாடு**

“விண்மீன்கள் நிரம்பிய வானை, நீண்ட கால இடைவெளிகளில் நோக்கி ஆய்வு செய்தபோது வெளிப்படையாகத் தெரிந்த கோள்களின் இயக்கம் மிகவும் சிக்கலான தாக இருந்தது. கோள்கள் முதலில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி நகர்ந்தன. பின்னர் திடீரென நகர்வை நிறுத்திப் பின்வாங்கின. மீண்டும் அவை கிழக்கு நோக்கி நகரத் தொடங்கின. கோள்களின் தனிச்சிறப்பான இந்தச் சுழல் இயக்கம், வெறும் தோற்றப் பிழை மட்டுமே. சூரியனைச் சுற்றி வரும் பூமியில் இருந்து அவற்றைப் பார்க்கிறோம் என்பதில் இருந்து உருவாகும் தோற்றப் பிழை. இந்தப் புலப்பாட்டைச் சரியாகப் புரிந்து கொண்டு, அடிப்படையானதொரு முறையியல் கோட்பாட்டை இயற்கை ஆய்வுத் துறைக்கு அறிமுகப்படுத்தியவர் கோப்பர்நிக்கஸ்தான்.

நாம் நேரடியாக நோக்குபவற்றிலிருந்து மாறுபட்டதாக உலகம் இருக்கலாம். தற்சான்றாகத் தோன்றுவதன் பின்னணியில் மறைந்துள்ள புலப்பாட்டின் உண்மைத் தன்மையை நிறுவுவது அறிவியலின் கடமை என்பதுதான் அந்த முறையியல் கோட்பாடு. உலகின் சூரிய மையக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்த இந்த கோட்பாடுதான் நவீன இயற்கை அறிவியல் முழுமைக்கும் அடிப்படையாக அமைந்தது." என்கிறார் அறிவியல்லாளர் ‘காமரோவ்’.

**காரண காரிய ஆய்வு**

அதைத் தொடர்ந்து “அறிவியல்பூர்வமான காரண காரிய ஆய்வைக் கலிலியோ கண்டுபிடித்துப் பயன்படுத்தியதானது, மனித சிந்தனையின் வரலாற்றில் மிகமுக்கியமான சாதனைகளில் ஒன்று. அதுதான், இயற்பியலின் உண்மையான தொடக்கத்தைக் குறிக்கிறது; உடனடியாக நோக்கியறிந்தவற்றின் அடிப்படையிலான உள்ளுணர்வு சார்ந்த முடிவுகள் எப்போதுமே நம்பத்தகுந்தவை அல்ல. சில நேரங்களில் அவை தவறான துப்புகளுக்கு இட்டுச்சென்றுவிடும் என்பதை எமக்குக் கற்பித்தது கலிலியோவின் கண்டுபிடிப்புதான்" என்கிறார் ஐன்ஸ்டீன்.

பாரம்பரிய இயற்பியல் உருவானதும் இதன் அடிப்படையில்தான். ஓய்வல்ல இயக்கமே அறுதியானது என்ற பேரண்ட உண்மையை மனித இனம் விளங்கிக் கொண்டதே இந்தப் பாரம்பரியத்தின் அழிக்க முடியாத பெருமை.

**சார்பியல்**

“முரண்பாடுகள் முட்டிமோதுதல், அளவு மாற்றமடைதல், பண்பு மாற்றமடைதல் ஒரு நிலையை மறுத்துப் புதிய நிலை உருவாதல், அந்த நிலையை மறுத்து வேறு ஒரு புதிய நிலை உருவாதல் எனப் பொருள்களின் ஒட்டுமொத்த இயக்கத்தை இயற்கையின் இயக்க இயலை அறிவின் இயலில் பிரதிபலித்த பாரம்பரியம் இது. வெளியும் அறுதியானதல்ல, காலமும் அறுதியானதல்ல. ஒளியின் வேகமே பிரபஞ்சத்தின் வரம்பு வேகம். அறிவியலின் விதிகள் எப்போதும் மாறுவதில்லை" என்ற ஐன்ஸ்டீனின் சார்பியல் வழியாகப் பயணித்து நவீன இயற்பியலின் உச்சமாக குவாண்டம் இயங்கியலை நாம் அடைந்ததும் அன்றாட அறிவைக் கேள்விக்குள்ளாக்கியதன் மூலமே.

தவிர, பருப்பொருளின் சாரமான ‘நிறைக்கு அழிவில்லை’ என்ற விதி எப்போது நிறுவப்பட்டதோ அப்போதுதான் ‘மூலக்கூறு நிலைமாற்றங்களின் அறிவியலான’ வேதியியல் முறையான அறிவியல் புலமாக நிலைமாற்றம் அடைந்தது எனலாம்.

## சட்டவிரோத...

முல்லைத்தீவுக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு முன்பாகத் திரண்ட மீனவர்கள் தமது வாய்களில் கருப்புத் துணி கட்டி அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

கடந்த மாதம் முல்லைத்தீவுக்கு வந்த கொழும்பு மீன்பிடி அமைச்சர் விஜிதமுனி சொய்ஸா சட்டவிரோத மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்படாது என்று கூறியிருந்தார். ஆனால் தற்போது 25 மீனவர்களுக்கு நிபந்தனையுடன் சுருக்குவலையைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தமது கோரிக்கை அடங்கிய மனுவைக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கடற்றொழில் நீரியல்வளத் துறை அமைச்சர் விஜிதமுனி சொய்ஸா ஆகியோருக்கான மனுக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவிடம் ஒப்படைத்தனர்.

இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் எதிர்க்கட்சித் தலைவரையும், கொழும்பு மீன்பிடி அமைச்சரையும் சந்திக்க ஏற்பாடு செய்து தரப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தரசா போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார்.

எனினும் இந்தச் சந்திப்புக்களில் தமக்கு நம்பிக்கை அற்றுப் போய்விட்டது என்று மீனவர்கள் சுட்டிக்காட்டினர்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சட்டவிரோதமாகத் தொழில் செய்வதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கடந்த மாதம் 2ஆம் திகதி மீனவர்களால் போராட்டம் நடத்தப்பட்டது. கொழும்பு கடற்றொழில் அமைச்சரும், அமைச்சின் அதிகாரிகளும் மீனவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சட்டத்துக்குப் புறம்பாகக் கடற்றொழில் செய்வது தடை செய்யப்படும் என்று அமைச்சர் வழங்கிய உறுதிமொழியை அடுத்து மீனவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

இந்த நிலையில் சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரை தொழில் செய்யலாம், மாத்தளன் கடற்பரப்பில் மட்டுமே தொழில் செய்யமுடியும், கடலில் இருந்து 10 மைல் தூரத்தில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்ற நிபந்தனைகளுடன் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-21.8)

## முல்லையில்...

களும் மேற்கொள்ளக் கூடாது என்றும் தடை விதித்துள்ளது.

அக்கரைவெளியில் உள்ள இந்தக் காணிகள் முல்லைத்தீவு, கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலகத்துக்குட்ட கொக்குத்தொடுவாய் மக்களுக்குச் சொந்தமானவை. கடந்த வெள்ளிக்கிழமை அந்தக் காணிகளைத் துப்புரவாக்கும் நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டனர். அந்த இடத்துக்குச் சென்ற மகாவலி அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த 4 அதிகாரிகள், மக்களின் செயற்பாட்டுக்குத் தடை விதித்தனர்.

அந்தக் காணிகள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குரியவை என்றும், அங்கு துப்புரவாக்கல் உட்பட எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளக்கூடாது என்றும் மக்களுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

பல நூற்றுக்கணக்கான குடும்பங்களில் வயல்நிலங்களைக் கொண்டது அக்கரைவெளி. போரால் 35ஆண்டுகளுக்கு முன்னர் அந்தப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேறியிருந்தனர். அவர்களில் சிலரிடம் 1925ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அறுதி உறுதிகளும், பொமிட்களும் உள்ளன. சிலர் போரால் அவற்றைத் தொலைத்துள்ளனர். மக்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகள் தற்போது காடுகளாகியுள்ளன. அவற்றைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையிலேயே கடந்த வாரம் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று அவர்கள் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை அக்கரைவெளிக்கு வந்து நிலைமைகள் ஆராயப்படும் என்று கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர் மக்களிடம் தெரிவித்துள்ளார்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஆதிக்கம் எல்லைக் கிராமங்களில் குறிப்பாக கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள எல்லைக் கிராமங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதைக் கட்டுப்படுத்தி தங்களின் பூர்வீகக் காணிகளை மகவாலி அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து மீட்டுத் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ரி3)

## மெத்தைக்குள்...

ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட- கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. சந்தேகத்தில் 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியில் உள்ள புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று நண்பகல் கிளிநொச்சி, அம்பாள்குளத்தில் மெத்தைகள் ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்றை மறித்துப் பொலிஸார் சோதனையிட்டனர். மெத்தைக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அந்தப் பகுதியில் சோதனை மேற்கொண்டபோது, அங்கு தரித்துநின்ற முச்சக்கர வண்டியில் இருந்தும் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விசுவமடுப் பகுதியில் இருந்து முச்சக்கர வண்டியில் கடத்திவரப்பட்ட இந்தக் கஞ்சா கிளிநொச்சியில் வைத்து மெத்தைக்குள் சூட்சுமாக மறைக்கப்பட்டன. இவை பொலன்னறுவைக்குக் கடத்தப்படவிருந்தன என்று தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் கிளிநொச்சி, அம்பாள்குளத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் குருணாகலைச் சேர்ந்தவர் என்றும், மற்றையவர் கண்டியைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இரு வாகனங்களில் இருந்தும் தலா இரண்டு கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-35.214.6.222)

## கடலுக்கு...

கூறப்படுகின்றது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியவில் வழமை போன்று இவர் வெளிக்கள இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்றார். நேற்று மீன்பிடிக்கச் சென்றவர்கள் கடலில் படகு ஒன்றும், வலைகளும் அநாதரவாகக் கிடப்பதைக் கண்டதை அடுத்தே மீனவர் காணாமல் போன விடயம் தெரியவந்தது.

இது தொடர்பாகத் தலைமன்னார் பொலிஸாருக்கும் கடற்படையினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது. கடற்படையினரும், பிரதேச மீனவர்களும் இணைந்து நேற்றுத் தேடுதல் நடத்தினர். எனினும் மீனவர் கண்டுபிடிக்கப்படவில்லை. தேடுதல் தொடர்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-60)

## 134 பேருக்கு...

வழங்கப்பட்டன.

73 பயிலுநர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 42 சாரதிகள், கைதடி முதியோர் இல்லப் பராமரிப்பாளர்கள் 19 பேர் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

நிர்வாகப் பிரதிப் பிரதம செயலாளர் திருமதி சரஸ்வதி மேகநாதன் தலைமையில் யாழ்ப்பாணப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன, முதலமைச்சர் அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரன், சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அ.சிவபாத சுந்தரன் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தாவது:

அரச வேலை செய்வோருக்கு வழங்கப்படும் ஊதியம் துன்பப்பட்ட மக்களின் வரிப்பணத்திலேயே வழங்கப்படுகின்றது. அது எனது பணமோ செயலாளர்களின் பணமோ அல்லது அரசியல்வாதிகளின் பணமோ கிடையாது. மக்களின் பணத்தில் சம்பளம் பெறும் எமக்கு ஒரு கடமை இருக்கின்றது. அவர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கவேண்டும்.

மீண்டும் ஒரு போர் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். வடக்கு மாகாணத்தில் அரச வேலைகளுக்குப் பொருத்தமானவர்களை தெரிவு செய்வது மிகவும் கடினமானது. போர் நடைபெற்ற காலத்தில் படித்த பல இளைஞர் யுவதிகள் அரச வேலைகளில் உள்வாங்கப்படும்போது தமது சான்றிதழ்களை, தகுதிகளை உறுதிப்படுத்துவதில் பெரும் சிக்கல்களை எதிர்கொள்கின்றமையே அதற்குக் காரணம். போர் காரணமாக அவர்களின் கல்வி நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

போர்க் காலத்திலே பாடசாலைகளிலும் வைத்தியசாலைகளிலும் பலர் ஊதியம் இல்லாது தொண்டர்களாகக் கடமை செய்திருக்கின்றார்கள். அவர்களுக்குக் கட்டாயம் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவேண்டும். அவ்வாறு சேவை செய்தவர்களுக்கு நியமனம் வழங்குவது என மத்திய அரசு முடிவு செய்து இரு முறை நியமனங்களை வழங்கியது. ஆனால் மீண்டும் பலர் வருகின்றார்கள். நாங்களும் தொண்டர் ஆசிரியர்கள் என்கின்றனர். எங்கிருந்து வருகின்றார்கள், எப்படி வருகின்றார்கள் என்பது புரியாத விடயமாக இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புதவற்கு அதிகாரிகள் முழு முயற்சி எடுத்து வருகின்றார்கள். அதற்கான அனுமதியை வழங்குவது எனது கடமை அதை முழுமையாக நான் செய்ய தயாராக இருக்கின்றேன் - என்றார். (ற-8,105)

## இ.போ.ச. இன்று...

படவுள்ளனர். அவர்களுடைய இந்தப் பணிப்புறக்கணிப்பால் பொதுப் போக்குவரத்துச் சேவை பெரும் பாதிப்பைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது..

அரச பேருந்துச் சபை ஊழியர்கள் மீது வவுனியா தனியார் பேருந்து நிலையத்தில் தாக்குதல் நடந்தப்படுவதைக் கண்டித்தும் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுமே அரச பேருந்துச் சாரதிகள், நடத்துநர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா, பேருந்து நிலையத்தில் அரச பேருந்துச் சாரதி, நடத்துநருக்கும் தனியார் பேருந்துச் சாரதி, நடத்துநருக்கும் இடையே நேற்றுமுன்தினம் மாலை முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதில் அரச பேருந்து நடத்துநர் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களாகக் கூறப்படும் தனியார் பேருந்துச் சாரதியும், நடத்துநர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்துடன் தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவரே தொடர்புபட்டுள்ளார் என்றும், அந்த உரிமையாளரைக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் வவுனியா சாலை அரச பேருந்து ஊழியர்கள் நேற்றுச் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். வெளிமாவட்ட அரச பேருந்துகள் நேற்று சேவையில் ஈடுபட்டன. அதன் தொடர்ச்சியாகவே இன்று வடக்கு மாகாணம் முழுவதும் அரச பேருந்துச் சாரதிகள், நடத்துநர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். (உ-21.8)

## ஈழத்தில்...

யாழ்ப்பாணம் செப் 18

தமிழகத்தில் தமிழ் அழிந்து கொண்டிருந்தாலும் தமிழீழத்தில் தமிழ் வளர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. இதனைப் பார்க்கும் போது பெருமையாக இருக்கிறது எனறு தமிழக கலைஞர் கு.புகழேந்தி தெரிவித்தார். இலங்கையிலுள்ள 15 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் ஒன்றிணைந்து நடத்தும் மாபெரும் தமிழ் விழா பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

தமிழீழ மண்ணில் எனக்குப் பல அனுபவங்கள் உள்ளன. நான் இங்கு பல தடவைகள்









வந்துள்ளேன். நாம் ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் உள்ளோம். கடந்த காலத்தில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளோம். இந்த நிகழ்வு தமிழ் இனத்தின் வரலாற்றையும், புகழ்களையும் வெளிக்கொண்டுவரும் நிகழ்வாக அமைந்துள்ளது. தமிழர்க் கலை என்பது உலகின் மூத்த குடிகளின் கலையாகும். நாங்கள் பலவற்றை இழந்து விட்டோம். அதுமட்டுமல்லாது இருப்பதையும் இழந்து கொண்டிருக்கின்றோம். தமிழர் கலையை மீட்டெடுக்கப் போராடிக் கொண்டிருக்கின்றோம். தமிழ் நாட்டில் தமிழ் அழிந்து கொண்டிருக்கின்றது. ஆனால் தமிழீழத்திலே தமிழ் வளர்ந்து கொண்டிருக்கின்றது. அதற்காக முதலில் தமிழீழ மக்களுக்கு நன்றிகளைக் கூறவேண்டும்.

உலகெங்கும் தமிழ் பரவியுள்ளது. அதற்கு மூல காரணம் ஈழத்துத் தமிழர்களே. ஏனெனில் அவர்கள் கடந்த காலங்களில் இடப்பெயர்வுகளைச் சந்தித்து உலகின் பல நாடுகளில் வாழ்கின்றனர். இதனால் உலகம் முழுவதும் தமிழ் பரவியுள்ளது. அதுமட்டுமல்லாது தமிழரின் கலை, கலாசாரமும் பரவியுள்ளது. இதன் விளைவாக தமிழரின் வாழ்வியல் அரசியல் அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நாம் இன்று தோற்றிருக்கலாம் பின்னடைவுகளைச் சந்தித்திருக்கலாம். இவை அனைத்தும் நாம் முன்னோக்கிப் பயணிப்பதற்கான பாடமாகவே நாங்கள் பார்க்க வேண்டும். நான் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கிளிநொச்சி மாவடடத்துக்கு வந்திருந்தேன். அங்கு எத்தனையோ நிகழ்வுகள் உணர்வு பூர்வமாகவும் இடம்பெற்றிருந்தது. நான் இப்போதும் அதே உணர்வினைப் பார்க்கின்றேன் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ.விக்னேஸ்வரன், தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமனற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் சயந்தன், கஜதீபன் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாஉள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (உ-21.8)

## மகாஜனாவின் வீரர் தடை செய்யப்பட்ட விவகாரத்தில்

# மேன்முறையீட்டு சபையினரின் முடிவு சரியானது என்று வெளியானது தீர்ப்பு!

**யாழ்ப்பாணம், செப். 18**

**வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மாணவன் மேன்முறையீட்டு சபையால் இடைநிறுத்தம் செய்யப்பட்ட விவகாரத்தில் மேன்முறையீட்டு சபையினர் எடுத்த முடிவு சரியானது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது.**

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் கடந்த சில வாரங்களுக்குமுன்னர்நடைபெற்றது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மாணவனொருவர் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரின் மேன்முறையீட்டு சபையால் தடைசெய்யப்பட்டார். அவர் அணியில் இருந்த காரணத்தால் மகாஜனாவின் அஞ்சலோட்ட அணியும் தடை செய்யப்பட்டது.

"குறித்த மாணவன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாததால் அவரைத் தொடர்ந்தும் பாடசாலை மாணவனாகக் கருத முடியாது. எனவே பாடசாலை மாணவன் அல்லாத பட்சத்தில் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் அவர் கலந்துகொள்வதை அனுமதிக்க முடியாது" என்பது மேன்முறையீட்டு சபையினரின் வாதம்.

ஆனால் இந்த விளக்கத்தை ஏற்க முடியாத தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாடியது. "குறித்த மாணவன் பரீட்சை முடிவை மறுபரிசீலனை செய்யும் முறைக்கு விண்ணப்பித்துள்ளார். மறுபரிசீலனையில் அவர் சித்தியடைந்தால் அவரின் பாடசாலை வாழ்க்கை தொடரும். எனவே அவரின் பாடசாலை வாழ்க்கை முடிந்துவிட்டது என்று உறுதியாகத் தெரிவிக்க முடியாது" என்பது மகாஜனக் கல்லூரியின் விவாதம்.

மனித உரிமைகள் ஆணைக்குழு தனக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து. இது தொடர்பான விசாரணையை வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் மற்றும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபர், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் போன்றோருடன் நடத்தியது. நான்கு கேள்விகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் கல்வித் திணைக்களத்திடம் கேட்கப்பட்டது.

கேள்வி: கல்விப் பொதுத் தராதரப் சாதாரண தரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவையாகத் தோற்றி சித்தியடையாத மாணவனை உயர்தரத்தில் கற்பதற்கு உள்வாங்கலாமா?

பதில்: அடிப்படைத் தகைமைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டு கல்விப் பொதுத் தராதரப் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தமை அடையாதமை என்பவற்றை கருத்தில் கொள்ளாது 2017ஆம் ஆண்டு சுற்று நிரூபத்திற்கமைய கல்வி கற்க முடியும். ஆனால் அதற்கென ஒதுக்கப்பட்ட பாடசாலையில் கற்றல் தொடர வேண்டும். இதற்கமைய குறித்த மாணவன் ஒதுக்கப்பட்ட பாடசாலையில் கல்வி கற்காமையால் பாடசாலை மாணவன் அல்ல.

கேள்வி : குறித்த மாணவன் வடமாகாண போட்டியில் பங்குபற்ற முடியுமா?

பதில் : ஒரு மாணவன் பாடசாலை மாணவன் என ஏற்றுக் கொள்ளக்கூடிய கால வரையறைக்குள் ஏதேனும் போட்டி ஒன்றிற்குத் தேவையான ஏனைய பொதுத் தகைமைகளைக் கொண்டிருந்தால் அந்தப் பாடசாலை தொடர்பாக போட்டியில் பங்குபற்ற முடியும். ஆனால் குறித்த மாணவன் உயர்தரம் கற்பதற்குரிய தகுதி இல்லாமல் உள்ளார். மேலும் குறித்த மாணவன் பாடசாலை கோட்ட வலய போட்டிகளில் பங்கு பற்றியிருந்தாலும் ஏதாவது முறைப்பாடு அல்லது எதிர்ப்பு முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதாவது மாகாண மட்ட போட்டியில் மேற்குறித்த விடயம் தெரியவருமானால் அந்தச் சந்தர்ப்பத்தில் இருந்து மிகுதி போட்டிகளில் இருந்து இடைநிறுத்தலாம் அல்லது கைவிட வேண்டி ஏற்படலாம்.

கேள்வி : மறுபரிசீலனை முடிவுகள் வரும் வரை குறித்த மாணவனை பாடசாலையில் வைத்திருக்க முடியுமா?

பதில் : குறித்த மாணவனின் கல்விப் பொதுத் தராதரப் சாதாரணதரப் பரீட்சையின் முதல் தடவை அல்லது இரண்டாவது தடவை பெறுபேறுக்களின் படி தேவையான குறைந்த பட்ச தகைமையேனும் பூர்த்தி செய்யாமையால் இதுவும் பொருத்தமற்றதாகும்.

கேள்வி : மறுபரிசீலனை கிடைக்கும் வரை குறித்த மாணவனை குறித்த போட்டியில் இருந்து இடைநிறுத்த முடியுமா ?

பதில் : ஒரு மாணவன் கல்விப் பொதுத் தராதரப் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி குறைந்தபட்ச தகைமையோடு கல்விப் பொதுத் தராதர உயர்தரத்திற்கு வருகை தந்து மீள் பரிசீலனை விண்ணப்பித்திருந்தால் மீள் பரிசீலனை கிடைக்கும் வரை குறித்த மாணவனை பாடசாலை மாணவனாக கருதலாம். அவர் மீள் பரிசீலனை பெறுபேற்றின் அடிப்படையில் தேவையான தகைமையை பெற்றால் பாடசாலையின் முழுக் காலமும் பாடசாலையில் கல்வி கற்கலாம் ஆனால் இங்கு அவ்விடயமும் பொருத்தமற்றதாகும்.

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்குக் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பதில்களை அடிப்படையாகக் கொண்டு. வடமாகாண கல்வி திணைகளத்தினால் நியமிக்கப்பட்ட மேன்முறையீட்டுக் குழு மேற்கொண்ட தீர்மானம் சரி என மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

அத்துடன். வடமாகாண கல்வி திணைக்கத்தால் நடத்தப்பட்ட வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரின் பரிசளிப்பு நிகழ்விலும் மகாஜனக் கல்லூரியின் மாணவர்கள் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் வடமாகாணத் தடகளத் தொடரின் இறுதிநாளின்போது விருந்தினர்களை வரவேற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மகாஜனவின் நடனக்குழு விருந்தினர்களின் வருகை தாமதமமானதை அடுத்து நிகழ்வைப் புறக்கணித்திருந்தது. இந்த விவகாரங்களிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றிலும் மகாஜனா செய்தது தவறு என்று கருதப்பட்டால் அதிபருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வாய்ப்புள்ளது. (ம-422)

# இளந்தளிர் சம்பியனானது

யாழ்ப்பாணம், செப். 18

வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் வட்டக்கச்சி இளந்தளிர் அணி சம்பியனானது.

வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழக அணிக்கான முதலாவது கோலைப் பதிவுசெய்தார் பாமிலன். முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது இளந்தளிர் அணி.

இரண்டாம் பாதியில் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் உருத்திரபுரம் அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் தனுசன். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி.

சிறந்த கோல் காப்பாளராக வட்டக்கச்சி இளந்தளிர் அணியின் கோல் காப்பாளர் சு.றஜீவன், ஆட்ட நாயகனாக உருத்திபுரம் விளையாட்டுக் கழக அணியின் யு.தனுசன், தொடராட்ட நாயகனாக வட்டக்கச்சி இளந்தளிர் அணியின் எட்வின் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)





# குமரநகர் விளையாட்டுக் கழகம் தாச்சித் தொடரில் சம்பியனானது

யாழ்ப்பாணம், செப். 18

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து தென்மராட்சி ரீதியாக நடத்திய தாச்சித் தொடரில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டு கழக அணி சம்பியனாது.

விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவற்குழி காந்தி விளையாட்டுக் கழகம் மோதியது. முதற் பாதியின் முடிவில் 4:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது காந்தி விளையாட்டுக் கழகம். இரண்டாம் பாதியில் ஆதிக்கம் செலுத்திய குமரநகர் அணி முடிவில் 8:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுக் கிண்ணம் வென்றது. (ம-23)



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப்.18

**விநாயகர் வி.க. கால்பந்தாட்டம்**

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் தென்மராட்சி ரீதியிலான தாச்சித் தொடரின் ஆட்டங்கள் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் ஆண்களுக்கான காலிறுதியாட்டத்தில் கைதடி நவபுரம் நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழக ஏ அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி சசநி கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் வடக்கின் கில்லாடி வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முத்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# எறிபந்தாட்ட இறுதியில் யூனியன் - பாலிக வித்தி.





யாழ்ப்பாணம், செப். 18

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய ரீதியிலான எறிபந்தாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சிறிமாவோ பாலிக மகா வித்தியாலயம் இன்று மோதவுள்ளது.

இரத்தினபுரி எமிலிப்பிட்டிய அரச தலைவர் கல்லூரி மைதானத்தில் இந்தத் தொடர் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற 20 வயதுப்பிரிவு பெண்களிற்கான அரையிறுதியாட்டமொன்றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து கேகாலை சென். ஜோசப் கல்லூரி அணி மோதியது. முதலாவது செற்றில் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றியது. இரண்டாவது செற்றும் 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யூனியனின் வசமானதை அடுத்து 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது தெல்லிப்பழை யூனியன்.

பிறிதொரு அரையிறுதி ஆட்டத்தில் கொழும்பு சிறிமாவோ பாலிக மகா வித்தியாலய அணியை எதிர்த்து வெல்லவாய குமாரதாஸ மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் கொழும்பு சிறிமாவோ பாலிக மகா வித்தியாலய அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. (ம-422)

# ஹொங்கொங் - இந்தியா இன்று எதிர்த்து மோதல்

ஆசியக் கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஹொங்கொங் மற்றும் இந்திய அணிகள் மோதவுள்ளன.

இந்தத் தொடரில் ஆறு அணிகள் பங்கெடுக்கின்றன. தலா மூன்று அணிகள் வீதம் ஏ, பி என்று இரண்டு பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா ஒவ்வொரு முறை மோத வேண்டும். ஹொங்கொங் பாகிஸ்தானுக்கு எதிராக ஏற்கனவே தோல்வியடைந்ததால் இந்தியாவுக்கு எதிராக இன்று தோற்றால் அந்த அணி வெளியேற்றப்படும். அதேநேரம் நாளை நடைபெறவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்துக்காக ஹொங்கொங்குக்கு எதிரான ஆட்டத்தை இந்திய அணி சிறந்த முறையில் பயன்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# றைட்ரோன் அணி அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 18

ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் றைட்ரோன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. றைட்ரோன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. கோகுலன் 45 ஓட்டங்களையும், சிவராஜ் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அஜித், டெஸ்மன் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், சேந்திரன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

134 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றைட்ரோன் அணி 18.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. உதயசாந் ஆட்டம் இழக்காமல் 48 ஓட்டங்களையும், மணாளன் 17 ஓட்டங்களையும், விஸ்வா 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிவராஜ் 3 இலக்குகளை வீழ்த்தினார். சிறந்த வீரனாக றைட்ரோன் அணியின் உதயசாந் தெரிவானார். (ம-23)



# ஆஸியை வீழ்த்துவதற்கு வலுநிலை மிகஅவசியம்

## இந்தியாவை எச்சரித்தார் சப்பல்

"ஆஸ்திரேலியாவை ஆஸ்திரேலிய மண்ணில் வைத்து எதிர்கொள்வதற்கு வலுவான துடுப்பாட்ட வரிசையுடன்" வாருங்கள் என்று இந்தியாவை எச்சரித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான இயன் சப்பல்.

இந்திய அணி எதிர்வரும் நவம்பர் மாதம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று விளையாடவுள்ளது. 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர், 3 ஆட்டங்கள் கொண்ட ரி20, 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் என்பன இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ளன. இந்தத் தொடர் தொடர்பில் பலரும் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தி வரும் நிலையில் இவ்வாறு தெரிவித்தார் இயன் சப்பல். ஆஸ்திரேலிய ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் சப்பல். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1:4 என்ற அடிப்படையில் இழந்த இந்திய அணி தனது மதிப்பை, மிகவும் எதிர்பார்க்கப்படும் ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் மீட்டெடுக்க நினைக்கக்கூடும். ஆனால் அதற்கு முன்னர் இந்திய அணி துடுப்பாட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைவது அவசியம். சிறந்த இரு வீரர்களான சிமித், வோர்ணர் ஆகியோர் விளையாடாததால் ஆஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வரிசையும் கேள்விக்குறியுடன்தான் உள்ளது. ஆனால், பந்துவீச்சு தாக்குதல் இன்னும் வலுவாகவே உள்ளது. மிட்சல் ஸ்ராக், ஜோஸ் ஹசில்வூட், பாட்ரிக் கம்மின்ஸ், லையன் ஆகியோர் உடல்ரீதியாகத் தகுதிபெற்றுவிட்டால், இந்திய அணிக்கு சவால் நிறைந்த தொடராக அமைந்துவிடும்.

இங்கிலாந்தில் இந்திய அணித் தலைவர் கோக்லியைத் தவிர்த்து மற்ற வீரர்களுக்கு அந்த நாட்டு வீரர்களின் பந்து வீச்சை எதிர்கொள்வது மிகவும் சிரமமாக இருந்தது. காற்றில் ஸ்விங் ஆகும் பந்துகள் தரையில் பட்டவுடன் வேறுவிதமாகத் திரும்பும். இதேபோன்றுதான் ஆஸ்திரேலியாவிலும் இருக்கும். ஆனால் கூடுதலாக பந்துகள் மேலெழும்பும். ஆஸ்திரேலிய அணியின் திறமையை குறைத்துமதிப்பிட்டு இந்திய அணி டெஸ்ட் தொடரை எதிர் கொண்டால், எங்கள் அணி கொடுக்கும் தண்டனையை இந்தியா ஏற்கவேண்டியது இருக்கும்.

புஜாராவைத் தவிர மற்ற எந்த வீரர்களுமே சுழற்பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சு பாதையை கணித்து விளையாட தங்களைத் தயார் செய்து கொள்ளவில்லை. பந்து வீச்சாளர்கள் அற்புதமாக செயல்பட்ட நிலையில் மோசமான துடுப்பாட்டத்தால் இங்கிலாந்துக்கு எதிரான தொடரை இழந்து வாய்ப்பை வீணடித்துள்ளது இந்திய அணி. ஆதலால் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரின்போது இந்திய அணி கூடுதல் பலத்துடன் வரவேண்டியது அவசியம் - என்றார். (ம)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**வேலுப்பிள்ளை விவேகானந்தன்**



பிறப்பு 23.02.1945 — இறப்பு 18.08.2010

தந்தையாய் - நல் ஆசானாய் எங்களை
வாழவைத்த தெய்வமாய் நிற்கும் நீங்கள்
எம்மைவிட்டு பிரிந்துநாய்
நாம் இன்னும் உணரவில்லை.
என்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டுகின்றோம்.

அருந்தியார்வளவு,
அல்வாய் மேற்கு, திக்கம்.

சசி, நிரஞ்சா,
முகுந்தன் மற்றும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லையா இரத்தினசிங்கம்



குமரக்கோட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இரத்தினசிங்கம் கடந்த (16.09.2018) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்புமகனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும் கமலநாதன், சிதம்பரநாதன் (சந்திரன்), கலாஜினி (சுவிஸ்), மாலினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுபதா, சுதர்சன், சுகந்தா, அர்ச்சனா, அனோஜன், அஜித்தன், அஸ்வினன், நிரோஜன், ஆருஜா, தக்ஷிகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.09.2018) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில், இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமரகோட்டம்
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

## SPOKEN ENGLISH
### WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், பல்கலை புதுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள் மற்றும் தொழில்புரிவோருக்கான

**3 மாத சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 29.09.2018 சனி**

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

வாரநாள் (செவ்வாய், வியாழன்) பயிற்சி ஆரம்பம் 25.09.2018
பிரிவு1: 08-10 பிரிவு2: 10-12 பிரிவு3: 03-05


கதைத்தலுக்கு தேவையான ஒழுங்கையான ஆங்கிலம் கற்பிக்கப்படும்

இதுவரை பதிவுசெய்யாதோர் 22.09.2018 வரை பதிவுசெய்து வகுப்பிற்கு சமுகமளிக்கமுடியும்

SAAMSON
403, வெலிங்டன் சந்தி,
பெருமாள் கோயிலடி,
யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

## மரண அறிவித்தல்

### கந்தையா சுந்தரலிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரலிங்கம் நேற்று (17.09.2018) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம் தம்பதியரின் அன்புமகனும் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் சுபரூபி, சுபதர்சன் ஆகியோரின் அன்புத்தந்தையும் குகராசா, சிவராசா (சுவிஸ்) காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, தியாகலிங்கம் ஆகியோரின் மூத்தசகோதரரும் வேணுகானன், தர்ஷாயினி ஆகியோரின் அன்புமாமனும் நயனகேஷனின் செல்லப்பேரனும் நவரத்தினம், மனோகரதேவி, குணசேகரி, சாந்தினி (சுவிஸ்), லோகேஸ்வரி, அருமைநாயகம் காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரி, தவராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.09.2018) புதன் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுருலேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
021 568 6868

தகவல் :
குடும்பத்தினர்.

# தெல்லிப்பழை யூனியன் இறுதிக்குச் சென்றது



யாழ்ப்பாணம், செப். 18

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரத்தினபுரி எமிலிப்பிட்டிய அரச தலைவர் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 25:12, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற கோல் கணக்கில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி மகா வித்தியாலய அணி மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மோதவுள்ளது. (ம-422)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.